₹10


fmpb

# அறைகூவல்

Volume 52 Issue 1 January 2022

**நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.**

(எரேமியா 29:11)



*இந்தப் புத்தாண்டில், கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருங்கள்;*
*அவர் உங்கள் இருதயத்தின் வேண்டுதல்களை உங்களுக்கு அருளிச்செய்வார்.*

*2022 – இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!*

# ஆரம்ப வரிகள்...

## 2022-ல் தேவனின் உன்னத திட்டம்!

2022-ம் ஆண்டின் நோக்க வசனமாகிய எரேமியா 29:11, இப்புதிய ஆண்டில் நமக்கு ஒரு பெரிய உற்சாகத்தை அளிப்பது மட்டுமல்லாமல், தேவனோடுள்ள நமது உறவைச் சரி செய்துகொண்டு, அவரில் வளர்ச்சியடைந்து, அவர் நம்மேல் கொண்டுள்ள திட்டத்தை அப்பியாசப்படுத்துவது பற்றியும் கூறுகிறது. இவ்வசனத்தின் பின்னணியம் மிகவும் சுவாரஸ்யமானதாகும். அதாவது, யூதஜனங்கள் பாபிலோனில் 70 ஆண்டுகளாகச் சிறையிருப்பில் வைக்கப்படுகிற காலங்களில், அவர்கள் பொறுமையோடு வீடுகளைக்கட்டி, குழந்தைகளைப் பெற்று, தேவனுக்குப் பயந்து உண்மையான அன்புடன் தேவனோடுள்ள உறவைப் புதுப்பித்துக்கொள்ளும்போது, தேவன் அவர்களைப் பாபிலோனிலிருந்து மீட்டு, மீண்டும் இஸ்ரவேல் தேசத்திற்குத் திருப்பிக்கொண்டு வருவார் என்பதோடு, அவர்கள் மீதான தமது திட்டத்தையும் நிறைவேற்றுவார் என்பதையும் எரேமியா தீர்க்கதரிசி மூலம் ஓர் நம்பிக்கையின் வார்த்தையாகக் குறிப்பிடுவதைக் காணலாம். எனவே இது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்த அழைப்பு மட்டுமல்ல, அவர்கள் தேவன் மீது அன்பு, ஆராதனை மற்றும் வேண்டுதல் செய்வதற்கேதுவான ஓர் முக்கியமான அறைகூவலாகவும் அமைகிறது.

புதிய இஸ்ரவேலர்களாகிய நமக்கு இந்த வசனம் ஒரு நேரடியான வாக்குத்தத்தமாக இல்லாவிட்டாலும், கிருபையாய் தேவனுடன் புதிய உடன்படிக்கை செய்துள்ள நம்மீதும் தேவன் தமது உடன்படிக்கையை எங்ஙனம் நிறைவேற்றுகிறார் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. அந்நிய தேசமாகிய பாபிலோனிலிருந்த யூதஜனங்களைப் போன்று நாமும் இவ்வுலகில் அந்நியரும் பரதேசிகளுமாக வைக்கப்பட்டிருப்பதால் பலவேளைகளில் மனச்சோர்வடையலாம். இவ்வுலகில் நாம் சந்திக்கும் கஷ்டங்கள், நோய்கள், சோதனைகள் மற்றும் இழப்புகளை நாம் சமாளித்தேயாக வேண்டும். கிறிஸ்துவுக்கும், அவரை நம்பும் ஜனங்களுக்கும் எதிராகக் காணப்படக்கூடிய ஒரு சமுதாயத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். நாளுக்கு நாள் ஊடகங்கள், தீய சக்திகள் மற்றும் பற்பல சூழ்நிலைகளின் வழியாக நம்மீதும், நமது பிள்ளைகள் மற்றும் குடும்பத்தார் மீதும் பல்வேறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு, அதனால் அதிக தாக்கத்திற்குள்ளாகிறோம். இதனால் நாம் நமது இவ்வுலக வாழ்வில் அந்நியரும் பரதேசிகளும் போன்று காணப்படுவது மட்டுமல்லாமல், நிராகரிப்பிற்கும் துன்புறுத்தலுக்கும் ஆளாகிறோம்.

ஆயினும், நமதாண்டவர் நம்மீது தமது அநாதி திட்டங்களை வைத்திருக்கிறார் என்பதை நாம் மறக்கலாகாது. அவர், அவருடனான நமது உறவுகளை மீட்டெடுக்கவும், நமது சீர்கேட்டைக் குணப்படுத்தவும், நம்மை ஆசீர்வதிக்கவும், பாவம் மற்றும் தீமை நிறைந்த சூழ்நிலையிலிருந்து மீண்டும் நம்மை மீட்டு திருப்பிக்கொண்டு வருவதற்குமான திட்டங்களைக் கொண்டுள்ளார். நம்மைப் பற்றிய அவருடைய எண்ணங்கள் சமாதானத்துக்குரிய நல்லதொரு எதிர்காலத்தையும், நம்பிக்கையையும் கொண்டதாகும். தேவனுடைய திட்டம் மகிழ்ச்சியான முடிவைக் கொண்டது. ஆம், தேவன் நம்மீது கொண்டுள்ள எண்ணங்கள் மிகவும் அன்பானது, நிலையானது, தனித்துவம் வாய்ந்தது, நம்பிக்கைக்குரியது மற்றும் நித்தியமானது மாகும். தேவன் தமது ஜனமாகிய நமக்காகவும், நமது தேசத்திற்காகவும் சிறப்பான திட்டங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறார். அவருடைய எண்ணங்கள் தமது தேவராஜ்ய திட்டத்தில் நமது எதிர்கால ஈடுபாட்டை நோக்கியவையாகும். ஆதலால் நாம் வாழுகிற இக்காலங்களில், நமது பாரத தேசத்திற்காகவும் அதன் அமைதிக்காகவும் ஜெபிக்கவும் (1தீமோ.2:2), தேவன் நமக்கு அருளியுள்ள ஆவியின் வரங்களைப் பயன்படுத்தி தேவ அன்பினால் திருச்சபைகளைக் கட்டியெழுப்பவும், தேவராஜ்யத்தை உருவாக்கவும், அதை தேசமெங்கிலும் விரிவாக்கம் செய்யவும் இவ்வசனத்தின் மூலம் தேவன் நம்மை அழைக்கிறார்.

ஆம்! இங்ஙனம் பரந்த சூழலில் இந்நோக்க வசனத்தைப் புரிந்துகொள்ளும்போது, தேவன் சிறையிருப்பிலிருந்த யூத மக்களுக்குக் கொடுத்த இவ்வாக்குத்தத்தத்தின் மூலம் நம்மோடும் இடைப்படுகிறார். தேவப்பிள்ளைகளாகிய நாம் நமக்குள்ளான தேவனுடைய திட்டத்தின் தன்மைகளையும், அவர் நமக்குச் செய்வதாக வாக்களித்த நித்திய ஆசீர்வாதங்களின் தன்மைகளையும் நன்குப் புரிந்துகொள்ளும்போது, இவ்வசனத்தின் உட்கூரையும் நோக்கத்தையும் நம் வாழ்வில் இன்றும் நம்பிக்கையுடன் அப்பியாசப்படுத்த முடியுமன்றோ!

- **JJ. ஹாரிஸ்** *(தகவல் தொடர்புத்துறை)*

**நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்; நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும் என்று சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார். (ஏசா.14:24)**

**தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். (1கொரி.2:9-10)**

**"தேவனுடைய இதயத்திலும் திட்டத்திலும் நாம் இடம்பெறும்போது, நமது விசுவாசம் வளரும்; அதன் வல்லமை நம்மிலும், நாம் விசுவாசிக்கிறவரின்பேரிலும் எழுச்சியுறும்." - ஆண்ட்ரூ முர்ரே**

**"கிறிஸ்தவர்கள் தங்களது வாழ்க்கை முழுவதையும் தேவனருளும் மறுரூப நோக்கத்திற்கு உட்படுத்துவதோடு, இவ்வுலகையும் அதில் ஈடுபடுத்த கடமைப்பட்டவர்கள்." - ஜேம்ஸ் டேவிசன் ஹண்டர்**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும், இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.

நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பு**

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...

கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றும் பணியில் எனது அன்பு உடன்பங்குதாரர்களே,

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குடும்பத்தாராக உங்கள் அனைவருக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட மற்றும் கிறிஸ்துவை மையப்படுத்திய 2022-ம் புதிய ஆண்டிற்கான அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன் தமது நித்திய கிருபையினாலும், இரக்கத்தினாலும் அவருக்கு ஊழியம் செய்வதற்காகவும், அவருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை சேர்ப்பதற்காகவும் நம் வாழ்வில் இந்த ஆண்டையும் கூடுதலாகக் கொடுத்துள்ளார். எரேமியா 29:11-ம் வசனம், 2022-ம் ஆண்டிற்கான நமது இயக்கத்தின் நோக்க வசனமாகவும், “உன்னத திட்டத்தை நோக்கி...” என்பது அதற்கான கருப்பொருளாகவும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. நமக்கு இவ்வாண்டின் ஒவ்வொரு நாளும், தேவனின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கான ஈவாகவும், ஆண்டவருக்கு முழுமனதுடன் ஊழியம் செய்வதற்கான நல்லத் தருணமாகவும் அமையட்டும். எரேமியா 29:11-ன் பின்னணியத்தைப் பார்ப்போமாயின், தேவன் நமக்கு நல்லதொரு நம்பிக்கையையும், எதிர்காலத்தையும் கொடுக்கத் திட்டம் கொண்டுள்ளார் என்பது தெளிவாகிறது. அவருடைய பிள்ளைகளுக்கான தேவனின் திட்டம் மிகவும் உன்னதமானது. எனவே, நாம் தேவனின் உன்னத திட்டங்களை நோக்கிச் செயல்பட வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். நாம் பெரும்பாலும் நல்நம்பிக்கையையும், எதிர் காலத்தையும் கொடுக்க முடியாத நமது சொந்தத் திட்டத்தையே பின்பற்றுகிறோம். ஆனால், தேவனின் திட்டம் மட்டுமே அவைகளைக் கொடுக்க முடியும். நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கும், அவருடைய திட்டங்களை நோக்கிப் பயணிப்பதற்கும் தேவன்தாமே நம் அனைவருக்கும் உதவி செய்ய வேண்டும். சில சமயங்களில் நாம் தேவனின் திட்டத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கலாம்; ஆனால், தேவன் நமக்காக வைத்திருக்கும் திட்டத்தை அவர் நன்கு அறிந்திருக்கிறார் என்பதில் நாம் உறுதியாக இருந்து, விசுவாசத்தில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

**“ நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.” ( எரேமியா 29:11 )**

**மால்தோ மொழியில் வேதாகம மறுபதிப்பு:** இளம் மால்தோ திருச்சபைகள் தேவனுடைய வார்த்தை அடங்கிய வேதாகமத்தை அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றன. ஏற்கனவே அச்சிடப் பட்டிருந்த வேதாகமங்கள் கொடுத்தாகிவிட்டதால், இப்போது சிறந்த தரம் மற்றும் செரிவு கூட்டப்பட்ட அம்சங்களுடன் மால்தோ மொழி வேதாகமத்தை மறுபதிப்பு செய்ய, இந்திய வேதாகம சங்கத்துடன் இணைந்து நாம் செயல்பட்டு வருகிறோம். நமது வேதாகம மொழிப்பெயர்ப்பாளர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் கடினமாகப் பிரயாசப்பட்டு 8 மொழிகளில் வெளியிட்டுள்ள புதிய ஏற்பாடுகள் அனைத்தையும் அந்தந்த மொழி பேசும் நமது விசுவாசிகள் நன்றாகப் பயன்படுத்தி, தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றப்பட வேண்டும் என்று ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**பாவ்ரி வேதாகம மொழிப்பெயர்ப்பு:** அருள்திரு. இம்மானுவேல் இறைபிச்சை அவர்களின் எதிர்பாராத மறைவிற்குப் பிறகு, அவருடைய மனைவி திருமதி. ஜேன் அமுதா இறைபிச்சை அவர்களால், மத்தியப் பிரதேசத்தில் உள்ள பாவ்ரி மொழியில் வேதாகம மொழிப்பெயர்ப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அம்மொழியில் புதிய ஏற்பாடு அச்சிடுவதற்கு முன், வேதாகம வல்லுனர்களால் கடைசியாக ஒருமுறை தேவ வசனங்கள் சரிபார்க்கப்பட்டு வருகின்றன. எழுத்து வடிவிலுள்ள வேதாகம வார்த்தைகள் மூலம் நமது பாவ்ரா விசுவாசிகளை ஆவிக்குரிய வாழ்வில் கட்டியெழுப்பும் அருள்திரு. இம்மானு வேல் இறைபிச்சை அவர்களின் கனவு நிச்சயம் நிறைவேறும்.

**மண்டல மற்றும் பிராந்தியச் செயலாளர்கள் கூடுகை, ஜான்சி:** ஜான்சியில் உள்ள நமது மிஷனெரிப் பயிற்சி மையத்தில் வைத்து, கடந்த 2021, நவம்பர் 28, 29-ம் தேதிகளில் பணித்தள மண்டலச் செயலாளர்கள் கூடுகையும், நவம்பர் 30-ம் தேதியிலிருந்து டிசம்பர் 2-ம் தேதி வரை பிராந்தியச் செயலாளர்கள் கூடுகையும் நடை பெற்றன. நமது தேசத்தின் பல்வேறு பகுதிகளில் நமது ஊழியத்திற்கு ஏற்பட்டுவரும் எதிர்ப்புகளின் மத்தியில், நமது இளம் விசுவாசிகளை விசுவாசத்தில் பலப்படுத்துவது, நாம் ஊழியம் செய்து வரும் இனமக்கள் மத்தியில் ஊழியத்தை விரிவாக்கம் செய்வது மற்றும் விரைவுப்படுத்துவது குறித்து பணித்தளச் செயலாளர்களோடு ஆலோசித்து

முடிவுகளை மேற்கொள்ள இக்கூடுகை பெரிதும் உதவியது.

**இன்டெர்செர்வ் (Interserve) ஊழிய அமைப் போடு சந்திப்பு:** நமது மிஷனெரிகளின் குழந்தைகளுக்கான ஆரம்பப்பள்ளிக் கல்வியைப் பற்றி ஆலோசிக்க இன்டெர்செர்வ் அமைப்பின் பொறுப்பாளர்கள் நமது தலைமையகத்திற்கு வந்து, அவர்களது 'வீட்டுப்பள்ளி கல்வித்திட்ட மாகிய' க்ரிஹ சிக்ஷா (Griha Shiksha) – வைக் குறித்து நம்மோடுகூட பகிர்ந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் கலந்தாலோசித்த காரியங்கள் ஆரம்பக்கட்ட நிலையிலிருந்தாலும், அத்திட்டத் தைப் பரிசீலிப்பதற்கு நாம் அநேக சவாலான ஆயத்தப்பணிகளைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

**செயற்குழுக் கூட்டம்:** புதியதாக தெரிவுச்செய்யப் பட்ட செயற்குழு அங்கத்தினர்களின் முதல் கூட்டம் 2021, டிசம்பர் 4-5-ம் தேதிகளில் திருநெல்வேலியி லுள்ள சிநேகாலயாவில் வைத்து நடைபெற்றது. இதில் பெரும்பாலான செயற்குழு அங்கத்தினர்கள் கலந்து கொண்டு, நாம் இயக்கமாக தரிசனத்தை நோக்கி முன்னேறுவதற்கான தங்களது சிறப்பான பங்களிப்பை வழங்கினார்கள். புதிதாக தெரிவுச்செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கென ஊழிய விளக்க அறிமுக நிகழ்ச்சிகளும், அரைநாள் சிறப்பு ஜெபக்கூடுகையும் ஒழுங்குச் செய்யப்பட்டிருந்தன.

**அருள்திரு. அறிவர். J.T.K. டேனியல் அண்ணனின் மறைவு:** நமது இயக்கத்தின் ஆரம்பக்காலத்திலிருந்தே பல்வேறு பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட்டுவந்த அருள்திரு. அறிவர். J.T.K. டேனியல் அண்ணன் அவர்கள், கடந்த 2021, டிசம்பர் 4-ம் தேதி கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்கள். இவர் 1966-ல் நமது இயக்கத்தின் கௌரவ பொதுச்செயலாளராகவும், அதன்பின்னர் நமது இயக்கத்தில் அநேக பொறுப்புகளையும் வகித்து வந்தார். இவர் நமது மிஷனெரிகளுக்கான உயர்கல்வித் திட்டத்தின் நீண்டக்கால தலைவ ராகவும் செயல்பட்டு வந்தார். நமது இயக்கத்தின் மற்ற முன்னோடித் தலைவர்களைப் போன்றே J.T.K. டேனியல் அண்ணன் அவர்களும் நாம் அனைவரும் பின்பற்றுவதற்கான உயர்ந்த நல் ஊழிய மரபை நமக்கு விட்டுச்சென்றுள்ளார்கள்.

**ஜார்க்கண்ட் மிஷனெரிகள் சந்திப்பு:** 2021, டிசம்பர் 8-10-ம் தேதிகளில் ஜார்க்கண்டில், நமது மிஷனெரிகள் மற்றும் திருச்சபைத் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கு நமது மிஷனெரிகள் மிகக்கடின மான சூழ்நிலையிலும் உயர்ந்த தரிசனத்தோடு அவர்கள் மத்தியில் வாழும் மக்களினங்களைச் சுவிசேஷத்தால் சந்திக்கும் பணிகளைத் தீவிரமாக செய்து வருகிறார்கள் என்பதைக் காண முடிந்தது.

**அஸோம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் மிஷனெரிகள் சந்திப்பு:** ஜார்க்கண்ட் மாநில விஜயத்தை முடித்து, தொடர்ந்து அஸோம் மாநிலத்தில் மிஸ்ஸிங் இனமக்கள் மத்தியில் நடைபெற்ற இரு திருச்சபைக்கூடுகைகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அஸோமிலுள்ள நமது அனைத்து மிஷனெரிகளும் அருணாச்சலப் பிரதேசத்தில் வைத்து நடைபெற்ற ஒருநாள் கூடுகையில் கலந்து கொண்டார்கள். குளிர்காலத்தின் மத்திய நாட்களில் குளிர் மிகவும் கடுமையாக இருந்தபோதிலும், நமது மிஷனெரிகள் குடும்பத்துடன் தொலைதூர இடங்களிலிருந்து வந்து அக்கூடுகையில் கலந்து கொண்டனர். அவர்கள் யாவரும் சுமார் 20 இலட்சம் மிஸ்ஸிங் இனமக்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும் பணியில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறதைப் பார்க்க முடிந்தது.

**நேர்காணல் நிகழ்ச்சி:** புதிய மிஷனெரிகளைத் தெரிவுச்செய்வதற்கான 'நேர்காணல் நிகழ்ச்சி' 2022, ஜனவரி 8-9-ம் தேதிகளில் இம்மாதம் சென்னையில் வைத்து நடைபெற உள்ளது. அறுவடை நாயகர் தமது திராட்சத்தோட்டத்திற்குத் தேவையான வேலையாட்களை அனுப்ப உங்களது ஜெபம் மிகவும் தேவைப்படுகிறது. அதுமட்டுமல் லாது, தங்கள் பகுதிகளிலிருந்து தேவ அழைப்புப் பெற்றுள்ள இளைஞர்களை அவருக்கு ஊழியம் செய்ய அனுப்பித்தரும்படி தங்களைப் பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**டிவிஷனல் செயலாளர்கள் கூடுகை:** நமது இயக்கத் திலுள்ள அனைத்து டிவிஷனல் செயலாளர்களும் பொதுச்செயலாளரோடு இணைந்து, நமது ஊழியத்தின் முக்கிய கரிசனைகளைக் குறித்து ஆலோசிக்க ஓர் கூடுகை இம்மாதம் ஜனவரி 18-19-ம் தேதிகளில் பெங்களூரில் வைத்து நடைபெற உள்ளது.

இப்புத்தாண்டில் நாம் தேவனின் மாபெரும் அன்பை மிகவும் நெருக்கமாக அனுபவிக்கவும், நமது முழு பெலத்துடன் அவருக்கு ஊழியம் செய்யவும் ஜெபித்துச் செயல்படுவோம்.

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



**அருள்திரு. S. ஜாண் பெர்லின்**



# உன்னத திட்டத்தை நோக்கி...

2022-ம் புதிய ஆண்டிற்குள் நாம் பிரவேசித்துள்ளோம். கடந்த ஆண்டு குழப்ப மானதாகவும் கொந்தளிப்பானதாகவும் இருந்தாலும், தேவன் நம்மோடு நம் அருகில் இருந்தார் என்பதே நாமறிந்துணர்ந்த உண்மை. உலகம் முழுவதையும் உலுக்கிய கொரோனா தொற்று, மக்களைத் துன்பத் திலும் வேதனையிலும் ஆழ்த்தியது. இந்தச் சூழலில் தேவன் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு எரேமியா 29:11-ஐ 2022-ம் ஆண்டிற்கான கருப்பொருள் வசனமாகக் கொடுத்துள்ளார் -

*"நீங்கள் எதிர்பார்த்திருக்கும்முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே."*

இவ்வசனத்தின் அடிப்படையில் - "உன்னத திட்டத்தை நோக்கி ..." என்பது இவ்வாண்டின் நமது நோக்க வார்த்தை ஆகும்.

## எரேமியா 29:11-ம் வசனத்தின் சூழல்கள்:

எரேமியா 29:11-ஐ வரலாற்று மற்றும் இத்தீர்க்கதரிசன புத்தகப் பின்னணியத்தில் பார்க்கும்போது, பெரும்பாலான கிறிஸ்த வர்கள் இவ்வசனம் தங்களது வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமானதாகவும், பொருத்தமானதாகவும் மற்றும் ஆழமான அர்த்தத்தைத் தருவ தாகவும் கருதுவார்கள். வேதாகம வசனங்களின் பகுதிகளை அதன் சூழலின் அடிப்படையில் புரிந்து கொள்வது, வேதாகமத்தின் கருத்துக்களைத் தாங்கள் விரும்புகிற வண்ணம் எடுத்துக் கொள்ளக்கூடிய மனித சுபாவத் தைத் தவிர்க்கவும், தேவனும் அவருடைய தீர்க்கதரிசிகளும் அவர்களது சிந்தையில் கொண்டு எழுதிய உண்மையான அர்த்தத்தை வெளிக்கொணர்வதற்கும் ஏதுகரமாகும்.

## வரலாற்றுச் சூழல்:

வரலாற்றுப் பின்னணியத்தின்படி பார்த்தால், யூத ஜனங்கள் எருசலேமிலிருந்து பாபி லோனுக்குச் சிறைபிடிக்கப்படுவதற்கு முன்பதாக, அதாவது அவர்கள் முதலாவது எகிப்து பின்னர் இப்போது பாபிலோனிய பேரரசுகளின் ஆதிக்கத்தின்கீழ் வாழ நேரிடப்போகும் சமயத்தில், எரேமியா இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளை அவர்களுக்கு எடுத்துரைத்ததைக் காண்கிறோம். எதிரிகளின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்வதும், பின்னர் அந்த எதிரி களாலேயே சிறைபிடிக்கப்பட்டு வேறொரு அந்நிய தேசத்தில் வாழ்வதும் ஒருவருக்கு எப்படி இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## இப்புத்தகத்தின் சூழல்:

இத்தீர்க்கதரிசனப் புத்தகத்தின் 28-ம் அதிகாரத்தில் அனனியா என்ற ஒரு கள்ளத்தீர்க்கதரிசி, 'தேவன் பாபிலோனின் சிறையிருப்பைத் தகர்த்தெறிந்து, யூத ஜனங்களை இரண்டு ஆண்டுகளுக்குள் மீண்டும் எருசலேமுக்குத் திரும்பிவரப் பண்ணுவார்' என்று கூறிய தீர்க்கதரிசனம், மக்களைக் கவருவதாக இருந்தாலும், அது தவறான செய்தி என்றும், அதனால் தேவன் அனனியாவைப் பூமியிலிருந்தே

அகற்றினார் (எரே.28:15-17) என்பதையும் அறிகிறோம். ஆனால் அனனியாவின் தீர்க்கதரிசனத்திற்கு மாறாக, பாபிலோன் சிறையிருப்பில் யூத ஜனங்கள் குறைந்த பட்சம் 70 ஆண்டுகள் வாழ்வார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தார். ஆதலால், அவர்கள் அங்கே குடியேறி, வீடுகள் கட்டி, திருமணம் செய்து, அத்தேசத்தின் அமைதி மற்றும் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வேண்டுமென எரேமியா கூறினார் (எரே.29:4-10).

ஏற்கனவே எகிப்தின் கடுமையான அடிமைத்தன துன்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற யூதஜனங்களுக்கு கள்ளத்தீர்க்கதரிசியாகிய அனனியாவின் வார்த்தைகள் விருப்பத்திற்குரியதாகவும், எரேமியாவின் தீர்க்கதரிசன வார்த்தைகள் (எரே.29:11) அவர்களுக்கு மேலும் துன்பங்கள் மற்றும் துயரங்கள் நிறைந்த தாகவும் இருந்திருக்கலாம். தேவனின் திட்டம் அவர்களை அக்கடினமான சூழ்நிலையிலிருந்து உடனடியாக விடுவிப்பது அல்ல; மாறாக, அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், அவர்களைச் செழிக்கச் செய்வதற்கான திட்டத்தைதான் தேவன் அவர்களுக்கு எரேமியா மூலமாக வாக்குத்தத்தமாக நல்குகிறார்.

## எரேமியா 29:11-ஐ அப்பியாசப்படுத்தல்:

இன்று கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்கு, எரேமியா 29:11 ஆறுதலை அளிக்கலாம். ஆனால், இது நம்மைக் கஷ்டங்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் உடனடியாக மீட்பதற்கான வாக்குத்தத்தம் அல்ல; மாறாக, நம்முடைய தற்போதைய சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், நம்மை வளப்படுத்த நமக்கு நல்லதொரு நம்பிக்கையையும், எதிர்காலத்தையும் நல்குவதற்கான ஒரு திட்டத்தை தேவன் நமது வாழ்க்கைக்கு வைத்திருக்கிறார் என்பதை அறிந்துணர்வதே அதன் உள்ளான பொருள் ஆகும்.

இந்த வார்த்தை நமது தனிப்பட்ட வாழ்வின் சூழலில் மட்டுமல்ல, நமது ஊழியச்சூழலிலும் மிகவும் பொருந்துவதாக அமைகிறது. நம் ஒவ்வொருவருக்கும் நமது இயக்கத்திற்கும் தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அதென்னவெனில், இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி அனைத்து இந்தியர்களையும் சென்றடையச் செய்வதற்கான தரிசனத்தை நாம் நனவாக்குவதே ஆகும். ஏனெனில் நாம் அவ்வாறு செய்ய முற்படும்போது கிடைக்கும் தேவாசீர்வாதத்தையும், அதற்குரிய நல் நம்பிக்கையையும் எதிர்காலத்தையும் தேவன் நமக்கு ஈவதே நமக்கான தேவனின் திட்டமாகக் காணப்படுகிறது.

தேவனின் திட்டம் நாம் நினைக்கும் விதத்தில் மற்றும் நாம் நினைக்கும் நேரத்தில் நடக்காதபோது, தேவனின் திட்டத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, சில சமயங்களில் நாம் நமது சொந்த திட்டங்களைச் செயல்படுத்த முயற்சிக்கும் அழுத்தம் வரலாம். தேவன் நமக்காக வைத்திருக்கும் திட்டமும் நேரமும் எதுவாக இருந்தாலும், மற்ற எல்லாத் திட்டங்களையும் விட அவருடைய திட்டமே சிறந்தது என்பதை நாம் உணர்ந்து செயல்படுவது மிகவும் அவசியமாகும்.

## தேவனின் திட்டமே வெற்றியடையும்:

தேவனின் திட்டத்தை அடைய நாம் ஆழ்ந்த அர்ப்பணிப்பு, தியாகம், பொறுமை, விடாமுயற்சி மற்றும் தேவன் கொடுத்த தரிசனத்தில் கவனம் செலுத்துதல் போன்றவைகளை நமது வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். தேவனின் திட்டம், சில நேரங்களில் நமது மனித சிந்தைக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டதாகவும், ஏற்க முடியாததாகவும் தோன்றும். தேவ திட்டம் நமது அறிவார்ந்த அளவில் ஏற்றுக்கொள்ள கடினமாகத் தோன்றினாலும், நாம் அதை விசுவாசத்தோடு நடைமுறைபடுத்த வேண்டும். இஸ்ரவேலர்கள் எரிகோவின் சுவரைச் சுற்றி நடக்க தேவனால் கட்டளை பெற்றபோது, அத்திட்டம் அவர்களுக்கு

நியாயமற்றதாக தோன்றியிருக்கலாம்; ஏனென்றால், சுவரைச் சுற்றி நடப்பதால் எந்தச் சுவரும் இடிந்து விடாது. ஆனால், அவர்கள் அதற்குக் கீழ்ப்படிந்தபோது, தேவனின் திட்டம் வெற்றியடைந்ததைப் பார்க்கிறோம்.

## மனித திட்டம் மற்றும் தேவ திட்டத்தின் ஒப்பீடு:

ஆதியாகமம் 11-ம் அதிகாரம், சிநெயார் தேசத்தின் சமபூமியில், பாபேல் கோபுரத்தைக் கட்டுவதற்கான மனித திட்டத்தை விவரிக்கிறது; மற்றும் 12-ம் அதிகாரம், ஆபிரகாமிலிருந்து ஒரு தேசத்தை உருவாக்கும் தேவனின் திட்டத்தைக் காட்டுகிறது. இவ்விரண்டு திட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கோபுரத்தைக் கட்டுவதற்கான மனித திட்டம் உயர்ந்ததாகத் தோன்றலாம். மேலும், மனித திட்டம் வெற்றியடைவதற்கான அனைத்து தளவாடப் பொருட்களையும் தன்னிடம் நிறைவாய்க் கொண்டிருந்தது. ஆனால், தேவ திட்டம் குழந்தையில்லாத 75 வயது முதியவரான ஆபிரகாமின் மீதும், அவருடைய கீழ்ப்படிதலின் மீதும் சார்ந்திருந்ததைப் பார்க்கிறோம். **மனித திட்டத்தையும், தேவ திட்டத்தையும் நான்கு வெவ்வேறு பகுதிகளில் கீழே விரிவாகக் காணலாம்.**

### 1 திட்டங்களின் நோக்கம்:

ஆதியாகமம் 11:4-ம் வசனம், பாபேல் கோபுரத்தைக் கட்டும் மனித திட்டத்தின் நோக்கத்தைக் காட்டுகிறது. ஜனங்கள் தாங்கள் பூமி மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, தங்களுக்குப் பேர் உண்டாக்க வேண்டும் என்று தங்களின் நோக்கத்திலும், அந்நோக்கத்தை அடைய என்ன செய்ய வேண்டும் என்பதிலும் மிகத் தெளிவாக இருந்தனர். மனித திட்டத்தின் நோக்கத்தில் எந்தக் குறையும் இல்லை; அனைத்து ஜனங்களும் தங்களது நோக்கத்தில் தெளிவாகவும், அதைச் செய்வதில் உறுதியாகவும் காணப்பட்டனர். ஆனால், தேவனின் திட்டத்தில் குழந்தையில்லாதிருக்கும் ஆபிரகாமை ஒரு பெரிய தேசமாக்குவது மட்டுமே நோக்கமாக இருந்தது. பின்னர், இஸ்ரவேலரின் வரலாறே அங்கிருந்துதான் தொடங்கிற்று.

### 2 திட்டங்களை அடைவதற்கான வழிமுறைகள்:

ஆதியாகமம் 11-ம் அதிகாரத்தில், கோபுரத்தைக் கட்ட திட்டமிட்டவர்கள் அந்தக் காலத்தின் மிகச் சிறந்த தொழில் நுட்பத்தையும் கொண்டிருந்தனர். அதை அடைவதற்கான தளவாடங்களும் வழிமுறைகளும் அவர்களிடம் இருந்தன. ஆதியாகமம் 11:3 கூறுகிறது - “அப்பொழுது அவர்கள்: நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்; கல்லுக்குப் பதிலாகச் செங்கல்லும், சாந்துக்குப் பதிலாக நிலக்கீலும் அவர்களுக்கு இருந்தது.” ஆனால், ஆதியாகமம் 12-ல் ஒரு பெரிய தேசத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்தை நிறைவேற்ற தேவன் ஒரு எளிய மற்றும் சாதாரண மனிதனை மட்டுமே சார்ந்திருந்ததைப் பார்க்கிறோம்.

### 3 அர்ப்பணிப்பின் நிலை:

ஆதியாகமம் 11:6-ல், மனித திட்டத்தில் ஈடுபடுகிற மக்களின் அர்ப்பணிப்பின் தன்மையைப் பற்றி தேவனே சான்றளித்ததைப் பார்க்கிறோம் - *“அப்பொழுது கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள் இதைச் செய்யத் தொடங்கினார்கள்; இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்.”* தேவன் தமது திட்டத்தை நிறைவேற்றத் தெரிந்தெடுத்த மனிதனுக்கு ஓரளவே அர்ப்பணிப்பு இருந்தது; அது பாதியளவு அல்லது ஓரிருமுறை ஓரளவுக்குத்தான் கீழ்ப்படிதலுள்ளதாக இருந்தது எனலாம். அதாவது, தேவன் ஆபிரகாமைக் கானா

னுக்குச் செல்ல அழைத்தபோது, அவர் தனது தந்தை தேராகுவின் மரணம் வரை ஐந்து நீண்ட ஆண்டுகள் ஆரானில் குடியேறினார் (ஆதி.11:31). மீண்டும் ஆதியாகமம் 12:1-ல் தேவன் ஆபிரகாமை அவரது தந்தை வீட்டையும் விட்டு கானானுக்குச் செல்லும்படி அழைத்தார்; அங்கும் அவர் லோத்தையும் தன்னுடன் அழைத்துச் சென்றதைப் பார்க்கிறோம்.

## 4 திட்டங்களின் உள்ளார்ந்த நோக்கம்:

சிநெயார் தேசத்திலுள்ள மக்கள், தங்களின் நோக்கம், வழிமுறைகள் மற்றும் அர்ப்பணிப்பு ஆகிய முதல் மூன்று அம்சங்களிலும் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும், ஆதியாகமம் 11-ல் குறிப்பிடப்பட்டுள்ள மனிதனின் திட்டத்தைத் தோல்வியடையச் செய்து, ஆதியாகமம் 12-ல் குறிப்பிடப்பட்டுள்ள தேவனின் திட்டத்தை வெற்றியடையச் செய்ததற்கு, 'திட்டங்களின் உள்ளார்ந்த நோக்கம்தான்' காரணம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பாபேல் கோபுரத்தைக் கட்டுவது மனித திட்டமாகவும், ஆபிரகாமைக் கானானுக்குக் கொண்டு வந்து ஒரு புதிய தேசத்தை உருவாக்குவது தேவ திட்டமாகவும் இருந்தது. தேவனின் இந்த நோக்கத்தின் காரணம்தான் அத்திட்டத்தை வெற்றியடையச் செய்தது. நமது திட்டங்கள் நன்கு சிந்தித்துச் செயல்படத்தக்கதாக இருக்கலாம்; ஆயினும், அவை தோல்வியடையலாம். ஆனால் நாம் தேவனுடைய திட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்காக உழைக்கும்போது, தேவன் அவருடைய திட்டத்தை நமக்கு நிலையானதாகவும், ஆசீர்வாதமானதாகவும் மாற்றுவார்.

## தேவனின் திட்டங்கள் நமது திட்டங்களாக இல்லாதபோது:

நீதிமொழிகள் 19:21 கூறுகிறது, *"மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்."* நம்முடைய திட்டங்கள் எதுவாக இருந்தாலும், தேவனுடைய திட்டமே நிறைவேறும் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. இந்த வசனம், தேவனின் திட்டத்திற்கு நம்மை நாம் அர்ப்பணிப்பதற்கும், அதை நிறைவேற்றுவதற்குரிய அனைத்துக் காரியங்களையும் செய்வதற்கும் அறிவுறுத்துகிறது.

## நமது திட்டங்களை தேவனிடம் ஒப்படைப்பதன் அர்த்தம் என்ன?:

"அர்ப்பணிப்பு" என்கிற வார்த்தை, எபிரெய மொழியில் "ஒப்புவித்தல்" என்று பொருள்படும். சங்கீதம் 22:9&10-ம் வசனங்கள், தேவனுக்கு முழுமையாக "ஒப்புவித்தல்" என்ற கருத்தைப் பிரதிபலிக்கின்றன. இதன் ஆழமான கருத்து என்னவென்றால், நாம் தேவனையே சார்ந்து முழுமையாக அவரிடம் நம்மை ஒப்புவிப்பதாகும். நாம் நமது நோக்கங்களையும் நமது செயல்களையும் தேவனுக்கும், அவருடைய திட்டத்திற்கும் அர்ப்பணிக்கும்போது, நாம் செய்யும் அனைத்தையும் முழுவதுமாக அவரிடம் ஒப்புவிப்பதாக அது அமையும்.

நமது தேசத்தைச் சுவிசேஷத்தால் சந்திக்கும் நமது இயக்க தரிசனத்தின் பங்குதாரர்களாகிய நாம், அதை நிறைவேற்றும் தேவனின் திட்டத்திற்காக நம்முடைய அனைத்தையும் கொடுப்போம். நம்மை ஆசீர்வதிப்பதற்கும், நமக்கு நம்பிக்கையையும் நல்லதொரு எதிர்காலத்தையும் தருவதற்கும் ஒரு திட்டத்தை தேவன் நமக்கு வைத்திருக்கிறார் என்பதை எப்போதும் நாம் நமது நினைவில் கொள்ள வேண்டும். அதற்கு தேவன் இப்புதிய ஆண்டில் நம்மை ஆசீர்வதித்து, நமது இயக்கத்தின் தரிசனத்தை நிறைவேற்ற நம்மை மென்மேலும் பயன்படுத்துவாராக. ஆமென்!

**- அருள்திரு. S. ஜாண் பெர்லின்**
FMPB - பொதுச் செயலாளர்

# தரிசனங்கள் தடைகளைத் தாண்டட்டுமே!



ஆதியாகமத்தின் தொடக்க அத்தியாயங்கள் நமதாண்டவரை – உன்னத திட்டங்களைக் கொண்டுள்ள தேவனாகச் சித்தரிக்கின்றன. தேவனுடைய நோக்கங்களும் திட்டங்களும் அவருடைய படைப்புகளையும் தாண்டி நிற்பதோடு, நமது வாழ்வின் அனைத்து அம்சங்களையும் தொடுகின்றன. இத் தொடுதல், தேவன் மனுக்குலத்துடன் கொண்டுள்ள அனைத்து உறவுநிலைகள் மற்றும் செயல்பாடுகளைவிட மிகவும் உச்சிதமானதாகும். தேவனின் திட்டம், இஸ்ரவேலைத் தெரிந்து கொண்டதாக அல்லது எகிப்தின் மீது வாதையை அனுப்பியதாக இருக்கலாம். அது, ஒரு சாதாரண குணமாக்குதலாக அல்லது கானாவூரில் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றும் அதிசயமாக இருக்கலாம். **தேவனுடைய ஒவ்வொரு செயலுக்கும் ஒரு நோக்கம் உண்டு. தேவனுடைய திட்டங்கள் ஒன்றோடொன்று பின்னிபிணைந்திருப்பதே அதன் சுவாரஸ்யமாகும். அதாவது, ஒரு தனிநபருக்கான தேவனின் நோக்கம் ஒரு மக்கள் கூட்டத்திற்கான அவரது திட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. நைல் நதியிலிருந்து ஒரு குழந்தையை மீட்டது, எகிப்தின் நீண்ட அடிமைத் தனத்திலிருந்த இஸ்ரவேல் ஜனங்களை விடுவிப்பதோடு இணைக்கப்பட்டிருந்ததையும், தமஸ்குவிற்குச் செல்லும் வழியில் பார்வையை இழந்த சவுலின் ஊழியம், ஆசியா கண்டத்தில் உள்ள பலரின் கண்களைத் திறக்கும் பணியோடு இணைக்கப்பட்டிருந்ததையும் அறிகிறோம்.**

திட்டங்களை வகுக்கும் தேவன், தமது சித்தத்தின்படி அதை நிறைவேற்றுவதிலும் அதிக முனைப்புடன் செயல்படுகிறார். எனவே, தேவன் தம்முடைய திட்டத்தை நிறைவேற்ற அத்திட்டத்தை முதலாவது அவர் தமது மக்களுக்கு வெளிப்படுத்துகிறார். தேவன் மோசேயை அழைத்து, எகிப்தில் சொல்லொண்ணா துன்பங்களை அனுபவிக்கும் தமது மக்களுக்கான தம்முடைய திட்டத்தை வெளிப்படுத்தினார். தேவனின் திட்டம் மோசேக்கு மிகவும் தெளிவாகச் செயல்முறை விளக்கத்துடன் வெளிப்படுத்தப்பட்டபோது, அது மோசேயின் தரிசனமாக மாறியது (யாத்.3 & 4-ம் அதிகாரங்கள்). மோசே தேவனின் திட்டத்தைத் தனக்குச் சொந்தமாக்கி, அதற்குக் கீழ்ப்படிந்து அதை செயல்படுத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார். **தரிசனம் எப்போதும் சவால்கள் நிறைந்தவைகளாகக் காணப்படுகிறது. சவால்களை எதிர்கொண்டு தரிசனத்தைத் தொடர்வது கடினமானதாகவும், சாத்தியமற்றது போன்றும் தோன்றலாம். தரிசனம் தெளிவாக இருக்கும்போது, அதைச் செயல்படுத்துவதும் எளிதாகிறது.**

## 1. தெளிவு நிறைந்த தரிசனம்

மோசேயின் அழைப்பில் நாம் காண்பது போல், தரிசனம் கொடுக்கிறவர் தேவன். மக்களையும் அவர்களுடைய பிரச்சனைகளையும் தேவனுடைய கண்களால் நாம் பார்க்க வேண்டும் என்றும், மக்களைக் குறித்ததான அவருடைய உணர்வு நம்முடைய உணர்வாக மாறவேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். அவர் நம்மை எங்கெல்லாம் வழிநடத்துகிறாரோ அங்கெல்லாம் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும் பொறுப்பை நமக்கு நாமே சொந்தமாக்கிக்கொள்ள அவர் விரும்புகிறார். எனவே, தரிசனம் என்பது நமது விருப்பமோ, சித்தமோ அல்ல; மாறாக, அது தேவன் தமது தரிசனத்தை நம்முடன் பகிர்ந்து கொள்ளும் பாக்கியத்தை நாம் பெறுவதாகும். தரிசனம் என்பது ஒரு அவசரநிலையின் காரணமாக தேவனின் மனதில் தோன்றும் திடீர் எண்ணம் அல்ல; மாறாக, அது தேவனுடைய அநாதி திட்டத்தில் வேரூன்றியுள்ளது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

"தேவனால் அருளப்பட்ட தரிசனத்தின் 'வேர்கள்' நேரம், சூழ்நிலை, அன்றாட நிகழ்வுகள், தற்காலச் செயல்பாடுகள் மற்றும் அவசரநிலைக்கும் அப்பால் காணப்படுகிறது" என்று ஆஸ்டின் ஸ்பார்க்ஸ் என்ற தேவ மனிதர் குறிப்பிடுகிறார். எனவே தேவன் அருளும் தரிசனம், நமது அறிவு மற்றும் சிந்தனையின் வரையறைக்கு அப்பாற்பட்ட புரிந்துகொள்ளுதலையும், மிகப்பரந்த தாக்கங்களையும் கொண்டது ஆகும். நாம் தேவனின் தரிசனத்தை தேவனோடுப் பகிர்ந்து கொள்ளும்போது, தேவனின் உன்னத திட்டத்தில் பங்கேற்கிறோம். பவுல் கொரிந்துப்பட்டணத்தில் இருந்தபோது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவரிடம் ஒரு தரிசனத்தில் பேசி, அவரோடு தொடர்ந்து தொடர்புடன் இருக்கக் கூறினார். தேவன் அந்தப் பட்டணத்தில் பலரை இரட்சிக்கும் திட்டத்தை வைத்திருந்ததால், பவுல் பயமில்லாமல் தமது பணியைத் தொடர்ந்து செய்ய தேவன் விரும்பினார். எனவே அந்தப் பட்டணத்தில் உள்ள பலருக்காகவும் கிடைத்த அந்த வெளிப்பாடு, பவுல், அங்கு தேவனுடைய ஊழியத்தைத் தொடர்ந்து செய்யப் பெரும் உந்துதலாக அமைந்தது (அப்.18:9-11).

**தரிசனத்தின் மற்றொரு அம்சம் அதன் உறுதித்தன்மையாகும்.** எரேமியா 29:10-ஐ நாம் வாசிக்கும்போது, தேவனால் கொடுக்கப்படும் தரிசனம் மாறாது; ஏனென்றால், தேவ தரிசனத்தின் அடித்தளம் தேவனுடைய உண்மையுள்ள வாக்குத்தத்தத்தின் மேல் கட்டப்பட்டுள்ளது என அறியலாம்.

**"பாபிலோனிலே எழுபதுவருஷம் நிறைவேறினபின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பிவரப்பண்ணும்படிக்கு உங்கள்மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."**

மேலும் இவ்வசனம், தேவன் கொடுத்த தரிசனம் காலவரையறைக்குட்பட்டது என்பதை இங்கு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்தக்காலக்கட்டத்தில், யூத ஜனங்கள் பாபிலோன் சிறையிருப்பில் இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும் (எரே.29:4-7). எந்த வேறொரு தீர்க்கதரிசனமும் அதை மாற்ற முடியாது. பாபிலோனில் அவர்கள் சிறைபிடிக்கப்பட்டிருக்கும் காலத்தை எந்தச் சக்தியாலும் குறைக்கவும் முடியாது. கள்ளத்தீர்க்கதரிசிகள் யூத ஜனங்களின் நம்பிக்கையைக் குழப்பிச் சிதைக்க முயற்சித்தாலும் (எரே.29:8), தேவசித்தத்தின்படி யூத ஜனங்கள் பாபிலோனின் சிறையிருப்பில் தாங்கள் 70 வருடங்கள் இருக்க வேண்டுமென்பதில் உறுதியாய்க் காணப்பட வேண்டுமென தேவனால் எதிர்பார்க்கப்பட்டார்கள்.

சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளில் விரைவான நல்மாற்றம்

ஏற்படுவதற்குத் தடையாக, பல பாதகமான சூழ்நிலைகள் காணப்படும்போது, தரிசனத்தை நிறைவேற்றுவதில் நமக்கு ஒரு வலுவான அவநம்பிக்கை ஏற்படலாம். இந்தச் சவால்கள் தொடர்ந்து காணப் படுவதால், நமது ஊழிய வளர்ச்சியில் ஒரு தேக்கம் உருவாகலாம். ஆனாலும், நாம் நம்பிக்கையை இழக்காமல் பந்தயத்தைத் தொடர வேண்டும். விளையாட்டு வீரர்களைப் போல நாமும் தடைகளைத் தாண்டி, துன்பங்களையும் துயரங்களையும் சகித்து அவைகளை மேற்கொள்ள வேண்டிய திருக்கும். சங்கீதக்காரனின் நம்பிக்கையான வார்த்தைகள், தேவனின் தரிசனத்தைச் செயலாக்கம் செய்ய விரும்பும் நமக்கு ஒரு நல்லத் தூண்டுதலாக அமையும் –

**“உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.” (சங்.18:29)**

பொதுவாக, நமது தரிசன செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்படும்போது அல்லது குறைக்கப்படும்போது நாம் மனமுடைந்து போகிறோம். இதன் காரணமாக, நாம் தரிசனத்தில் முன்னோக்கிச்செல்வது தடைப்பட்டது போன்றும் அல்லது தாமத மானது போன்றும் தெரிகிறது. ஆனால், தேவனுடைய திட்டம் ஒருபோதும் மாறாது அல்லது தோல்வியடையாது. ஈஸ்ட்மேன் கர்டிஸ் என்ற வேதபண்டிதர், நாம் நமது தரிசன முன்னேற்றத்தில் ஏற்படும் தாமதத்தைப் புரிந்து கொள்ளவும் அதை ஏற்றுக்கொள்ளவும் ஒரு ஆலோசனை கூறுகிறார். அதாவது விமானங்களின் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் கோபுரங் களுக்கு அவர் நமது கவனத்தைத் திருப்புகிறார். சில சமயங்களில், விமான நிலையத்தில் உள்ள கோபுரங்கள், விமானங் களைத் தரையிறங்க அனுமதிக்கும் வரை வானத்திலேயே அவைகளை வட்டமடிக்கு மாறு செய்கின்றன. ஒருமுறை தான் இவ்வாறாக சுமார் 2 மணிநேரம் இருந்த தாக அவர் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார். அவரது ஊக்கமூட்டும் வார்த்தைகள் இவ்வாறு கூறப்பட்டுள்ளன –

“நாம் சில சமயங்களில் நமது இலக்கை நோக்கி முன்னோக்கிச் செல்வதற்குப் பதிலாக, ஒரே இடத்தில் வட்டமடித்துக் கொண்டிருப்பதைப் போன்று உணரலாம். சில நேரங்களில் நாம் தாமதத்தையோ அல்லது ஒருவிதத் தடையையோ சந்திக்க நேரிடலாம். அதற்காக நாம் இலக்கையடைவதற்கான நமது தரிசனத்தை விட்டுக்கொடுக்க வேண்டும் என்பது அர்த்தம் அல்ல.”

**தேவனுடைய திட்டத்தில் ‘நேரம்’ முக்கியப் பங்கு வகிக்கிறது.** அவருடைய திட்டம் எளிதான தோற்றத்துடன் காணப்படலாம்; ஆனால், அதில் மிக ஆழமான நோக்கங்கள் பொதிந்துள்ளன. எனவே, தேவனுடைய திட்டம் ஓர் செயல்முறைத்திட்டம். இஸ்ரவேலர் களை எகிப்திலிருந்து விடுவிக்க மோசே தேவனால் அழைக்கப்பட்டார். தேவனுடைய வழிகாட்டுதலின்படி மோசே பார்வோனைச் சந்தித்தார்; அதனால் இஸ்ரவேல் மக்களுக்கு உடனடி விடுதலை கிடைக்கும் என மோசே எண்ணினார். ஆனால், அவர்கள் விடுதலையாகுவதற்கான எந்த அறிகுறியும் அங்கு அவருக்குத் தென்படவில்லை. எனவே, மோசே சோர்வடைந்ததோடு மிகவும் வருத்தமடைந்தவராக *“நீர் உம்முடைய ஜனங்களை விடுதலையாக்கவில்லையே”* (யாத்.5:23) என்று கூறினதைப் பார்க் கிறோம். மோசே, ஒரே ஒரு முயற்சியில் இஸ்ரவேலர்களின் விடுதலை உடனே நடந்துவிடும் என எண்ணினார். ஆனால், தேவனின் மனதில் அவர்களின் விடுதலை பல செயல்முறைகளைக் கொண்டதாக இருந்ததைக் காணலாம்.

**தேவன் அருளும் தரிசனம் ‘அவருடைய நேரத்தில்’ நிறைவேறும். எனவே, துன்பங்கள் மற்றும் நிச்சயமற்ற சூழ்நிலை களின்போது நாம் நமது தரிசனத்தை**

**விட்டுவிடாமல், அவைகளைப் பற்றிக் கொள்ள அழைக்கப்படுகிறோம். தரிசனத்தில் தெளிவை மட்டுமல்ல, நிறைவையும் அடையும்வரை ஆர்வமும், ஆற்றலும் நமக்குத் தொடர்ந்து இருக்க வேண்டும்.**

## 2. ஆற்றல் மிகுந்த தரிசனம்

தரிசனம் என்பது ஒரு மேலோட்டமான கனவு அல்ல; அது நம்மை முயற்சி செய்யத் தூண்ட வேண்டும். நமது முயற்சியில் துணிச்சலும் நம்பிக்கையும் ஆற்றலும் இல்லாவிட்டால், அதை நாம் ஒரு முயற்சியாகவே கருதமுடியாது. உற்சாகம் மற்றும் ஆற்றலுடன் சேர்ந்து உறுதிப்படுத்தப்பட்ட தரிசனம்தான், ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அதனால்தான், தேவனுக்கு ஊழியம் செய்யும்போது ஆவிக்குரிய உற்சாகத்தைக் காத்துக்கொள்ள புனித பவுல் ரோமர் 12: 11–ல் "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்," என்ற ஒரு வலுவான அறிவுரையை முன்வைக்கிறார். பரிசுத்த ஆவியானவரே நம்மை அனல் மூட்டுகிறவர். எனவே, உயர்ந்த இலட்சியத்தைத் தொடரும்போது, நாம் வெட்கப்பட முடியாது. ஒருவேளை இது நமது ஆவிக்குரிய அனலை ஆராய ஒரு முக்கியமான தருணமாக இருக்கலாம். **மிஷனெரிப்பணி ஒரு சாதாரண வெதுவெதுப்பான நிலையில் உயிர்மீட்சியடைய முடியாது. மாறிவரும் உலகளாவிய சூழல், நமது சாதாரண வெதுவெதுப்பான செயல்பாட்டு நிலைக்கும் மேலாக வீரியத்துடன் எழும்பி நமக்குச் சவால் விடுப்பதைக் காண்கிறோம். ஆகையால், நாம் உருக்கமான ஜெபங்களின் மூலம் நமது ஊழியச்செயல்பாடுகளில் ஆர்வத்தையும் வாஞ்சையையும் கூடுதலாக்கிக் கொள்ள அழைக்கப்படுகிறோம்.**

செல்போனில் உலகளாவிய செய்திகள் விரைவாகக் கிடைப்பதால், அநேகர் மன்றாட்டு ஜெபத்தில் நேரத்தைச் செலவிடுவதை விட தகவல்களைச் சேகரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். *"கர்த்தருக்காக நீங்கள் செய்யும் மிகப்பெரிய வேலை, அவருடைய சித்தத்திற்கேற்ப அவருடன் பரிந்து பேசுவதே"* என்று வெஸ்லி எல். டுவல் என்கிற ஒரு தேவமனிதர் குறிப்பிடுகிறார். 'மன்றாட்டு ஜெபம்' என்பது தேவனின் ராஜ்யத்தை நிறுவுவதற்கான ஒரு வல்லமை வாய்ந்த கருவியாகும். அதனால்தான், டுவல் என்பவர் நமது மன்றாட்டு ஜெபம் அநேக காரியங்களுக்காக நாம் தேவனிடம் மன்றாடுவதாக இருக்க வேண்டுமென வலியுறுத்துகிறார். **"வேறு எந்தவிதமான கிறிஸ்தவ ஊழியத்தையும் விட, ஜெபத்தின் மூலமே நம்மால் நம்மை தேவனின் திட்டங்களோடு முழுமையாக இணைக்க முடியும்," என்று அவர் குறிப்பிடுகிறார்.**

எரிகோ கோட்டையைத் தகர்ப்பதற்கு இஸ்ரவேலர்கள் செய்த பெரிய ஆற்றல்மிக்க காரியங்களை நாம் நம் நினைவில் கொள்ள வேண்டும். இஸ்ரவேலர்கள் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து கொண்டு, ஆறுநாட்கள் எரிகோ கோட்டையை ஒருதரம் சுற்றி வந்தார்கள். ஆனால், ஏழாவது நாள் அவர்கள் அக்கோட்டையை ஏழுதரம் சுற்றி வந்தார்கள். அதாவது, ஏழாவது நாள் தங்களது முழு சக்தியையும் மிகவும் கடினமாகப் பயன்படுத்தினார்கள் என்பதுதான் அதன் முழுமையான அர்த்தமாகும். ஏழாவது சுற்று முடிந்தவுடன், எரிகோவின் அலங்கம் இடிந்துவிழும்போது, போர்வீரர்கள் உடனேயே விரைந்தோடி அப்பட்டணத்திற்குள் நுழைந்து அதைக் கைப்பற்றினார்கள் என அறிகிறோம்.

ஆம், தேவ தரிசனத்தை நிறைவேற்றுவதற்கு மனமுவந்த கடின முயற்சி மிகவும் அவசியம். ஜாண் சி. மேக்ஸ்வெல் என்கிற வேதப்பண்டிதர் இதைத்தான், "நம்மை

நீண்டுக்கொடுக்க வேண்டும்'' என்று குறிப்பிடுகிறார். அதாவது, **நாம் ஒரு ரப்பர்பேண்ட் போல இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். ஒரு ரப்பர்பேண்ட் நீட்டப்படாத வரை அது பயனற்றுக் காணப்படும். அதுபோல நாமும் சவால்களைக் கண்டு சுருங்கிப்போவோ மானால், தோற்றுப்போவோம். தேவன் கொடுத்த தரிசனத்திற்கேற்ப நாம் நம்மை நீண்டுக்கொடுத்தால்தான், நாம் அதிலிருந்து பின்வாங்குவதற்கு இடமே இருக்காது.** பவுல் எருசலேமுக்குச் செல்லும்போது, வரவிருக்கும் ஆபத்து பற்றிய தீர்க்கதரிசனங்கள் அவருக்கு வந்தவண்ணமாகவே இருந்தன (அப். 21: 3-5, 8-14). ஆயினும், அவர் தனது பயணத்தை நிறுத்தவில்லை. தேவனின் சித்தத்தைத் தொடர்ந்து செய்தவற்கான அவரது ஆற்றலின் ரகசியம் அவருடைய உறுதியான நிலைப்பாட்டில் இருந்தது; அதாவது, தேவனுடைய திட்டத்தை நிறை வேற்றுவதற்காக அவர் மரிக்கவும் தயாராக இருந்தார் (அப்.20:24, 21:13). தேவன் கொடுத்த தரிசனத்தை நாம் தொடர்ந்து செய்வதற்குப் பேராவல், துன்பத்தை ஏற்றுக்கொளல் மற்றும் விடாமுயற்சி என பெரும் ஆற்றல் நமக்குத் தேவைப்படுகிறது. **தேவ ஊழியத்தில், தேவைகள் தனிநபர் களின் இலக்கிற்கு அப்பாற்பட்டவை. எனவே, ஒன்றிணைந்த முயற்சியே ஒரு பெரிய தரிசனத்தை நிறைவேற்றுகிறது.**

## 3. ஒன்றிணைந்து முயற்சிக்கும் தரிசனம்

"ஒன்றுபட்ட முயற்சியானது-படைப்பாற்றல், உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறனில் வித்தியாசத்தை ஏற்படுத்துவதற்கான பெரும் ஆற்றலைக் கட்டவிழ்த்து விடும்" என்று ஒருவர் கூறுகிறார். 2சாமுவேல் 10-ம் அத்தியாயத்தில், அம்மோனியர்கள் தாவீதுக்கு எதிராக எழும்புகிற ஒரு போர்ச்சூழலை நாம் காணலாம். அங்கு அம்மோனியர்கள் இஸ்ரவேலர்களுக்கு எதிராகப் போரிடுவதற்காக சீரியர்களையும் மற்றவர்களையும் வேலைக்கு அமர்த்து கிறார்கள். எதிர்ப்புறத்தில் யோவாப் மற்றும் அவரது சகோதரர் அபிசாயும், அங்கு இஸ்ரவேலர்களை அம்மோனியர்களுக்கு எதிராகப் போரில் வழிநடத்த வேண்டும். அப்போது போர்க்களத்தில் தனது சகோதரர் களிடம் யோவாப் சொல்வது மிகவும் சுவாரஸ்யமானது –

> **"சீரியர் கைமிஞ்சுகிறதாயிருந்தால் நீ எனக்கு உதவிசெய்யவேண்டும்; அம்மோன் புத்திரர் கைமிஞ்சுகிறதாயிருந்தால் நான் உனக்கு உதவிசெய்ய வருவேன்."**
> **( 2 சாமுவேல் 10:11 )**

போர்க்களத்தில் ஒன்றிணைந்து செயல்பட முயற்சிப்பதற்கு இது ஒரு சிறப்பான உதாரணமாகும். நமக்குரிய பொதுவான தேவ திட்டத்தில் நாம் ஒன்றிணைந்து செயல்பட முயற்சிக்க வேண்டும்.

எண்ணாகமம் 32-ல், ரூபன் மற்றும் காத் புத்திரர்கள் யோர்தான் நதியைக் கடக்க வேண்டாம் என்று மோசேயிடம் கோரிக்கை வைப்பதைப் பார்க்கிறோம். அவர்கள் மிகப்பெரிய ஆடுமாடு மந்தைகளைக் கொண்டிருந்ததாலும், யாசேர் மற்றும் கீலேயாத் தேசங்களைக் கால்நடைகளுக்கு ஏற்றதாகக் கண்டதாலும், அவர்கள் அத்தேசங்களைச் சொந்தமாக்கிக் கொண்டு அங்கேயே வாழ விரும்பினர். மோசே அவர்களின் வேண்டுகோளைப் பற்றி மகிழ்ச்சியடையவில்லை. ஏனென்றால், அவர்கள் சுயநலமுடையவர்களாகவும், கானானைக் கைப்பற்றுவதற்கான பொதுவான இலக்கை இழந்தவர்களாகவும் காணப்பட்டதைக் கண்டு, மோசே அவர் களைக் கடிந்து கொண்டார். மோசேயின் கடினமான பதிலைக் கேட்டபின், அவர்கள் தங்கள் மனைவிகளையும் பிள்ளை களையும் விட்டுவிட்டுத் தங்கள் சக

இஸ்ரவேலர்களுடன் போரில் சேர தயாராக இருப்பதாகத் தெரிவித்தனர். இன்றைய நமது ஊழியத்தின் தரிசன செயலாக்கத் திற்கு இந்த வேதாகமப்பகுதியிலிருந்து சில பாடங்களையும், வழிகாட்டுதல்களையும் நாம் கற்றுக்கொள்ளலாம் –

1. சுயநலம் ஒன்றிணைந்த செயல்பாட்டு முயற்சிக்கு தடையாகக் காணப்படும்.

2. நாம் நமது சகவிசுவாசிகள் மற்றும் சகஊழியர்கள் மேல் கரிசனை கொள்ள வேண்டும்.

3. பொதுவான திட்டமாக இருந்தால், அதில் நாம் ஒன்றிணைந்து செயல்பட முயற்சிக்க வேண்டும்.

4. கடைசிவரை போரிடுவோம் என்பதில் உறுதிபாடு கொள்ள வேண்டும் (எண்.32:18).

5. ஒன்றிணைந்த செயல்பாட்டு முயற்சியில் நாம் எந்தவொரு தனிப்பட்ட பிரயோஜனத்தையோ, பயனையோ எதிர்பார்க்கக் கூடாது (எண்.32:19).

நாம் நமது சகோதர, சகோதரிகளுடன் போரில் இணைந்து செயல்படத் தவறினால், அவர்கள் சோர்வடைந்து போர்க்களத்தி லிருந்து விலகிவிடுவார்கள். இறுதியில் அது, தேவனுடைய நமக்கான திட்டத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும் (எண்.32:6-15).


நாம் இன்று நமது மிஷனெரிப்பணியில் தொலைநோக்கு தரிசனப் பார்வையுடன் கூடிய முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். நம்மைச் சுற்றி அதிகரித்து வரும் சவால்கள் நம்மை இளைப்படையச் செய்து, நம்மை ஊழியத்திலிருந்து விலகும்படி நம்மைக் கட்டாயப்படுத்தலாம். நாம் இணைந்து நின்று ஒருவருக்கொருவர் உதவிசெய்து ஊழியத்தில் செயல்பட்டால், நாம் நமது தரிசனத்தில் வெற்றியை நோக்கி முன்னேறுவோம். தரிசனத்தைக் குறித்த தெளிவான புரிதல், தரிசனத் தாகம், ஆவிக்குரிய வாஞ்சை மற்றும் தேவைக்கேற்ப நம்மை நீண்டுக்கொடுக்க அனுமதித்தல் போன்றவை நாம் நமது தேவனின் தரிசனத்தை நிறைவேற்ற நமக்குப் பெரிதும் உதவும். கர்த்தர் தாமே அதற்கு நமக்கு இப்புதிய வருடத்தில் கிருபை பாராட்டுவாராக!

**– அருள்திரு. I.K. ஆபிரகாம்**
FMPB – முன்னாள் பொதுச்செயலாளர்

# மகிமைக்குள் பிரவேசித்தார்



தூத்துக்குடி, மில்லர்புரம் – ஜெபக்குழுத்தலைவி திருமதி. D. டெய்சி கிரேஸ் ஜோசப் அவர்கள், ஆசிரியையாக பிரையட்நகர் பள்ளியில் வேலை செய்த நாட்களில் அனைத்து ஆசிரியர்களையும் அழைத்து ஜெபக்குழு நடத்தி வந்தார்கள். இவர் மில்லர்புரம் ஆலயத்தில் பெண்கள் ஐக்கிய தலைவியாகச் செயல்பட்டு வந்த நாட்களில் நமது இயக்கத்தின் ஊழியத்திற்காக ஜெபக்குழு அமைத்து ஜெபித்ததோடு, காணிக்கைகளையும் சேகரித்து வந்தார். மிஷனெரி ஊழியத்தின்மீது மிகுந்த பாரமுள்ள இவர் தனது சரீர சுகவீனத்தினால் பாதிக்கப்பட்டு, கடந்த 04.06.2021 அன்று தேவ மகிமைக்குள் பிரவேசித்தார். அந்தப் பணிகளை இவரது கணவர் திரு. V. துரைபாண்டி அண்ணன் அவர்கள் செய்து வருகிறார்கள். இவர் விட்டுச் சென்றுள்ள குடும்பத்தினருக்காக ஜெபித்துக்கொள்வோம்.



# திருச்சபை - மிஷனெரி இயக்க உறவின் முன்னோடித் தலைவர்
# அருள்திரு. அறிவர். பேராசிரியர். J.T.K. டேனியல் அவர்கள்!
## (28.12.1938 - 04.12.2021)



சகோதரர்களான அற்புதராஜ், ஜூலியஸ் குடும்பங்களோடு J.T.K. அண்ணன் குடும்பம்

டாக்டர். J.T.K. டேனியல் அவர்கள் ஒரு கல்வியாளர், மிஷனெரிப்பணியியலார், ஆலோசனை மற்றும் அறிவுரையாளர். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவைக் (FMPB) கட்டமைத்தவர்களுள் ஒருவரான இவர், நமது இயக்கத்தின் ஆரம்ப காலங்களிலிருந்தே அதன் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றினார். தென்னிந்திய திருச்சபைப் (CSI) போதகரின் மகனான இவர், CSI சென்னைப் பேராயத்தின் குருவானவராகவும், மிஷனெரிப் பணியில் வாஞ்சையுடையவராகவும் இருந்ததால், திருச்சபை - மிஷனெரி இயக்கங்களுக்கிடையே நல்லுறவை உருவாக்குவதிலும், மேம்படுத்துவதிலும் சிறந்த முன்னோடியாகச் செயல்பட்டார். கடந்த 50 ஆண்டுகளாக கிறிஸ்தவ உலகில் முக்கியத்துவம் வாய்ந்த அவரது எழுத்துக்களும், அருளுரைகளும், ஈர்க்கத்தக்க தலைமைத்துவப் பண்புகளும் என்றென்றும் நமது நினைவலையில் பொறிக்கப்படத்தக்கதாகும்.

டாக்டர். J.T.K. டேனியல் அண்ணன் அவர்கள், 1938-ம் ஆண்டு டிசம்பர் 28-ம் தேதி, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள நாசரேத் எனும் ஊரில் பிறந்தார். இவருக்கு இரு மூத்த சகோதரிகளும், ஒரு இளைய சகோதரியும், இரு இளைய சகோதரர்களும் உண்டு. இவர் நமது இயக்கத்தின் முன்னோடித் தலைவர் சகோ. P. சாமுவேல் அவர்கள் செய்தியளித்த கூட்டத்தில் இயேசுவைச் சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டார். அதோடு இவர் தனது உடன் பிறப்புகளையும் கிறிஸ்துவண்டை வழிநடத்தினார். அதன் விளைவாக, இவரது ஒரு சகோதரர் திரு. அற்புதராஜ் அவர்கள் ஆசிரியராகவும், திருச்சபை மற்றும் வாலிபர் கூடுகைகளின் சிறப்புச் செய்தியாளராகவும், இவரது மற்றுமொரு சகோதரர் திரு. ஜூலியஸ் அவர்கள் அரசு வருவாய்த்துறை அதிகாரியாகவும்,

இந்தியன் இவாஞ்சலிக்கல் வாலிபர் ஐக்கிய ஊழியத்தில் (UESI) பொறுப் பாளராகவும், பின்னர் அதன் தலைவ ராகவும் செயல்பட்டு வந்தார்கள். இவர், திரு. சாம் தனசீலன் மற்றும் நமது இயக்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் சகோ. பேட்ரிக் ஜாஷ்வா அவர்களோடு சேர்ந்து புனித யோவான் கல்லூரி ரீயூனியன் ஃபெல்லோஷிப்பின் (St. John's College Reunion Fellowship) மூலம் தீவிரமாக ஊழியத்தில் ஈடுபட்டு வந்தார். அதன் விளைவாக அநேக ஆவிக்குரிய தலைவர்கள் எழும்பலா யினர். இவர் நியூசிலாந்தின் டுனெடினில் (Dunedin) உள்ள நாக்ஸ் கல்லூரி யில் (Knox College) இறையியல் பட்டப்படிப்பையும், மெட்ராஸ் பல்கலைக் கழகத்தில் 'தத்துவயியலில்' முனைவர் பட்டப்படிப்பையும், படித்து முடித்தார். அதைத் தொடர்ந்து, இவர் கணிதப் பேராசிரியராக வேலூரில் உள்ள ஊரிஸ் (Voorhees) கல்லூரியிலும், சாயர்புரத்தி லுள்ள போப்ஸ் கல்லூரியிலும், பின்னர் 1965 முதல் 1990-ம் ஆண்டு வரை சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பேராசிரியராகவும், சிற்றாலய குருவான வராகவும் பணியாற்றி, அக்கல்லூரி யிலேயே கிறிஸ்தவக்கல்விக்கான ஒரு துறையையும் உருவாக்கினார். இவர் 1990 முதல் 1998-ம் ஆண்டு வரை மேற்கு வங்காளத்திலுள்ள செராம்பூர் கல்லூரியின் முதல்வராகச் செயல்பட்டதுடன், மிஷனெரி வில்லியம் கேரி நூலகத்திலுள்ள விலைமதிக்க முடியாத வரலாற்றுச் சிறப்புமிக்க நூல்கள் மற்றும் ஆவணங்களைப் பாதுகாப்பதி லும், புதுப்பிப்பதிலும் இவருடைய பங்கு பெரிதும் காணப்பட்டது.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழிய-நிர்வாக ஒழுங்குமுறைகளை (Manual for Missionaries) இவர் எழுதியமைத்ததுடன், நமது இயக்கத்தில் 1966-ம் ஆண்டில் கௌரவ பொதுச்செயலாளராகவும், நமது இயக்கத்தின் பத்திரிக்கையான 'அறைகூவலின்' ஆசிரியராகவும் செயல்பட்டு வந்தார். மேலும், நமது இயக்கத்தின் செயற்குழுவின் நீண்டக்கால உறுப்பினராகவும், உயர்கல்விக் குழுவின் தலைவராகவும் இருந்தார். மிஷனெரிகளை உருவாக்குவதிலும், அவர்களுக்கு ஆலோசனை கொடுப் பதிலும், வழிகாட்டுவதிலும் இவர் மிகவும் முக்கியப்பங்கு வகித்து வந்தார். இவர் மிஷனெரிகளை அதிகம் நேசித்ததால், இவருடைய வீடு அநேக மிஷனெரி களுக்கு 'விருந்தோம்பலின் இல்ல மாகக்' காணப்பட்டது. இவர் நமது இயக்கத் தின் அனைத்து மிஷனெரிகளாலும் "J.T.K. அண்ணன்" என்று பாசத்துடன் அழைக்கப் பட்டார்.

நமது இந்திய தேசத்தைச் சுவிசேஷத் தால் சந்திப்பதற்கு இவர் 'திருச்சபை மற்றும் மிஷனெரி இயக்கங்களின்' தலைவர்களை ஒன்றிணைத்து அநேக கூட்டங்களை நடத்தினார். இவருடைய ஊழிய - சித்தாந்தம் திருச்சபை - மிஷனெரி இயக்கங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தியதோடு, நமது மிஷனெரிப்பணி ஊழியங்கள் வரலாற்று திருச்சபைகளில் நல்லதொரு வரவேற்பையும் அங்கீ காரத்தையும் பெற உதவியது. நமது பணித்தளங்களிலுள்ள இளம் திருச் சபைகளை வடஇந்திய திருச்சபை (CNI) - குஜராத் பேராயத்தோடு ஒருங் கிணைத்ததில் இவரது பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். மிஷனெரிகள் கிரமமாக இறையியல் கல்வியைக் கற்று ஊழியத்தில் திறம்படச் செயல்பட இவர் வழிவகுத்தார். இவர் நமது மிஷனெரிப்பயிற்சி மையத்

திலும், பெத்தேல் வேதாகமக்கல்லூரி யிலும் அதற்கான பயிற்சிகளை நடத்தினார். அதோடு, பணித்தளத்தி லுள்ள விசுவாசிகளுக்கும் ஜெபக்குழுத் தலைவர்களுக்கும் வேதாகம மற்றும் ஊழியப்பயிற்சி கொடுப்பதற்கான புத்தகங்களை ஊழியம் செய்யும் இடத்தின் கலாச்சாரப் பின்னணியத்தின் அடிப்படையில் எழுதி வெளியிட ஊக்கப் படுத்தினார். நமது இயக்கத்தின் தமிழ் நாடு மாநில முகாமில் திருவிருந்து ஆராதனையை அறிமுகம் செய்து, இயக்கமாக திருச்சபையோடு நமது உறவையும், மிஷனெரிப்பணி சிந்தைக் கொண்ட கிறிஸ்தவர்களுக்கிடையே நல்லுறவையும் ஏற்படுத்தினார்.

டாக்டர். J.T.K. டேனியல் அண்ணன் அவர்கள், நல்லதொரு குடும்பத்தலைவர். காலஞ்சென்ற அவரது அன்பு மனைவி திருமதி. பியூலா டேனியல் அவர்கள், தனது கணவரின் எல்லா உயர்வு தாழ்வு களிலும் அவருக்கு உறுதுணையாக இருந்தார்கள். தேவன் இத்தம்பதி யினரை ஒரு மகனாலும் ஒரு மகளாலும் ஆசீர்வதித்துள்ளார். இவரது மூத்த மகன் டாக்டர். சுந்தர் டேனியல் அவர்கள், உத்தராகண்ட் – ரூர்கியிலுள்ள இந்தியன் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜியில் (IIT) பேராசிரியராகவும், மகள் திருமதி. ஷீலா லயனல் அவர்கள், சிங்கப்பூரில் தொழில்நுட்ப மாணவர்களுக்கு ஆசிரிய ராகவும் குடும்பத்துடன் கிறிஸ்துவுக்கு மகிமையாக வாழ்ந்து வருகிறார்கள். டாக்டர். J.T.K. டேனியல் அண்ணன் அவர்கள், தனது ஊழியங்களின் மத்தி யிலும் குடும்பத்தைக் கிறிஸ்துவுக்காகக் கட்டியெழுப்புவதில் அதிக கவனம் செலுத்தினார்கள். "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந் தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" (1தீமோ.3:5) என்ற பவுலின் வார்த்தைகளை இவர் தனது உடன் பிறப்புகளின் வாழ்விலும், தனது சொந்தக் குடும்ப வாழ்விலும் அப்பியாசப் படுத்தினார்.

டாக்டர். J.T.K. டேனியல் அண்ணன் அவர்கள், தனது முதுமையின் காரண மாக கடந்த சில வருடங்களாக மிகவும் பெலவீனத்தோடு காணப்பட்டார். ஆயினும், தன்னை நாடிவரும் நண்பர்களோடும் ஊழியர்களோடும் ஜெபித்து, கிரமமாக வேதாகம வகுப்புகள் நடத்தி சிறந்த ஆலோசனைகளை நல்கியும் வந்தார். 2021, டிசம்பர் 4–ம் தேதி அன்பு அண்ணன் அவர்கள் இவ்வுலக ஓட்டத்தை இனிதே முடித்து, தேவ மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவரது அடக்க ஆராதனை 5–ம் தேதி தூய மாற்கு ஆலயத்தில் வைத்து நடைபெற்று, பின்னர் அவரது சரீரம் சென்னை – மாடம்பாக்கம் கல்லறைத் தோட்டத்தில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு நல்லடக்கம் செய்யப்பட்டது. J.T.K. அண்ணனுடைய அர்த்தமுள்ள அழகிய வாழ்விற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். அண்ணனுடைய வாழ்க்கையின் வெளிச்சத்தில் நமது வாழ்க்கையை சுயபரிசோதனை செய்துப் பார்த்து, அவரிடமிருந்து நாம் கற்றுக் கொண்டவற்றை நமது வாழ்க்கையிலும் அப்பியாசப்படுத்துவதே அவர் விட்டுச் சென்றுள்ள ஊழியமரபை நாம் பின்பற்று வதின் அடையாளமாகத் திகழுமன்றோ!

– தகவல்: **திரு. J.A.S. ஜூலியஸ்**
IRS (Retd), Former President of UESI
(டாக்டர். J.T.K. டேனியல்
அண்ணனின் சொந்த சகோதரர்)

**– அருள்திரு. அறிவர். இ. ராஜன்**

# வாழ்த்தி வரவேற்கிறோம்!



தென்னிந்தியத் திருச்சபையின் திருநெல்வேலி மறைமாவட்டத்தின் பேராயராக மாமறைதிரு. பர்னபாஸ் அவர்கள், கடந்த நவம்பர் மாதம் 21-ம் தேதி, 2021- ல் பாளையங்கோட்டை பரிசுத்த திரித்துவ பேராலயத்தில் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். அவர்களை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பாக வாழ்த்தி வரவேற்கிறோம். தேவன் தம்முடைய நாம மகிமைக்காக இப்புதிய பேராயர் அவர்களைத் தொடர்ந்து பெலப்படுத்தி வல்லமையாகப் பயன்படுத்த ஜெபிப்போம்.

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு – அம்பத்தூர்
# மகளிர் மாநாடு – 2022 மற்றும் மிஷனெரிப் பிரதிஷ்டை

**நாள்:** 26.01.2022- குடியரசு தினம்

**நேரம்:** காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

**இடம்:** இம்மானுவேல் மெதடிஸ்ட் ஆலயம், P.K. தெரு, (மீன் மார்க்கெட் அருகில்), புதூர், அம்பத்தூர்.

**குறிப்பு:** பதிவு கட்டணம் ரூ.20/- மதிய உணவு வழங்கப்படும்.

சிறுவர்களுக்குத் தனி கூடுகை நடைபெறும். மகளிர் மற்றும் சிறுவர் உண்டிகளைப் படைக்கவும்.

**வேதவினா போட்டி:**
பேதுருவின் முதலாம் நிருபம் – மதிய உணவிற்கான இடைவேளையில் நடைபெறும்.

**தொடர்பு:** 94449 44188

# பணித்தள விஜயம் மற்றும் ஆலயப் பிரதிஷ்டை



தேவகிருபையால் மகாராஷ்டிரா மாநிலம், பெயின்ட் பணித்தளத்திலுள்ள வடோலி கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்ட ஆலயம், அக்கட்டுமானப்பணிக்கென நன்கொடையளித்த திருமதி. பியூலா டில்லிபாய் அவர்களின் குடும்பத்தாரால் கடந்த 06.11.2021 அன்று தேவநாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த வைபவத்தில் 500-க்கும் அதிகமான விசுவாசிகளும் கிராமத்தினரும் கலந்து கொண்டனர். இந்த ஊழியத்தைத் தங்களது ஜெபங்களாலும், உதாரத்துவமான காணிக்கைகளாலும், உழைப்பாலும் தாங்குகிற இக்குடும்பத்தினருக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

1 ஜனவரி
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கோன்கா கிரி பாபு, திரு. கின் சாவ்ம்
திரு. மீனுகா அடப்பா மேத்யூ
திருமதி. சரிதா பால், திருமதி. பியூலா S.
திரு. ஹெபல் ஹெம்ரோம்

## ஜம்மு

### ஜம்மு பிராந்தியம்: வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா

**துதிக்க:** புதிதாக 21 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். முந்தைய நாட்களில் நமது ஊழியத்தில் அதிக சவால்களைச் சந்தித்து வந்த பிளோர் கிராமத்தில் தற்போது ஊழியம் தடையின்றி நடந்து வருகின்றது. ஒருமாதக் காலமாக தனது குடும்பத்தினரை விட்டுப்பிரிந்து காணாமல் போயிருந்த படியல் கிராம இத்துவாரி மீண்டும் வீடு திரும்பியுள்ளார். கோவிந்தகார் கிராம நமது விசுவாசி ஜோதிக்கு குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜம்மு காஷ்மீரைச் சார்ந்த மலைப்பகுதிகளில் இன்னும் சுவிசேஷத்தைக் கேட்டிராத மக்களுக்காக; லியா, லடாக் ஆகிய மலைப்பாங்கான பகுதிகளில் நடக்கும் நமது ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட; சம்லா கிராம நேத்தார் சிங், நௌஷேரா கிராம ரிங்கு பக்கவாதத்திலிருந்தும், ரக்கா கிராம சரிதா தேவி மற்றும் படியல் கிராம விக்கி சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், சாக்ராய் கிராம சுனிதா பில்லிசூனியத்தினால் உண்டான மனநோயிலிருந்தும் சுகம் பெற; இரண்டு குழந்தைகளோடு ஆதரவற்ற நிலையில் தனித்து விடப்பட்டிருக்கும் அனு தேவியின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

### நரோத்: ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயும் பிரியா தேவி

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. நமது விசுவாசி சுனிலின் திருமணம் எவ்விதப் பணக்கஷ்டமுமின்றி சிறப்பாய் நடந்தேறியுள்ளது. தல்லி கிராம கிருஷ்ணாவை மூச்சுத்திணறல் பிரச்சனையிலிருந்தும், ஜெபத்தின் மூலம் அஜய்பாய் மற்றும் அவரது குடும்பத்தினரை அசுத்த ஆவியின் பிடியிலிருந்தும் தேவன் சுகமாக்கியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நரோத் பணித்தளத்தில் ஆலயம் கட்டத் தகுந்ததோர் நிலம் கிடைக்க; நமது விசுவாசி அன்சுவிற்கு நல்லதோர் வேலை கிடைக்க; கிருஷ்ணாபாயிற்கு மூச்சுத்திணறலிலிருந்து சுகம் கிடைக்க; ஊழியத்திற்கு ஆயத்தமாகும் நமது விசுவாசி சாஹில் தனது வேதாகமப்படிப்பை நிறைவு செய்ய; அமன்தீப் மற்றும் அவரது சகோதரரின் குடும்பங்களுக்கிடையே மெய் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

### *சுவிசேஷ விதை துளிர்த்த விதம்!*

*சத்தீஸ்கட், பையதான் பணித்தளம். 6 மாதங்களுக்கு முன்பு துமு கிராம சோட்டு அகரியா என்பவர் நமது வெளிப்புற சந்திப்பு ஊழியக்குழுவினர் மூலம் முதன்முறையாகச் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளார். பின்னர் சில மாதங்கள் கழித்து, நமது ஊழியர்கள் இவரைச் சந்தித்தபொழுது, 'சுவிசேஷ விதை தன் இதயத்திற்குள் விழுந்தவுடன், தனக்குள் ஏற்பட்ட வாஞ்சையினிமித்தமாக Youtube சேனலின் மூலம் இயேசு திரைப்படத்தைப் பார்த்து தானாகவே தேவனிடம் ஜெபித்து தனது சரீர பெலவீனத்திலிருந்து சுகம் பெற்றதாகவும், அதன்பின், இயேசுவின்மீது தான் இன்னும் விசுவாசம் வைத்து அவரைத் தன் சொந்த இரட்சகராகப் பின்பற்றி வருவதாகவும்' கூறினார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!*

## 2 ஜனவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஞானம் ஃபிலிப்
திருமதி. மேகலை செல்வி பிரபாகர்
திரு. நாத்தான் குமார் பெபர்தா
திருமதி. மஹாலே ஏமன்பேன் பான்சிங்
திரு. முன்னா மொஹன்தியர்
திரு. ரவுத் சுபாஷ்பாய் லானுபாய்
திரு. உப்தேஷ் குமார்

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சிறு பிள்ளைகளுக்கென நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியின் மூலம் 19 பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். காஷா கிராம அஜய் குமாருக்குப் பெயர் பதிவீட்டினிமித்தம் பிரச்சனைக்குட்பட்டிருந்த அவரது வெறுமையான நிலத்தில் தற்போது பயிர்களைப் பயிரிடும்படியான நிலையை தேவன் அமைத்து கொடுத்துள்ளார். பக்கான் கிராம சுனிலின் திருமணத்தைக் கிறிஸ்தவ முறையில் நடத்த தேவன் உதவி செய்துள்ளார். காஷுபேட் கிராம ஆலயக்கட்டுமானப்பணிக்கான பத்திரப்பதிவீட்டு வேலை மிகச்சிறப்பாய் நடந்தேறி வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசிகளில் முக்கியமாக நர்மந்த் பகுதி விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; காஷுபேட் கிராமத்தில் ஆலயம் கட்ட இருக்கும் தடைகள் நீங்க; அதிக எதிர்ப்புகளின் மத்தியில் நின்று போராடும் நமது புதிய விசுவாசி பிரஸ்தி தேவி தனது விசுவாசத்தில் உறுதியாய் நிற்க; நிஷு தாகூர் கண்பார்வைக் கோளாறிலிருந்தும், பாவ்தீப் வயிறு சம்பந்தமான தொற்றிலிருந்தும் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## ரோஹ்ரு:
### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** சூரா கிராமத்திலிருந்து புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது விசுவாசிகள் தாங்களாகவே ரூச்சி கிராமத்திற்குச் சென்று மக்களுக்குச் சுவிசேஷம் அறிவித்துள்ளனர். சாந்தினிகாத் மற்றும் அட்டால் பகுதிகளில் நமக்குப் புதிய தொடர்பாளர்களை தேவன் ஊழியத்தில் தந்துள்ளார். குடும்பத்தினரிடையே உண்டான கருத்து வேறுபாட்டினிமித்தம் சில நாட்களாகக் குடும்பத்தை விட்டுப்பிரிந்து சென்ற நமது விசுவாசி மாத்துரு தேவியின் மகன் மீண்டும் வீடு திரும்ப தேவன் கிருபை செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது மகனின் மனநோயினிமித்தம் ஆலயத்திற்குக் கிரமமாக வர முடியாமல் தவிக்கும் சிவராமின் குடும்பத்திற்காக; கும்மா பகுதி மக்களுக்குக் கர்த்தரைத் தொழுதுகொள்வதற்கான நல்லதொரு இடம் கிடைக்க; நமது விசுவாசிகளான முகேஷ், பூஜா, ஷெர் சிங், சந்தீப், சுபத்திரா, பிரமோத், உஜ்லி, குஷா ஆகியோர் TAFTEE வேதாகம வகுப்பில் தவறாமல் பங்குப்பெற; பிஜ்லால் சரீரக்கட்டிகளிலிருந்தும், ராகுல் தொண்டை சதை வளர்ச்சிப் பிரச்சனையிலிருந்தும், மன்தீப் மனநோயிலிருந்தும் அற்புத சுகம் பெற; தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து ருமிலா, வினோத், ரிச்சி, நீமா மற்றும் மோகன்லாலின் மாமாவிற்குப் பூரண விடுதலை கிடைக்க ஜெபிப்போம்.

## 3 ஜனவரி
திங்கள்

### ஆனி:
### ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்துள்ளனர். புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. நமது புதிய தொடர்பாளர்களான சஞ்ஜய், பிங்கு, ரிங்கு, பகத்ராம், குஷும் ஆகியோர் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றனர். தனது குடும்பத்தினரோடு ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் நான்கு மாதங்களாக அவர்களை விட்டுப் பிரிந்தி ருந்த நமது விசுவாசி சஞ்ஜுவின் மகன் சமாதானத்துடன் வீடு வந்து சேர்ந்துள்ள தற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பந்தல், நீதர், கிஹார் ஆகிய பகுதிகளின் திருச்சபை மக்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சஞ்ஜய் மற்றும் ராம் தியால் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுபட; இடுப்புப்பகுதி புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் நமது புதிய தொடர் பாளர் பகத்ராமிற்கும், பக்கவாதத்தினால் அவதிப்படும் ஷீலாவிற்கும் தேவன் பூரண சுகம் தர ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### ஜைத்தோ: சித்தரஞ்சன் தான்டி & தேஜேஸ்விதா

**துதிக்க:** முதன்முறையாக 8 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள் ளனர். தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து இந்தர்ஜீத் கௌர், கசால் கௌர், பூனம் மற்றும் நிஷா கௌரை தேவன் விடுவித்துள்ளார். காமியர் மக்களினம் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கத் தொடங்கியுள்ளனர். ஊரடங்கி னிமித்தம் தங்களது வேலைகளை இழந்த நமது விசுவாசிகளில் அநேகர் மீண்டும் அவ்வேலைகளைத் திரும்பப் பெற தேவன் கிருபை செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜாங்பகதூர் சிங், கஷ்பீர் சிங், ஊர்மிளா கௌர், விஜய் குமார், நானு சிங் மற்றும் ராஜு தேவ அன்பை ருசிக்க; நமது ஊழியத்தின்மீது எதிர்க்கருத்து கொண்டி ருப்போர் மனந்திரும்ப; கசாம்பட்டி கிராம நமது புதிய தொடர்பாளர் நிர்மலா கௌர் கர்ப்பப்பை புற்றுநோயிலிருந்தும், வீர்பால் கௌர் மற்றும் பல்தேவ் சிங் பக்கவாதத்தி லிருந்தும் சுகம் பெறவும், அங்ரஜ் சிங் மற்றும் பரம்ஜீத் சிங் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்படவும் தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

## நம்பிக்கையின் தேவன்!

*மத்தியப் பிரதேசம், கால்வா பணித்தளம். தமா கிராமத்தைச் சார்ந்த சங்கீதா இரத்தச்சோகை பெலவீனத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டு, 6.5% இரத்த அளவிற்கும் கீழான நிலையில் தனது பிரசவகாலத்தை எதிர்நோக்கி மிகுந்த பயத்துடன் காத்திருந்தார். அவருடைய மிகுந்த சரீர பெலவீனத்தினிமித்தம் குடும்பத்தினரும் மிகுதியான அச்சத்துடன் அவரைப் பிரசவத்தி ற்கு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல கூட தயங்கினர். ஏனெனில், அவர் தடுப்பூசியும் போட்டுக்கொள்ளாமல் இருந்தார். அவருடைய வீடும் காட்டின் உட்பகுதியில் மருத்துவமனை வசதிகள் ஏதுமில்லாத சூழ்நிலையில் அமைந்தி ருந்தது. எனவே, அவருடைய பயம் அவரை அதிகப் படியான மனச்சோர்புக்கு ஆளாக்கியது. அவர்கள் யாவருக்கும் இருந்த ஒரேயொரு நம்பிக்கை இயேசு மாத்திரமே. அவருக்காக அனைத்து ஊழியர்களும் விசுவாசிகளும் நம்பிக்கையுடன் ஜெபித்தனர். என்ன ஆச்சரியம்! ஒருநாள் யாரு மில்லாத நேரத்தில் சுகமான முறையில் ஆண் குழந்தையொன்றை எச்சிக்கலுமின்றி பெற்றெ டுத்தார். பின்னர் அச்செய்தியறிந்த அவரது குடும்பத்தார் அனைவரும் ஓடோடி வந்து தாயையும் சேயையும் நலமுடனிருக்கக் கண்டனர். பின்னர் யாவரும் தம்மை நம்பினோரைக் கைவிடாத கர்த்தருக்கு ஒருமனதாய் நன்றியுடன் ஸ்தோத்திரம் செலுத்தினர். அல்லேலூயா!*

## 4 ஜனவரி
செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஐவி நிக்கல்சன்
திருமதி. பாக்கியம் கொர்நேலியு
திருமதி. ருக்மா தேகம் சுரேஷ்
திரு. பும்சோன்சின், திரு. லால் கிஷோர் முர்மு

### மோகா:
**ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி**

**துதிக்க:** புதிதாக 11 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். காட்டு கௌரின் குடும்பத்தில் உண்டான சமாதானத்தின் பொருட்டு, கணவனும் மனைவியும் ஒன்றாக இணைந்து வாழ்கின்றனர். 13 நாட்களாகக் காணாமல் போயிருந்த ககன்தீப் சிங் மீண்டும் நலமுடன் வீடு திரும்பியுள்ளார். மூளை அறுவை சிகிட்சை பெலவீனத்திலிருந்து சுர்ஜித் கௌருக்கும், கால் புண்களிலிருந்து குல்வந்த் சிங்கிற்கும் மற்றும் இடுப்புப்பகுதியில் உண்டாயிருந்த கட்டியிலிருந்து கரம்ஜீத் கௌருக்கும் தேவன் அற்புத சுகம் தந்துள்ளார். பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் மனியா கௌருக்கு தேவன் கொடுத்துள்ள விடுதலைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடி மற்றும் புகைப்பழக்கங்களுக்கு அடிமையாகி இருக்கும் மன்பிரீத் சிங், லத்தி சிங், கரண், கலா, சிண்டு, ககன்தீப், மஜுர், மிண்டு ஆகியோர் குடும்பமாக மீட்கப்பட; நமது ஆலய ஆராதனைக்குத் தொடர்ச்சியாக வந்து பங்குப்பெறாமல் இருப்போர் மனமாற்றம் பெற; நமது விசுவாசிகளான ரஜினி கௌர், ஜோதி, கன்சால், ஆமான் ஆகியோருக்குத் தகுந்த வாழ்க்கை துணைகளமைய; சுவிசேஷத்திற்குச் செவிமடுக்கும் பப்லி கௌர், பிந்தர் கௌர், காகு கௌர், ரேகா கௌர், ஆர்த்தி, மது, சன்னி, ஜஷ்வீர் ஆகியோரது இரட்சிப்பிற்காக; நமது விசுவாசிகளான ரிக்கி, நஸ்ரான், ரோஷன், சீமா, கோஹா, கிச்சு கௌர் ஆகியோருக்கு மழலை பாக்கியங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

### நிஹால் சிங் வாலா:
**சிவசங்கரன் & மெர்சி எலிசபெத்**

**துதிக்க:** 14 வயது நிரம்பிய ஹர்லின் என்ற இளம் பெண் தனது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளார். பெண்கள் வேதாகம வகுப்பு, பெண்கள் ஜெபக்குழு, வாலிபப் பெண்கள் கூடுகை, உபவாச ஜெபக் கூடுகை, இரவுநேர ஜெபக்கூடுகை, ஞாயிறு வேதாகம வகுப்பு & ஆராதனை, திருச்சபை ஆலோசனைக்குழு கூடுகை மற்றும் பின்தொடர்பணி ஊழியங்களைப் பலவிதங்களில் தேவன் ஆசீர்வதித்துத் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்களான ஜோதி, சோனியா, புஷ்பா, சரப் ஜீத், கானல் ஆகியோர் தங்களது விசுவாசத்தைத் தைரியமாக அறிக்கையிட; குடிப்பழக்கத்திலிருந்து சக்தார் சிங், மங்கல், பூல் சாந்த், குர்மீத், ரிஷாம், ரஞ்சித், ஷெரி ஆகியோர் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

**5** *ஜனவரி*
புதன்
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. சுரேஷ் மால்தோ
திருமதி. இவாஞ்சலின் P.
செல்வி. மனிஷா லக்ரா

## ஃபரித்கோட்:
### ஸ்டீபன் R. & சிவகாமி

**துதிக்க:** 4 கிராமங்களில் நடத்திய வெளிப்புற சந்திப்பு ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்துத் தந்துள்ளார். சபாவாலி கிராம பிரீத் தனது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளார். காமியானா பஸ்தி கிராம ஜாக்ரூப்பின் பேரனுடைய திருமணம் சிறப்பான முறையில் நடந்து முடிந்துள்ளது. திராப்தியைக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும், சபாவாலி சிந்து கௌரைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்கி யுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகளின் ஆவிக் குரிய வளர்ச்சிக்காக; சமீபத்தில் தனது மூத்த மகனை இழக்கக்கொடுத்தி ருக்கும் சரஞ்சனின் மனஆறுதலுக்காக; ராஜஸ்தானிலுள்ள பஞ்சு ஆலையில் பணிச்செய்ய புலம் பெயர்ந்து சென்றி ருக்கும் நமது விசுவாசிகள் ஏற்ற வேளைகளில் சுகப்பத்திரமாய்த் தங்களது வீடு வந்து சேர; சபாவாலி கிராம லவ்பிரீத்திற்குக் காது கேளாமை மற்றும் வாய்ப்பேசாமை பெலவீனங்களிலிருந்து தேவன் அற்புத சுகம் தர ஜெபிப்போம்.

## பட்டாலா:
### வால்வி நேதாஜி டாடு & கல்பனா

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது விசுவாசிகளான நிஷா & வில்லியம் தம்பதிக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்துள்ளார். டெங்கு காய்ச்சலிலிருந்து பரம்ஜீத் மற்றும் பச்சோவையும், குடற்புண் காய்ச்சலிலிருந்து சலீமையும் தேவன் சுகப்படுத்தியுள்ளார். நமது ஜெபக்கூடுகைகளில் பங்கேற்ற 6 குடும்பத்தினருக்குத் தீய ஆவியின் பிடியி லிருந்து தேவன் தந்துள்ள விடுதலைக் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விரைவில் ஆராதனை தொடங்கப்படவுள்ள தேரா மற்றும் ஜில்லா வாலி கிராமங்களில் சுவிசேஷத்திற்கு மேலும் திறந்தவாசல் உருவாக; இப் பணித்தள ஊழியத்திற்கு நல்லதோர் ஆவிக்குரிய சுதேச ஊழியர் கிடைக்க; நமது விசுவாசி சானி மஸிஹின் திருமணத்தேவைகள் யாவும் சந்திக்கப்பட; ஜஷ்விந்தரின் குடும்பத்தில் மழலை செல்வம் உருவாக ஜெபிப்போம்.

## முக்த்சார்:
### ஜித்தேந்திர டிகல் & ஊர்பசி

**துதிக்க:** புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பாசிகர் மக்களினம் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கின்றனர். வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் நமது விசுவாசிகள் உற்சாகமாக ஈடுபடு கின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில நாட்களாகக் காணாமல் போயிருக்கும் ஜஸ்பிரீத் கௌர் பத்திரமாக வீடு வந்து சேர; சுவிசேஷம் எட்டியிராத பகுதிகளுக்குச் சுவிசேஷத்தைக் கொண்டுச் செல்ல போதுமான ஆட்கள் கிடைக்க; நமது சுதேச ஊழியர்களான ஜக்சீர் சிங், பசித்ரா மற்றும் பல்பீர் சிங் தேவ வல்லமையினால் நிரப்பப்பட்டு, ஊழியங்களை உற்சாகமாகச் செய்ய ஜெபிப்போம்.

6 **ஜனவரி**
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜென்னிஸ் J.B.

# ராஜஸ்தான்

## ராஜஸ்தான் பிராந்திய அலுவலகம்:

### அமிர்காந்த் டிகல் & நிரோலா

**துதிக்க:** இங்கு நடத்தப்பட்ட தேடுவோர் முகாமின் மூலம் அதில் பங்கேற்ற 39 பிள்ளைகளை தேவன் ஆசீர்வதித்துள்ளார். நமது புதிய பணித்தளமான அஜித் காரிலுள்ள மக்கள் சுவிசேஷத்திற்குச் செவிமடுக்கின்றனர். ராய்சீக் இனமக்களும் சுவிசேஷத்தின்மீது அதிக ஈடுபாடு காட்டு கின்றனர். நமது ஆல்வார் விடுதியில் புதிதாக 13 பிள்ளைகள் வந்து இணைய கர்த்தர் காண்பித்துள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராய்சீக், மஜ்பிசீக், ஓத்ராஜ்புட், நாயக், ராய்கர் மற்றும் நட் இன மக்கள் மத்தியில் ஆவிக்குரிய எழுச்சி உருவாக; நமது புதிய விசுவாசிகளில் குறிப்பாக நட் இனத்தினர் கிறிஸ்துவின்மீது தாங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தைத் தைரியமாக அறிக்கையிட; எல்லாத் திருச்சபையிலும் ஆண்கள், பெண்கள் மற்றும் வாலிபர்கள் மத்தியில் வேதாகம வகுப்புகள் ஒழுங்காக நடைபெற; எல்லாத் திருச்சபைகளிலும் ஆலயக்கமிட்டிகள் உருவாக்கப்பட; ஹனுமன்கார் பணித்தளத்தில் வசிக்கும் சானி இனமக்கள் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஆல்வார் மற்றும் தபுகாரா பகுதிகளில் வாழும் குருதுவாரா சமுதாயத்தைச் சார்ந்த சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### சாங்ரியா: பவுலோஸ் பர்ஜோ & பினிட்டா டொப்போ

**துதிக்க:** தோடிவாலா கிராமத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையை தேவன் ஆசீர் வதித்துத் தந்துள்ளார். அருகாமையில் வசிப் போரால் இகழப்பட்டுச் சோர்ந்து போயிருந்த நமது விசுவாசிகள் ஜெபத்தினால் மீண்டும் தங்களது விசுவாச வாழ்க்கையைக் கர்த்தருக்குள் தொடருகின்றனர். ராணி யைக் கை வலியிலிருந்தும், பல்ஜிந்தர் கௌரைப் பாம்பு பயத்தினால் உண்டான தீராத தலைவலியிலிருந்தும், அலிப்புரா கிராம ராஜ்வந்தியைத் தொண்டைப் புற்று நோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்தியுள்ள தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தோடிவாலா கிராமத்தில் ஆலயம் கட்டத் தகுந்ததோர் நிலம் கிடைக்க; சுக்சான், சந்தீப், ஓம்பிரகாஷ் மற்றும் ஹர்தேவ் சிங் குடிப் பழக்கத்திலிருந்து விடுபட; தோடிவாலா கிராம திருச்சபையினரின் ஆவிக்குரிய வளர்ச்சிக் காக; வயிற்றுப்புண்களிலிருந்து சகுந்தலா விற்கும், கைப்புண்களிலிருந்து சூரஜ்வா னிற்கும் தேவன் நல்ல சுகம் தர ஜெபிப்போம்.

### கேர்வாடா: பட்டேல் தேவுபாய் & ஜாமுபேன்

**துதிக்க:** கம்தி அகதா கிராமத்தில் புதிதாக ஜெபக்கூட்டம் துவங்க கர்த்தர் உதவி செய்துள்ளார். மார்பகக்கட்டியிலிருந்து அம்ரி பேனையும், மூலப்பிரச்சனையிலிருந்து பொகாரி கிராம சஞ்ஜையையும், மூச்சுத் திணறல் கோளாறிலிருந்து பாரதி கிராம முன்னா நித்தினையும் தேவன் சுகப்படுத்தி யுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தபாய்சா கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கு அக்கிராமப் பஞ்சாயத்திலிருந்து அனுமதி கிடைக்க; பலிச்சா, கதமியா மற்றும் ஹிரதிபாடா கிராமங்களில் புதிதாக ஜெபக்கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட; மந்தவா கிராம ராம்லாலைப் புற்றுநோயிலிருந்தும், ஜலானா கிராம நவீனாவை இருதயக் கோளாறிலிருந்தும், குகாரா கிராம ஹக்ரி பேனை மனநோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

7 ஜனவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ரமேஷ்வர் தயாள் நிர்மல்

# உத்தரப் பிரதேசம்

## கோண்டா சிறுவர் விடுதி:

### ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா

**துதிக்க:** சம்புதாரா, தில்காய், குக்கூர் போக்வா, பலுவா, கங்குவால் ஆகிய கிராமங்களில் எவ்விதத் தடையுமின்றி ஊழியம் செய்யக் கர்த்தர் கிருபை காண்பித்து வருகிறார். 47 பிள்ளைகள் மீண்டுமாகத் தங்களது விடுதிக்கு வந்து கல்விப்பயில தேவன் உதவி செய்துள்ளார். சம்புதாரா கிராம அர்ச்சனாவிற்குப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் தந்துள்ள விடுதலைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மீதமுள்ள பிள்ளைகள் அதிக தாமதமின்றி விடுதிக்கு வந்து சேர; வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தவும், அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கவும் தேவன் நமது ஊழியர்களையும் சுதேச ஊழியர்களையும் தமது பரிசுத்த ஆவியினால் நிரப்பி வழிநடத்த ஜெபிப்போம்.

### மோட்: திலக் & எமிமாள்

**துதிக்க:** முதன்முறையாக 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. கடந்த 10 மாதங்களாக ஜாலூன் பணித்தளத்தில் நடைபெற்ற ஊழியத்தினிமித்தம் புதிதாக 55 நபர்களை தேவன் தமது மந்தையில் இணைத்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மோட் பணித்தளத்தில் நடைபெறும் நமது ஊழியங்களின் ஆசீர்வாதங்களுக்காக; பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; நமது விசுவாசிகள் மத்தியில் ஆவிக்குரிய எழுப்புதலும் மறுமலர்ச்சியும் உண்டாக ஜெபிப்போம்.

### ஜின்ஜக்:
### சமரேந்திர சிங் & சுஸ்மித்தா

**துதிக்க:** பசுபுரா கிராமத்திலிருந்து புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. துயில்பியா கிராமத்தில் முதல்முறையாக இரவுநேர ஜெபக்கூட்டம் நடத்தவும், அதில் 50 பேர் கலந்து கொண்டு பயனடையவும் கர்த்தர் ஒத்தாசை புரிந்துள்ளார். தயக்கபூர்வா, ராம்நகர், லபத்பூர், பகதூர்பூர் ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் சுவிசேஷத்திற்குச் செவிமடுக்கின்றனர். பத்தாரா கிராம நமது விசுவாசிகள் கிறிஸ்துவிற்குள் நன்கு வளர்ந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இளம் விசுவாசிகள் நமது ஊழியங்களில் நல்ஈடுபாடு காட்ட; சபை மூப்பர்கள் தங்களது திருச்சபை ஆராதனைகளிலும், நமது பிற ஊழிய நிகழ்ச்சிகளிலும் தலைமைத்துவப் பொறுப்பெடுத்து நடத்த; கெஹ்லாங் கிராம மீனா, உமா சங்கர், குஷ்பு, ஜெய்பால், சீமா, நிஷா, மம்தா ஆகியோரின் இரட்சிப்பிற்காக; ஆலயம் கட்ட எதிர்ப்புத் தெரிவிக்கும் துபாலி கிராமத்தலைவர் மனந்திரும்ப; எல்லாத் திருச்சபைகளிலும் சிறுவர்களுக்கான வேதாகம வகுப்புகள் தொடங்கப்பட ஜெபிப்போம்.

## 8 ஜனவரி
சனி

### பஹ்வா:
**காய் மின் தாங், அனில்குமார்**

**துதிக்க:** புதிதாக 14 நபர்கள் கிறிஸ்துவை அறிகின்ற விசுவாச வாழ்விற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். முதன் முறையாக 2 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. பூர்திகா திருச் சபையின் 10-வது ஆண்டுவிழா கூடுகையை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்ததோடு, அத்திருச்சபை விசுவாசிகள் அனைவரும் தங்களது ஆவிக்குரிய வாழ்வைப் புதுப்பித்துக்கொள்ளவும் உதவி செய்துள்ளார். முட்டூர் கிராம ரேகாவிற்கு தேவன் சுகப்பிரசவம் நல்கியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பஹ்வா பகுதியில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப்பணி சிறப்பாக நிறைவடைய; மீனாப்புரி கிராம ஜூலி குடற்புண் காய்ச்சலிலிருந்தும், முகேஷ் சிறுநீரகப்பிரச்சனையிலிருந்தும், தரம் தாஸ் மலேரியாவிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

### புக்ராயான்:
**சாந்தகுமார் & ஜின்சி**

**துதிக்க:** புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. சலீம்பூர் மற்றும் சானியாபூர் கிராமங்களில் நடைபெற்ற விசுவாசிகள் கூடுகைகளையும், வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். துர்ஜன்பூர் கிராம பாய் சிவநாராயணனை தேவன் அவரது கையெலும்பு முறிவிலிருந்து பூரணமாகக் குணப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாரூர் மற்றும் பாத்புரா பகுதி களில் கட்டப்பட்டு வரும் ஆலயச்சுற்றுச்சுவர் கட்டுமானப்பணிகள் விரைவில் முடிவடைய; பாத்புரா, பார்கவா, படவல் ஆகிய திருச் சபைகளிலிருந்து புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் நலமுடன் தங்களது வீடு வந்து சேர; நமது புக்ராயான் சிறுவர் பராமரிப்பு மையத்திலுள்ள 110 பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக் காக; அனைத்து திருச்சபைகளிலும் சபை மூப்பர்களுக்கான ஊழிய வழிமுறைகள் சீராய் வகுக்கப்பட ஜெபிப்போம்.

### ஹசேரன்:
**ராஜன் & ஜெபமலர்**

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். முதன்முறையாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது விசுவாசிகளான முத்தி காஜர்வா கிராம ரஷ்மிதா மற்றும் சப்பா கிராம ஆல்காவிற்குக் குழந்தை பாக்கியங்கள் கிடைத்துள்ளன. அர்ஜுன்பால் & கீர்த்தி யின் குடும்பத்தில் தேவசமாதானம் நிலவி வருகிறது. தாலேல்பூர் கிராம அஜித் டெங்கு காய்ச்சலிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹசேரன் மற்றும் முத்லியா பூர்வா பகுதிகளில் ஆலயங்கள் கட்டத் தகுந்த நிலங்கள் கிடைக்க; ஜோகி சமுதாயத்தைச் சார்ந்த ஜெகர்வாபூர் கிராம நமது விசுவாசிகளுக்கு ஏற்ற வாழ்க்கை துணைகளமைய; ஜெகர்வாபூர் கிராம சிவநாத் காசநோயிலிருந்தும், நக்லா சுபாஷ் கிராம விவேக் வாய்ப்பேச இயலாமையிலிருந்தும் அற்புத சுகம் பெற ஜெபிப்போம்.




*ஜனவரி*

ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பினிட்டா மச்சோ ஹெபல்

### நூண்ட்லா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** புதிதாக ஒருநபர் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளார். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஃபிரோஸாபாத், தனுமாய், கய்மாய் மற்றும் தவ்ராசி கிராமங்களில் நடைபெற்ற வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துத் தந்துள்ளார். ஹல்புரா கிராமத்தில் நடைபெற்ற புதிய விசுவாசிகளுக்கான ஆவிக்குரிய பயிற்சி நிகழ்ச்சிகளையும், தனுமாய் கிராமத்தில் நடைபெற்ற ஆத்தும ஆதாய ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகளையும் தேவன் அநேகருக்கு ஆசீர்வாதமாக்கித் தந்துள்ளார். படஹாம் கிராம ராகேஷ், நக்லா நதுவா கிராம ராம்பரம் மற்றும் ஆவ்தேஷ் ஆகியோர் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நக்லா கல்யாண், நக்லா ரமியா மற்றும் ஹல்புரா கிராமங்களில் புதிதாக இரவுநேர ஜெபக்கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட; சீமா, சர்வேஷ் மற்றும் விமலா தேவி இரட்சிக்கப்பட; பதாவன், நக்லா நதுவா மற்றும் சாமர்வா கிராமங்களில் சிறிய ஆராதனைக்குழுக்கள் தொடங்கப்பட; மனோஜ் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், சாஹில் சிறுநீர்ப்பாதை நோய்த்தொற்றிலிருந்தும் முழுசுகம் பெற ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### கால்வா: பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா பர்தன்

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வரவும், புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப் படவும் தேவன் அநுக்கிரகம் ஈந்துள்ளார். பிப்புள்தோலா மற்றும் அம்பாபட கிராமங்களில் சிறிய அளவிலான ஜெபக்குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. சாலிதானா கிராமத்தில் சிறப்புப் பஜன் நிகழ்ச்சி நடத்தவும், அதில் 200 பேர் கலந்து கொள்ளவும் கர்த்தர் உதவி புரிந்துள்ளார். லங்கோதி மற்றும் சித்தலை கிராமங்களிலிருந்து புதிதாக 2 குடும்பங்கள் நமது கூடுகைகளில் வந்து கலந்து கொள்கின்றனர். கனமழை மற்றும் இடி இடர்பாடுகளின் மத்தியிலும் நமது விசுவாசிகளின் விவசாயப்பணிகள் அதிக பாதிப்பிற்குட்படாதபடி தேவன் காத்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தமா குலாய் கிராம நமது விசுவாசிகள் எதிர்ப்புகளின் மத்தியிலும், பிற இயக்கங்களின் தவறான வழிநடத்துதல்களின் மத்தியிலும் தங்களது விசுவாசத்தில் ஆணித்தரமாக இருக்க; அடுத்தடுத்து 4 பிள்ளைகளை பிரசவத்தின் போது இழந்திருக்கும் கீதா இம்முறை சுகப்பிரசவம் மூலம் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க; தமா குலாய் கிராமத்திலிருந்து விவசாயப்பணிக்கென கர்நாடகாவிற்குப் புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் யாவரும் தங்களது பணிகளை முடித்து சுகத்துடன் வீடு வந்து சேர; நமது புதிய தொடர்பாளர்களான தோட்டாராம், கணேஷ், கோலு மற்றும் கேவல்ராம் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப் போம்.

## 10 ஜனவரி திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாஷ்வா சின்னதுரை S.
திரு. சஞ்ஜீப் ஆனந்த், திரு. பவுலுஸ் பர்ஜோ
திரு. செல்வம் தவமணி, திருமதி. ஹவ்ஜம் ஹிஜம்
திரு. லால்துசகா, திரு. சாந்தகுமார் J.

### பால்: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவின் சிலுவையண்டை வந்துள்ளனர். புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப் பட்டுள்ளது. அந்த்ரோலி கிராம சுவிசேஷ எதிர்ப்பாளர்களின் கரங்களுக்கு நமது சுதேச ஊழியர் பிரவீனின் குடும்பத்தைக் கர்த்தர் தப்புவித்துள்ளார். பொங்கிடிபாயை நரம்புப் பிரச்சனையிலிருந்தும், 3 வயது சிறுவன் ராகுலை வயிற்று வீக்கத்திலிருந்தும் தேவன் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சார்முல்லி, குட்டாவாடி, வாட்டி மற்றும் கார்பீடி கிராமங்களில் சுவிசேஷ எதிர்ப்பாளர்களினால் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் ஆராதனைகள் மீண்டும் தொடங் கப்பட; நமது ஊழியத்தைப் பலவிதங்களில் எதிர்த்து வரும் நரசிங்கின் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட; நமது விசுவாசிகளான சாம்லாலா மற்றும் பன்சிலாலின் வீடு கட்டு மானப்பணிகள் எவ்விதப் பணநெருக் கடியுமின்றி நிறைவுப்பெற; 2 வயது சிறுவனான அமல் சரீர பெலவீனத்திலிருந்து முழுசுகம் பெற ஜெபிப்போம்.

### உதய்நகர்:
### D. வில்சன் & ரஷ்மித்தா பரிடா

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 9 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப் பட்டுள்ளது. அஃதுநகரில் புதிதாக ஒரு ஆராதனைக்குழு துவங்கப்பட்டுள்ளது. கடாபாத் கிராம நமது புதிய தொடர்பாளர் அத்மில் வேத வசனத்தின்மீது நல்லார்வம் காட்டுகின்றார். நமது விசுவாசிகள் அனைவரும் வேத வசனங்களை விருப்பத்துடன் வாசித்து, கிறிஸ்தேசுவில் நாளுக்குநாள் வளர்ந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களுக்குப் புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய ஜீவியத்திற்காக; பாட்லா மற்றும் தேவ்ஜியா திருச்சபைகளில் உண்டாகியுள்ள எதிர்ப்புகள் மறைய; பக்கவாதநோயிலிருந்து ராமாவிற்கும், தர்மேஷிற்கும் பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## காண்ட்டிராக்டருக்கு காண்பிக்கப்பட்ட கிருபை!

*ஹிமாச்சலப் பிரதேசம், ரோஹ்ரு பணித்தளம், தக்லெக் கிராம நமது விசுவாசி சந்தோஷ் கட்டிடக் கட்டுமானப்பணிகளுக்கான ஒப்பந்ததாரர் பணியைச் செய்து வந்தார். கடந்த வருடம் பத்ராஷ் என்ற இடத்திற்கு அருகில் ஒரு வீடு கட்டுமானப்பணியில் இவர் ஒப்பந்ததாரராக இருக்கும்பொழுது, அங்குப் பணி செய்து கொண்டிருந்த பீஹார் மாநில தொழிலாளர்களில் ஒருவர் திடீரென மின்சாரம் தாக்கி அச்சம்பவ இடத்திலேயே மரித்துப் போனார். மற்றுமொருவர் அதிக காயங்களோடு மருத்துவமனையில் சிகிட்சைகுட்படுத்தப்பட்டார். இந்த விபத்து நேரிடுவதற்கு நமது விசுவாசி சந்தோஷின்மீது எப்பிழையுமில்லை. ஆயினும், ஒருவரின் உயிர் இழப்பிற்கும் மற்றொருவரின் அவசர சிகிட்சைக்கும் இழப்பீட்டுத் தொகையாக இவர் ரூ.25 இலட்சம் அபராதம் கட்டவேண்டியது வருமென எதிர்பார்க்கப்பட்டு, நீதிமன்ற வழக்கு ஓடிக்கொண்டிருந்தது. எனவே, இவர் தனது பிற விசுவாசிகளுடன் இணைந்து மிகவும் பாரப்பட்டு ஜெபித்துக் கொண்டிருந்தார். கடந்த அக்டோபர் மாதம் அதற்கான நீதிமன்றத்தீர்ப்பு வந்தது. அதில் தேவ கிருபையால் நமது விசுவாசி சந்தோஷ் ரூ.25 இலட்சத்திற்குப் பதிலாக 4 முதல் 5 இலட்சத் தொகையை மட்டுமே கட்டினால் போதுமென ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!*

**11** ஜனவரி
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஜெயா ஹெலன் ரோஸ் செல்வகுமார்

## கர்கோன்: தாமஸ் சோரேன், ஏபேல் ஹெம்ரோம்

**துதிக்க:** புதிதாக 34 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்கியுள்ளனர். புதிதாக 23 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. நமது ஊழியர்கள் பல்லியா மற்றும் குட்ரோ கிராமங்களில் புதிதாக ஜெபக்கூட்டங்கள் நடத்த ஆரம்பித்துள்ளனர். ஹிராபூர் கிராம ஈஸ்வரின் குடும்பம் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். சபஸ்புரா கிராம அருஷியை மூச்சுத்திணறல் பிரச்சனை யிலிருந்தும், சுஜனை வாய்ப்பேச இயலாமை யிலிருந்தும், மச்சல்கௌ கிராம ரேகா பாயைத் தீய ஆவியின் பிடியிலிருந்தும் தேவன் விடுவித்து சுகப்படுத்தியுள்ள மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்தியெர் பகுதி திருச்சபை யினரைத் தொந்தரவு செய்யும் தர்சிங் பாபா மனந்திரும்ப; ஷிர்ஜாம்லி கிராம மக தாவைப் பக்கவாதத்திலிருந்தும், நயபுரா கிராம மனோஜை காது கேளாமை மற்றும் வாய்ப்பேச இயலாமையிலிருந்தும், பன்வா கிராம நஜுபாயைக் கர்ப்பப்பை பிரச்சனையிலிருந்தும் தேவன் குண மாக்க; பக்கேதா கிராம குஷ்பு தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## சிரியா: ஏகலைவன் ஜேம்ஸ் & பெரில்

**துதிக்க:** புதிதாக 17 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் பிரசங்கிக்கப்பட்டுள்ளன. ஓநாயினால் தூக்கிச்செல்லப்பட்ட கர்காடி கிராம நமது விசுவாசி ரதுபாயின் ஆடு மீண்டும் உயிருடன் கிடைக்கப் பெற்றுள்ளது. நந்தியா கிராம கேசுபாயைச் சுயநினைவற்ற தன்மையிலிருந்தும், சீமல்கோட் கிராம ரூபாவைத் தோல் ஒவ்வாமை நோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாம்புரா மற்றும் கோபால்புரா கிராமங்களில் மீண்டும் ஆராதனைகள் துவங்கப்பட; பாஸ்நேர் கிராம ஜானுபாய் மற்றும் அத்பாடா கிராம சோனுவைப் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து தேவன் காப்பாற்ற; காலிகிராம் கிராம தசரத்தின் குடும்பத்தில் தேவசமாதானம் நிலவ; தூப்பிலி கிராம சுனில் மற்றும் காலு தங்களது குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்

## பன்சேமால்: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து விசுவாசிகளும் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாக அறுப்பின் பண்டிகையைச் சிறப்புடன் கொண்டாடி யுள்ளனர். இம்மாதம் நடைபெற்ற உபவாச ஜெபக்கூடுகை, பெண்கள் கூடுகை மற்றும் வாலிபர் கூடுகைகளை தேவன் பலவிதங்களில் நமக்கு ஆசீர்வதித்துத் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்துள்ள பர்பாடா கிராம நமது விசுவாசிகளான சுரேஷ், ரவி, பய்ட்டி, கய்ட்டி, ஜீலாபாய் மற்றும் லலிதாபாய் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; தொழிலினிமித்த மாகப் பல இடங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் தங்களது பணியிடங்களில் கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழ ஜெபிப்போம்.

**12 ஜனவரி**
புதன்
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. லவ்லின் புன்யா

## பீஹார்

### ராணிகன்ஜ்:

**ஜீவானந்தன் & ஜோஷஃபின் ஷீபா**

**துதிக்க:** பரியாஹி, கோபால்பூர் மற்றும் ரகத்தா கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் சங்கர் சதா, சஞ்ஜய் சதா, பரதேசி, பிந்து, மகதோ, சுக்னிதேவி ஆகியோர் புதிய தொடர்பாளர்களாக நமது ஊழியத்தில் கிடைத்துள்ளனர். கிரண் தேவியின் குழந்தைக்கு அதிகப் படியான சரீர வளர்ச்சிப் பிரச்சனை யிலிருந்து தேவன் பூரண சுகம் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிலப்பிரச்சனையினி மித்தம் பொய்க் குற்றச்சாட்டுகளுக் குள்ளாகியிருக்கும் நமது மங்கல் வேதா கிராம விசுவாசிகளுக்காக; ரீனா குமாரி, ஆஷா குமாரி மற்றும் மோகினி குமாரிக்குத் தகுந்த வாழ்க்கை துணைகளமைய; சுவிசேஷத்தை எதிர்க்கும் பிரந்தர் பஸ்வான், விகாஷ் பஸ்வான், வினோத் பஸ்வான், சுரேந்தர் பஸ்வான், நித்தியானந்த பஸ்வான், பிதன் பஸ்வான் மற்றும் வித்தியானந்த பஸ்வான் யாவரும் இயேசுவின் அன்பால் தொடப்பட; தீக்காயத்திலின்று சோனம் குமாரியின் குழந்தையும், சரீர மற்றும் மன வளர்ச்சியற்ற நிலையி லிருந்து பூலுதேவியும் முழுமையாகச் சுகமடைய ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### பர்ஹர்வா :

**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** ஜல்திஹி, முசார்தோலி, மதுபாரா, குமானி, பிஷான்பூர், B.S.K. பாரமசியா, பர்ஹய்ட் ஆகிய இடங்களில் நடந்த ஊழியப் பின்தொடர்பணிகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். பாட்னா சௌக் மற்றும் பினோத்பூர் கிராமங்களில் புதிதாக இயேசு திரைப் பட ஊழிய நிகழ்ச்சிகள் எவ்விதத் தடையுமின்றி நடைபெற்றுள்ளன. பினோத்பூர் கிராம கார்த்திக் மரிதா மற்றும் அவரது குடும்பத்தினர் சுவிசேஷத் தின்மீது காட்டும் ஆர்வத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீன்பஹாட் கிராம மந்தல் இனமக்கள் மத்தியில் சுவிசேஷத்திற் கான வாசல்கள் திறக்கப்பட; குடிப் பழக்கத்தினிமித்தம் குடும்ப சமா தானத்தை இழந்து நிற்கும் ராம்பூர் கிராம பார்வதியின் கணவர் ஜாகேஷ்வர் ரவிதாஸ் தனது குடிப்பழக்கத்தை விட்டுவிடவும், அக்குடும்பத்தில் தேவ சமாதானம் உண்டாகவும்; பர்ஹய்ட் பகுதி ஜகர்நாத் சாந்த், பிஷான்பூர் கெந்துவா பகுதி அகோரி, ஜாம்பூர் பகுதி லட்சுமி, சாஹிப்கன்ஜ் பகுதி சுதாகர் குமார் ஆகிய நமது இளம் விசுவாசி களுக்கு ஏற்ற வாழ்க்கை துணை களமைய; அனுவிற்குச் சுகப்பிரசவம் நேரிட ஜெபிப்போம்.

## 13 ஜனவரி
வியாழன்

### தல்பும்கட் விடுதி: வகேரா பிரமோத் குமார் & ஐஷோதாபேன்

**துதிக்க:** புதிதாக இரு கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. பபய்தா கிராம நமது புதிய தொடர்பாளர் காமு முர்முவின் ஜெபத்தைக் கேட்டு, தேவன் அவரைக் கெட்ட தீய கனா காணும் பழக்கத்தி லிருந்து அற்புதமாக விடுவித்துள்ளார். பாக்குடியாசால் கிராம துபா கிஸ்கு தீய ஆவியைக் குறித்ததான பயத்திலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றுள்ளார். நமது சுதேச ஊழியர் மதன் சோரனின் தகப்பனாருடைய அடக்க ஆராதனையைக் கிறிஸ்தவ முறையில் நடத்த தேவன் கிருபை ஈந்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜார்க்கண்ட் மாநில சுகாதார நலத்துறையில் பணிபுரியும் நமது விசுவாசி களான பப்லு முர்மு மற்றும் சோனா ராம் ஹன்ஸ்தாவிற்கு 4 மாதங்களாகக் கிடைக்காமலிருக்கும் சம்பளப்பணம் கிடைக்க; சுவிசேஷத்திற்குச் செவிமடுக்கும் பாக்குடியாசால் கிராம மதன் சோரன் இரட்சிக்கப்பட; பகட்கோச்சா கிராமத்தில் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் தொடங்கப்பட; நமது புதிய தொடர்பாளர் களான காமு முர்மு, துபா கிஸ்கு, காந்த்ரா ஹன்ஸ்தா, துர்பு ஆகியோரது குடும்ப மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### ஜகன்நாத்பூர்: கணேஷ் & சுமதி

**துதிக்க:** பணித்தள அளவில் நடத்திய வாலிபர் கூடுகையில் 350 வாலிபர்கள் கலந்து கொள்ளவும், அதில் 29 பேர் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடவும், 11 பேர் முழுநேர ஊழியத் திற்கென அர்ப்பணிக்கவும் தேவன் கிருபை பாராட்டியுள்ளார். நமது விசுவாசிகளை ஆராதனைக்குச் செல்லவிடாமல் தடுத்து வந்த இகுத்தி கிராம சுவிசேஷ எதிர்ப் பாளர்களின் உள்ளங்களில் தேவன் நல் மாற்றத்தைத் தந்துள்ளார். நமது சுதேச ஊழியரின் மனைவி ரங்க லதாவிற்கும், நமது விசுவாசி சாகு தம்சாயிற்கும் தேவன் புத்திர பாக்கியங்களை ஈந்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கந்தி மேடா கிராமத்தில் நடை பெற்றுக் கொண்டிருக்கும் ஆலயக்கட்டு மானப்பணி மற்றும் புக்ரிபீ ஆலயச் சுற்றுச்சுவர் கட்டுமானப்பணி தடை யின்றி நடைபெறவும், ரெவலதீவ் கிராம ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் தொடங்கப்படவும்; தவறான பொய்க் குற்றச்சாட்டு வழக்குகளின் மத்தியில் புசாய், கடாகிரிஷா மற்றும் சிரசாய் கிராம திருச்சபைகளின் விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் ஸ்திரமாய் நிற்க ஜெபிப்போம்.

### இயேசுவிற்காய் – சுவிசேஷத்திற்காய்!

*சத்தீஸ்கட், கார்கோடா பணித்தளம். மாக்ரி கிராம நமது விசுவாசி சுப்ரமணிய சாகுவின் குடும்பம் இயேசுவை ஏற்றுக்கொண்டதினால், தங்களது சொந்த கிராமத்தினராலேயே மிகுந்த உபத்திரவத் திற்குள்ளாகி, இயேசுவை மறுதலிக்கும்படி பலவந்தமாக வற்புறுத்தப்பட்டனர். மறுதலிக்காத பட்சத்தில், சொந்த கிராமத்தை விட்டே ஓடும்படி அச்சுறுத்தப்பட்டனர். என்ன நடந்தது? தேவன் தந்த தைரியத்துடன் நமது இந்த விசுவாசியின் குடும்பம், அனைவரின் முன்பும் இயேசுவின் நாமத்தின்மேல் தங்களது விசுவாசத்தை உறுதியாக அறிக்கை செய்து, இயேசுவிற்காய் சுவிசேஷத்திற்காய் தங்களுடைய கிராமத்தை விட்டு வெளியேறினர். தற்போது அக்குடும்பத்தினர் அருகாமையிலுள்ள பிற கிராம விசுவாசிகளுடன் இணைந்து தேவ ஐக்கியம் கொண்டு சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர். தேவனுக்கே துதியுண்டாவதாக!*

14 ஜனவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஐசக் ஆபேல் S.

## ஜெய்பூர்:
### அசோக் நாயக் & சுரபி

**துதிக்க:** புதிதாக இரண்டு குடும்பங்கள் கிறிஸ்துவண்டை வரவும், ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்படவும், எவ்விதத் தடங்கலுமின்றி வாலிபர் கூடுகையைச் சிறப்பாக நடத்தி முடிக்கவும் தேவன் உதவி செய்துள்ளார். குருபார் கக்ராயைக் காசநோயிலிருந்தும், ஜெமதார் பல்லியாவை மன நோயிலிருந்தும் தேவன் அற்புதமாகச் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லட்சுமி போத்ரா, முத்தையா, ஜிமா சவியாம் ஆகியோரது குடும்பங்கள் ஆவிக்குரிய வாழ்வில் நல்வளர்ச்சிப் பெற; பூடா மௌடி கிராம விசுவாசிகளுக்கு ஆராதனை நடத்த நல்லதொரு இடம் கிடைக்க; ஜெய்பூர் மற்றும் பூடாமௌடி பகுதி களில் ஆலயங்கள் கட்டப்பட; பண்டிகுட்டி கிராம மக்கள் ஆவிக்குரிய மனமாற்றம் அடைய ஜெபிப்போம்.

## கெய்ராஜோடி:
### சுச்சௌ & காம்புங் தாபா

**துதிக்க:** புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசத்துடன் பின்பற்ற ஆரம்பித்துள்ளனர். சச்சாமு கிராமத்தில் வைத்து கிறிஸ்துவை அறியாத குடும்பங்களைச் சார்ந்த சிறுபிள்ளைகளுக்கென நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்துள்ளார் ஜெபத்தின் மூலம் ஜாமுன்தாப் கிராம பிரதீப் மால்தோவை வயிற்றுப்போக்கு பிரச்சனையிலிருந்து சுகமடையச் செய்த கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போர்வா திருச்சபையினருக்கென தனது நிலத்தைக் கொடுத்த அந்நில உரிமையாளர் அந்த நிலத்தை மீண்டும் பெற நினைத்து, அவ்விடத்தில் நமது விசுவாசிகளை ஆராதிக்க விடாமல் தடுக்கும் அவருடைய மனநிலை மாற; இங்கு நடத்திய விடுமுறை வேதாகம நிகழ்ச்சிக்குப்பின், சுவிசேஷத்தை மனமுவந்து ஏற்றுக்கொள்ள முன்வரும் ஜம்ரி கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; நமது ஊழியத்திற்கு ஆதரவு காட்டும் ஜம்ரி கிராம முக்கிய நபரான மங்கல் மால்தோ இரட்சிப்படைய; கல்ஹாஜோர் கிராம தேவா மால்தோவின் மரணத்தினால் துக்கித்துக் கொண்டிருக்கும் அவரது குடும்பத்தினரின் மனஆறுதலுக்காக ஜெபிப்போம்.

## மண்ட்ரோ: மிர்ஜியோ கிஸ்கு & செலினா ஹன்ஸ்தக்

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 23 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது பொர்தோலா கிராம ஆராதனையில் புதிதாக 2 குடும்பங்கள் வந்து கலந்து கொள்கின்றனர். மனநிலைப் பாதிக்கப்பட்டு வீட்டை விட்டு வெளியேறிய போப்னா டுடு 6 மாத தொடர் ஜெபத்தின் மூலம் மீண்டும் வீடு வந்து சேர்ந்துள்ளார். பக்கவாதத்திலிருந்து பிரியா ஹெம்ரோமையும், கர்ப்பப்பை நோய்த்தொற்றிலிருந்து சரிதா ஹன்ஸ்தாவையும் கர்த்தர் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேவனுக்கும் தங்களது சபையாருக்கும் முன்பாக உண்மையாகவும், நேர்மையாகவும் செயல்படாது காணப்படும் ஜாக்ரா ஆலயக்கமிட்டி அங்கத்தினர்கள் மனந்திரும்ப; கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நமது சுதேச ஊழியர்கள் தங்களது சபை மூப்பர்களோடு இணைந்து அனைத்து விசுவாசிகளின் குடும்பங்களையும் நேரில் சென்று சந்திக்க; ஹரியக்கா கிராம ஆலயக் கட்டுமானப்பணி சீக்கிரத்தில் முடிவடைய ஜெபிப்போம்.

15 ஜனவரி
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஷைனி ஜோசப்
திருமதி. சுகந்தி சாலமோன்

## பகையா & தீன்பஹாட்:
### ஜெபக்குமார் & பொன்லதா

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் விசுவாசத்துடன் கிறிஸ்துவண்டை சேர்ந்துள்ளனர். முசாஹர் மக்களினம் சுவிசேஷத்திற்குச் செவிகொடுக்கவும், பாக்சோ கிராமத்தில் வைத்து நடைபெறும் நமது வாராந்திர ஜெபக்கூடுகையின் மூலம் அநேக மக்கள் சுவிசேஷத்தின்மீது நாட்டம் காட்டவும் தொடங்கியுள்ளனர். ஜர்னாதோலா கிராமத்தி லுள்ள முண்டா மக்களினமும் சுவிசேஷத் தின்மீது ஆர்வம் காட்டவும், அம்மக்களினத் திலிருந்து அனில் மாதையா என்பவர் தன்னை முழுநேர ஊழியப்பணிக்கென ஒப்புக்கொடுக்கவும் கர்த்தர் உதவி செய்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மதன்சாஹி கிராம விசுவாசிகள் தங்களுக்கென கட்டப்பட்டுவரும் ஆலயக் கட்டுமானப்பணியில் தங்களது உதாரத்து வமான காணிக்கைகளைக் கொடுக்க; புல்ஜூரி கிராம மக்கினிமின்ஜும், ஜர்னா தோலா கிராம சீமா தொப்போவும் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட; விவசாயத்தில் நமது விசுவாசிகளுக்கு இம்முறை தேவன் நல்ல அறுவடையைக் கொடுக்க ஜெபிப்போம்.

## பத்னா:
### கென்னடி சிங் &
### ஹயோஜம் லின்தோய்பி

**துதிக்க:** புதிதாக 26 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். முதன்முறையாக 15 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. நமது விசுவாசிகள் கிரமமாக நடத்தும் தங்களது குடும்ப ஜெபங்களின் மூலம் மேலும் கிறிஸ்துவில் வளர்ந்து வருகின்றனர். தீராத கால்வலியிலிருந்து சுனிபிட்டி சோரேனையும், வயிற்று வீக்கத்திலிருந்து பஹா ஹன்ஸ்தக்கையும் தேவன் சுகப் படுத்தியுள்ளார். தில்பித்தா திருச்சபையைச் சார்ந்த மார்சல் டுடுவைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து கர்த்தர் விடுவித் துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொக்ரா, பரிதி, நம்தி, சால்திங், ராம்பூர், அகசி, பிசோன்பூர், ரோசன்தோலா, கோரா, சர்வை மற்றும் ரங்கதோலா கிராமங்களில் நடக்கவிருக்கும் இரவுநேர ஜெபக்கூட்டங்களைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தர; நமது சுதேச ஊழியர் ரிச்சர்டு ஹன்ஸ் தக்கின் குடும்பம் மழலை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; எல்லாத் திருச்சபை களிலும் வாலிபர்கள் மத்தியில் ஜெபக் குழுக்கள் உருவாக ஜெபிப்போம்.

## அற்புதத்தினால் விளைந்த இரட்டை ஆசீர்வாதம்!

*ஜார்க்கண்ட், ராம்கார் பணித்தளம். நமது கிந்துவா திருச்சபை மூப்பரொருவர் இயேசுவை ஏற்றுக் கொண்டதினால், தனது மனைவியுடன் மாமனாரின் வீட்டிற்குச் சென்றபோது, மாமனார் இவர்களைத் தனது வீட்டிற்குள் வர அனுமதிக்கவில்லை. சபை மூப்பரின் மனைவி தனது தகப்பனாருக்காகக் கண்ணீருடன் ஜெபித்தார். சில நாட்கள் கழித்து, சபை மூப்பருடைய மனைவியின் சொந்த சகோதரர் மரணப்படுக்கையில் கிடப்பதாகச் செய்தி யறிந்து, உடனே நமது சபை மூப்பரும் அவரது மனைவியும் அவசரமாக மாமனாரின் வீட்டிற்கு ஓடிச்சென்று, மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த அந்தச் சகோதரனுக்காக அதிக கண்ணீருடன் ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன், அற்புதமாக அச்சகோதரனுக்கு மறுவாழ்வு தந்தார். அதன் விளைவு, அந்த மாமனாரின் குடும்பத்தார் அனைவரும் இரட்சிக்கப்பட்டு, முழுக்குடும்பமும் தேவநாமம் மகிமைப்படும்படி ஒன்றிணைந்தனர். அல்லேலூயா!*

## 16 ஜனவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. விஜயமலர் குருபாதம்
திருமதி. தெபோரா D. ரோஸ்லின் அருள்ராஜ்

### சப்பாண்டே மால்தோ சிறுவர் விடுதி:
**டிங்கு செமி & இலா செமி**

**துதிக்க:** இணையதளம் வாயிலாக மால்தோ இளந்தலைவர்களைக் கண்டெடுப்பதற்கென நடத்தப்பட்ட கருத்தரங்கின் மூலம் 10 மாணவர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், 21 மாணவர்கள் முழுநேரப்பணிகென அர்ப்பணிக்கவும், 29 ஜெபக்குழுக்கள் உருவாகவும் தேவன் ஒத்தாசை புரிந்துள்ளார். இளந்தலைவர்களுக் கென நடத்தப்பட்ட ஜெபக்கூடுகையில் நமது சப்பாண்டே சிறுவர் விடுதியின் சார்பாக 41 மாணவர்கள் கலந்து கொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். ஆந்திரா & ஒடிசா மாநிலங்களிலிருந்து 2 ஆசிரியர்கள் தன்னார்வமாக ஆசிரியப்பணி செய்ய நமது விடுதி யில் வந்து இணைந்துள்ளமைக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊரடங்கினிமித்தம் புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது மாண வர்கள் விரைவில் தங்களது கல்வியைத் தொடர விடுதி வந்து சேர; 10-ம் வகுப்பு மாணவர்களுக்கான கல்விப்பாடத் திட்டத்திற்கு அரசு அங்கீகாரம் கிடைக்க; நமது கல்வித்திட்ட வசதிகளைப் பயன்படுத்த இயலாமல் இருக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்காக; நமது விடுதிக்கட்டிடத்தின் மறு சீரமைப்புப்பணியும், சுற்றுச் சுவர் கட்டும் பணியும் விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

### சிக்காரிபாடா:
**சுகாந்தோ குமார் சிங் & ராணி**

**துதிக்க:** புதிதாக 41 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. கர்த்தர் இம்மாதம் முழுவதும் நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூடுகைகள், இயேசு திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகள் மற்றும் விசுவாசிகள் முகாமை ஆசீர்வதித்துத் தந்துள்ளார். இவ்வருடம் நமது விசு வாசிகள் விவசாயத்தில் நல்ல அறு வடையைப் பெறவும், கர்த்தருடைய நாம மகிமைக்கென தங்களது திருச் சபையில் சந்தோஷமான அறுவடைப் பண்டிகையைக் கொண்டாடவும் கர்த்தர் பாராட்டியுள்ள உதவிக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சந்தால் மக்கள் மத்தியில் காணப்படும் மூடப்பழக்கவழக்கங்கள் மறைய; சமீபக்காலத்தில் மரித்துப்போன நமது காந்த்பகாரி சபை மூப்பரான பிட்டு மராண்டியின் குடும்ப மக்களின் மனஆறுதலுக்காக; துர்காபூர், ராம்புனி, ஜாம்கந்தர் ஆகிய பகுதி களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆலயச்சுற்றுச்சுவர் கட்டுமானப் பணிகளுக்கான தேவைகள் சந்திக்கப் பட; தல்தாலி மற்றும் மனியச்சுவா பகுதி திருச்சபை விசுவாசிகளுக்கு ஆலயங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

## 17 ஜனவரி
திங்கள்

### தெலோ: பால்ராஜ் P. & ஜெபஜோதி

**துதிக்க:** புதிதாக 50 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். கேர்வாவில் நடைபெற்ற சபை மூப்பர்கள் கூடுகையில் 27 பேர் பங்கேற்று தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். துடுவா கிராம மாசி பெஸ்ராவைக் காசநோயிலிருந்தும், ரோல்டி கிராம சுனிதா முர்முவை மலேரியா மற்றும் குடற்புண் காய்ச்சலிலிருந்தும் தேவன் சுகமாக்கியுள்ளார். புக்காரியா கிராம தலா சோரேனைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புக்காரியா மற்றும் கேர்வா கிராமங்களில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாகும் நமது புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ஹரிச்சாரா கிராம மரியம் ஹன்ஸ்தக் புற்றுநோயிலிருந்தும், லடுகான்ஜ் கிராம டேவிட் ஹெம்ரோம், ராங்மட்டியா கிராம சாமுவேல் மாதையா மற்றும் அவரது மகள் சுவீட்டி மாதையா மலேரியா & குடற்புண் காய்ச்சலிலிருந்தும் சுகம் பெற; ரங்கா மற்றும் கஸ்கவா பகுதிகளில் நடைபெறும் ஆலயக்கட்டுமானப்பணிகள் சீக்கிரத்தில் நிறைவுற ஜெபிப்போம்.

### படிட்டோலா:
### ஜீவன் ரஞ்சன் & ஸ்னிக்தா

**துதிக்க:** புதிதாக 22 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். பகர்பூர் மற்றும் ஜாப்ரி பகுதிகளில் கட்டப்பட்டுவரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் யாவும் சிறப்பாக நடந்தேறி வருகின்றன. சல்போனா கிராமத்திலிருந்து ஒரு குடும்பத்தினர் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டி வருகின்றனர். லக்கிபூரில் நடைபெற்ற வாலிபர் கூட்டத்தை தேவன் அநேக வாலிபர்களுக்கு ஆசீர்வாதமாக்கித் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருச்சபைச்செயல்பாடுகளில் நமது இளம் விசுவாசிகள் உற்சாகமாக ஈடுபட; படா தல்தாலி, லாராகட், பாகர்பூர் மற்றும் ஜாப்ரி கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் துரிதமாக முடிவடைய; வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளின் மூலம் சுவிசேஷ வசனங்கள் விதைக்கப்பட்டுள்ள அசம்பானி, இலக்கி, சிக்னாதான், குஷும், போஜுதிக் ஆகிய கிராம மக்கள் யாவரும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### கங்காராம்பூர்: தீஹே & சரணி

**துதிக்க:** காந்துவி மற்றும் பானாபுக்கூர் கிராமங்களிலிருந்து புதிதாக 11 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் இயேசுவின் அன்பு சுவிசேஷம் மூலம் பறைசாற்றப்பட்டுள்ளது. முதல்முறையாக இப்பணித்தளத்தில் வைத்து நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூடுகைகளில் 340 நபர்கள் பங்கேற்று ஆவிக்குரிய பயன் பெற்றுள்ளனர். பபன்காவ் பகுதியில் நடைபெற்ற ஆலயப்பிரதிஷ்டை அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்துள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்கவிருக்கும் அனைத்து ஊழிய நிகழ்வுகளையும் தேவன் ஆசீர்வதித்துத் தர; காந்துவி கிராம சுக்குர் முனி மராண்டியைக் கர்ப்பப்பை பிரச்சனையிலிருந்து தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

## 18 ஜனவரி
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. விஜயா ஜாய்சன்

### இட்டாஹறார்: அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** புக்ரி உட்டு, மங்கதா, துவாதிஹி, பன்பூல், பாராபிகா, அமேதி, இட்டாஹறார், மமலாய் மற்றும் தாலிபிர்-ஹல்திபாரி கிராமங்களிலிருந்து புதிதாக 68 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். மங்கதா கிராம மிதுன் டுடுவைக் கால்புண்களிலிருந்தும், அலுவதங்கி கிராம தலா முர்மு மற்றும் பன்பூல் கிராம குபின் முர்முவை மனநோயி லிருந்தும் தேவன் குணப்படுத்தியுள்ள தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்கப்போகும் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சி மூலம் திரளான ஜனங்கள் கிறிஸ்துவின் மந்தையில் வந்து சேர; சொர்சாதோலி கிராம பட்கி டுடு & லக்கிராம் முர்மு, இந்திராசால் கிராம பிஜய் முர்மு, ஜோக்தால் கிராம புல் முர்மு & ரபி கிஸ்கு ஆகியோரது குடும்ப மக்கள் இரட்சிப்படைய; நமது புதிய விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் ஸ்திரமாய் நிற்கவும், அவர்கள் தங்களது உறவினர்களையும் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் கொண்டு வரவும்; நமது அனைத்து சபை மூப்பர்களும் தங்களது விசுவாச வாழ்க்கையில் திடமாய் வளரவும், தங்களது பொறுப்பில் விடப் பட்டுள்ள திருச்சபையினரைச் செம்மை யாய் வழிநடத்தவும்; சிறிய அளவிலான ஜெபக்குழுக்கள் யாவும் சீராய்ச் செயல்பட ஜெபிப்போம்.

### ஜாம்போனி:
### இப்ராயிம் மாலி & புரோசன்சிதா

**துதிக்க:** புதிதாக 12 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. சினாய், பதன் ஹன்ஸ்தக் மற்றும் சீதா ஹெம்ரோம் வீடுகளில் வைத்து நடைபெற்ற 'வீடுகள்தோறும்' நற்செய்திப்பணி மிகுந்த பயனுள்ளதாக அமைந்துள்ளது. சுரின் மோல் சோரேனின் குடும்பம் நமது ஊழியத்தில் தன்னார்வமாக இணைந்து செயல்படுகின்றனர். ஜெபத்தின் மூலம் தாஸ்நாத் சோரேன் மனநோயிலிருந்தும், லர்னிதா சோரேன் இடுப்பு வலியிலிருந்தும் பூரண சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிர்பூம் கிராம பரமேஸ்வர் முர்மு, பலியாகுடி கிராம இந்து முர்மு & பார்வதி, விருமாண்டி, ஜத்தியல் கிராம பிகாஷ் சந்திரா சோரேன், ராம்நகர் கிராம சாஸ்நாத் குடும்பம் & மதன் சோரேன் ஆகியோர் இரட்சிக்கப்பட; நமது விசுவாசி ரஞ்சித் சோரேனின் நிலப்பிரச்சனை தீர ஜெபிப்போம்.

### நிற்காத காற்றும், அடங்காத நெருப்பும்!

*மேற்கு வங்காளம், பாக்குவாஹாட் பணித்தளம். நமது சல்போனா திருச்சபையைச் சார்ந்தவர், விசுவாசி உஜித் முர்மு. இவர் ஒருநாள் தனது நெற்பயிர் நிலங்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது பக்கத்திலுள்ளோரின் நிலங்கள் யாவும் நல்ல விளைச்சலுடன் அறுவடைக்கு ஆயத்தமாக இருந்தன. இவர் தனது நிலப்பகுதிகளைச் சுத்தம் செய்யும் பொருட்டு, அனைத்து காய்ந்த வைக்கோல் களையும் குவியலாகக்குவித்து அதற்கு நெருப்பு வைத்தார். திடீரென எதிர்பாராதவிதத்தில் கட்டுப்படுத்த முடியாத பலத்த காற்று வீசியதால், நெருப்புத்தனல் அப்பகுதியெங்கும் பரவிச் செல்ல ஆரம்பித்தது. அங்கிருந்தோர் யாவரும் செய்வதறியாது நெருப்பை அணைக்க ஆங்காங்கே ஓடினர். அருகிலெங்கும் நெருப்பை அணைக்க தேவையான நீரும் இல்லை. இவ்வாறு ஒன்றுமே செய்ய இயலாத சூழலில் நமது விசுவாசி உஜித் முர்மு கர்த்தரை நோக்கிப் பார்த்தார். ஆஹா, என்ன ஆச்சரியம்! ஏற்ற நேரத்தில் ஓங்கியடித்த காற்றும், பரவிச்சென்ற நெருப்பும் சட்டென நின்றது. இவ்வாறு 150 கிராமத்தினரின் விளைநிலங்களையும் தேவன் எச்சேதமுமின்றி பாதுகாத்தார். தேவனுக்கே மகிமை!*

## 19 ஜனவரி

புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஐசக் தனசிங் R.

### ராணிகன்ஜ்: துருபராஜ் பெபர்த்தா & புஷ்பாஞ்சலி

**துதிக்க:** புதிதாக 14 நபர்கள் கிறிஸ்துவை அறியும் அறிவிற்குள் விசுவாச வாஞ்சையுடன் வந்துள்ளனர். புதிதாக 11 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 3 கிராமங்களில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளையும், துட்டாபுக்கூர் கிராமத்தில் நடந்த இயேசு திரைப்பட ஊழிய நிகழ்ச்சியையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்துள்ளார். நமது ஊழியத்தை எதிர்த்து வந்த அர்ணா கிராம ரவி டுடு தற்போது கிறிஸ்துவின் தீவிர விசுவாசியாக மாறியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளில் நமது அனைத்து விசுவாசிகளும் உற்சாகமாய்ப் பங்கெடுத்துக் கொள்ள; புஜுகிதா பகுதியில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிடைக்க; போர்திஹி கிராம காந்தனா ஹெம்ரோம், துட்டாபுக்கூர் கிராம நிமல் ஹஸ்தா, தல்தோலா கிராம பாலி சோரேன் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### சம்சி: தீப்ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** புதிதாக 16 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் பறைசாற்றப்பட்டுள்ளன. கோடாதோலா கிராமத்தில் புதிதாக ஆராதனை மையமொன்று அமைக்கப்பட்டுள்ளது. கிராமத்தலைவர்களுடைய ஒத்தாசையின் மூலம் 5 கிராமங்களில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் அநேகருக்கு ஆசீர்வாதமாக மாற்றித் தந்துள்ளார். ஜிசு மராண்டி தீய ஆவியின் பிடியிலிருந்தும், மனநோயிலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம் பெற தேவன் கிருபை செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வார்லி திருச்சபையைச் சார்ந்த சபை மூப்பர்களான பிரகாஷ் ஹன்ஸ்தா & தேவசிஸ் சோரேன், சாந்த்பூர் ஆராதனை மையத்தைச் சார்ந்த அனில் முர்மு, கோரல்மோனி திருச்சபையைச் சார்ந்த ஜேக்கப் டுடு, லக்ஷார்பூர் கிராம சீமோன் டுடு ஆகியோர் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ; ரோனா கிராமத்தில் ஜெபக்குழுக்கள் உருவாக; புதிதாகப் பிறந்த குழந்தையை இழந்து தவிக்கும் வாசுதேவ் குடும்பத்தினரின் மனங்கள் ஆறுதலடைய; ஆரோதி குமார் பக்கவாதத்திலிருந்து பூரண சுகமடைய ஜெபிப்போம்.

### கேள்விப்பட்டது மட்டுமல்ல, கேள்வி கேட்டதினாலும் நடந்த அற்புதம்!

*உத்தரப்பிரதேசம், கைம்கன்ஜ், பணித்தளம். பெகலால்பூர் கிராமத்திலுள்ள தேவந்தின் வீட்டில் வைத்து நமது ஊழியர்கள் இரவுநேர ஜெபக்கூட்டம் ஒன்றை நடத்தினர். தேவந்திற்குத் திருமணமாகி, தனது 5 சகோதரர்களுடன் தாய் தகப்பனோடு இவ்வீட்டில் அவர்கள் வசித்து வந்தனர். ஜெபக்கூட்டம் நடத்தியபோது கடுங்குளிர் காணப்பட்டதினால், அவர்கள் அமர்ந்திருந்து தேவ வசனங்களைக் கேட்க மறுத்தனர். ஆயினும், 'கர்த்தரை மக்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது அவர் எவ்வாறு மக்களின் இதயங்களைப் பரிசுத்தமாக்குகிறார்' என்ற சத்தியத்தைக் கேட்க ஆரம்பித்தவுடன், அக்கூட்டத்தில் பலரும் அமர்ந்திருந்து தங்களது சந்தேகங்களைப் பல கேள்விகளின் வழியாக கேட்கத் தொடங்கினர். அவர்களது அனைத்து கேள்விகளுக்கும் தெளிவான பதில்களைக் கொடுத்து பரிசுத்தம், ஜெபம், உபவாசம் ஆகியவை குறித்து விவரிக்க தேவன் நமது ஊழியர்களுக்கு ஞானம் தந்தார். என்ன அற்புதம்! அதன்பின் அனைவரும் மனம்மாறி, முழுமனதுடன் தங்களை தேவனிடம் ஒப்புக்கொடுத்து ஜெபித்தனர். அல்லேலூயா! அவர்கள் தொடர்ந்து ஆவிக்குரிய விசுவாச வாழ்வில் நன்கு வளர ஜெபிப்போம்.*

**20 ஜனவரி**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. செலினா மராண்டி

# சத்தீஸ்கட்

## பிரதாப்பூர்:

### தினேஷ் குமார் & நீத்து

**துதிக்க:** புதிதாக 11 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் பகரப்பட்டுள்ளன. சர்காரி மற்றும் தாத்கர்வா கிராமங்களிலிருந்து நமது ஊழியத்திற்கு 2 புதிய தொடர் பாளர்கள் கிடைத்துள்ளனர். தீராத காய்ச்சலிலிருந்து தேவன் ரவி சங்கரைச் சுகமாக்கியுள்ளார். காட்டு யானையிட மிருந்தும், சுவிசேஷ எதிர்ப்பாளர்களின் கைகளிலிருந்தும் தேவன் நமது விசுவாசி களைப் பாதுகாத்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மண்டில், பாய்கோனா, கங்கோத்ரி, பாக்னீ, சர்காரி ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் இயேசுவின் அன்பை ருசிக்க; சுவிசேஷ எதிர்ப் பாளர்களைக் கண்டு பயந்து நடுங்கும் விசுவாசிகளுக்காக; அனுபமா மற்றும் அன்சு பக்கவாதத்திலிருந்தும், இந்தர் குவார் காது கேளாமை மற்றும் வாய்ப்பேச இயலாமையிலிருந்தும் சுகம் பெற; ராம் குமாரியின் மகளுக்கு நல்ல வாழ்க்கை துணையமைய ஜெபிப்போம்.

## லக்கன்பூர் :

### அருண் குமார் & சாரதி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத் தினால் சந்திக்கப்பட்டுள்ளது. 3 நாட்கள் நடந்த சிறுவர் மேளாவை தேவன் வெகுவாக ஆசீர்வதித்துத் தந்துள்ளார். முறையாக 40 இடங்களில் வேதாகம வகுப்புகள் நடத்த தேவன் உதவி செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹன்சாதான், சித்கலா, ஃபத்தேஹ்பூர், செமாரா, உதாரி மற்றும் ராய்தான் பகுதிகளில் திருச்சபைகள் உருவாக்கப்பட; சுவிசேஷத்தை எதிர்க்கும் கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; சுனந்தி மற்றும் சீலாவதி சரீர பெலவீனங்களிலிருந்து குணமடைய ஜெபிப்போம்.

## பத்தல்காவ்:

### பாலமுருகன் & அன்புமலர்

**துதிக்க:** சுவிசேஷத்தினிமித்தம் சிறையி லடைக்கப்பட்டிருந்த நமது சுதேச ஊழியர் தரம்சாயிற்கு ஜெபத்தின் மூலம் ஜாமீன் கிடைத்துள்ளது. எதிர்ப்புகளின் மத்தி யிலும் ஜிராரி திருச்சபையில் அநேக மக்கள் இணைந்து தேவனை ஆராதித்து வருகின்றனர். தர்ரா பாரா, பொட்டியா மற்றும் காந்திகாட் திருச்சபைகளில் தினமும் மாலையில் வேத தியானம் நடத்த தேவன் கிருபை பாராட்டி வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கார்கோனா கிராமத்தில் சுவிசேஷத்தை எதிர்ப்போர் யாவரும் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சம்சதா கிராம லால்பகத்திற்குக் கால் வீக்கத்தி லிருந்தும், காந்திகாட் கிராம ஜீவன் திகா விற்குத் தீராத நீரிழிவுநோயிலிருந்தும் சுகம் கிடைக்க; ரபிந்தா எக்காவும், அனீஷ் திர்கியும் குழந்தை பாக்கியங்களினால் ஆசீர்வதிக்கப்பட; கயா கிராம வினோத் குசுர் தனது குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

## 21 ஜனவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பிரேமலதா டேனியல் தாமஸ்
செல்வி. சாந்தி முர்மு

### சீத்தாபூர்: பத்வி சோமாலியா & மஹாலா ஷீலாபேன்

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவை நம்பிக்கையுடன் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹரித்சந்த் மற்றும் அஸ்காரா பகுதிகளிலிருந்து 2 குடும்பத்தினர் சுவிசேஷத்தின்மீது நாட்டம் காட்டி வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கேராகசார், பார்பகலா, லலித்பூர், சத்தன் பாரா மற்றும் ஹரித்சந்த் திருச்சபைகளிலிருந்து தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட ஆயத்தமாயிருப்போருக்காக; நமது விசுவாசிகளான மன்பகால் & சுக்மணி மற்றும் கீதா & ராஜேஷ் தம்பதியர்களுக்கு மழலை செல்வங்கள் கிடைக்க; ஜாஜ்கா குருசேகரத் திருச்சபையினரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; பொக்சாரி கிராம ஆலயம் விரைவில் கட்டி முடிக்கப்படவும், அங்குள்ள விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் ஒற்றுமையாக வாழவும்; பார்பகலா மற்றும் லலித்பூர் திருச்சபை விசுவாசிகளின் குடும்ப மக்களுடைய இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

### பாண்டே:
### பாபுஜி முர்மு & வயலட் ஹன்ஸ்தா

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை அறிகின்ற விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். பின்மாற்றமடைந்திருந்த துவாவின் குடும்பம் மீண்டும் ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளது. குரினார் கட்டியா கிராமத்திலிருந்து ஒரு குடும்பம் புதிதாக நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மருத்துவ வசதியற்ற காட்டுப் புறப் பகுதியில் வசித்துக்கொண்டிருக்கும் மான்கிக்குச் சுகப்பிரசவம் சம்பவிக்க; நமது புதிய தொடர்பாளர்களான ராஜு ஜுரி, ராஜ்குமார், எக்கா, தலி கோவாச்சி ஆகியோர் தங்களது குடிப்பழக்கத்திலிருந்து முழுமையாக மீள; தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து கட்டியா கோவாச்சியும், சோனிபாய் கோவாச்சியும் விடுபட ஜெபிப்போம்.

## ஒடிசா

### டேங்கானல்: சந்து மராண்டி

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புத்தகடியா கிராமத்திலிருந்து புதிதாக ஒரு குடும்பம் நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றனர். புத்தகடியா கிராம மனிஷா சான்யாவையும், பரத்பூர் கிராம திரௌபதி பிங்குவாவையும் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து கர்த்தர் விடுவித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சூலியா திருச்சபையைச் சார்ந்த துனி குன்கல் மனநோயிலிருந்தும் பாலித்துலியா கிராம பருணா ஹெம்ரோம் இரத்தச்சோகை நோயிலிருந்தும், துர்லபா பன்ரா கிராம ரகுபீர் காசநோயிலிருந்தும், தெர்மால் கிராம சில்கி சோரேன் மற்றும் ஸ்ரீமதி சோரேன் கால்வலிப் பிரச்சனையிலிருந்தும் முற்றிலுமாகச் சுகமடைய ஜெபிப்போம்.

22

ஜனவரி

சனி

## ஜஷிப்பூர்:

**சுகின்லால் & ஜெயராணி**

**துதிக்க:** புதிதாக 27 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 9 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் பகரப்பட்டுள்ளன. புதிதாக 3 குடும்பங்கள் நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றனர். நமது சாக்டி விடுதியில் கட்டப்பட்டுவரும் உணவருந்தும் அறை மற்றும் சமையலறை கட்டுமானப்பணிகள் யாவும் சிறப்பாக நடந்தேறி வருகின்றதற் காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹோ இனமக்கள் மத்தியில் பெரும் ஆவிக்குரிய எழுச்சி உருவாக; குடாகட் கிராம ஆலயக்கட்டுமானப்பணி நல்ல முறையில் முடிவடைய; குமாரிபில், கடாகுருவா, புருடி ஆகிய பகுதிகளில் ஆலயங்கள் கட்டப்பட; மய்னா முண்டாவின் குடும்பத்தில் சமாதானம் பிறக்க; விமல் சந்திரா சாக்கி மனநோயிலிருந்தும், சம்பாரி சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும், ஜாம்தா கிராம லக்ஷ்மிதார் ககராய் மற்றும் புலான்சிங் பக்கவாதத்திலிருந்தும் சுகம் பெற; சிம்லிபால் மற்றும் ஜஷிப்பூர் பகுதி களில் காட்டு விலங்குகளினால் தங்களது விவசாய நிலங்களில் பெரும் சேதங்களைச் சந்தித்திருக்கும் நமது விசுவாசிகளுக்காக ஜெபிப்போம்.

## கியோன்ஜர்கட்: பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா

**துதிக்க:** மமலபோசி பகுதியில் நடைபெற்ற விசுவாசிகள் முகாமை தேவன் ஆசீர்வதித் துத் தந்துள்ளார். பாலிசாஹி கிராம ஆலயம் தேவநாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. பங்கர்சுனி கிராம நமது விசுவாசி கௌரி ஜெபத்தின் மூலம் புற்றுநோயிலிருந்து சுகம் பெற்றுள்ளார். ஏராளமான புதிய ஜனங்கள் நமது ஆராதனையில் வந்து பங்கேற்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கன மழையினிமித்தமாக நமது விசுவாசிகளின் அறுவடை பாதிக்கப்படாம லிருக்க; கோவல், புலிஜஹார் மற்றும் படாதேவ் பகுதிகளில் ஆலயங்கள் கட்டப்பட; மெஸ்ராமன் திருச்சபையில் தங்களுக்கு அருமையானவர்களை இழக்கக் கொடுத்தி ருக்கும் குடும்பங்களின் மனஆறுதலுக்காக; மமலபோசி பகுதியில் பயிற்சி மைய மொன்று உருவாக்கப்பட; சூமர் முண்டா மனநிலைப் பாதிப்பிலிருந்து சுகமடைய ஜெபிப்போம்.

## எந்தச் சூழ்நிலையிலும்!

*மத்தியப் பிரதேசம், நேப்பா நகர் பணித்தளம். நமது விசுவாசி ஷோபாராம் ஏராளமான உடல் உபாதை களையும், சவால்களையும் தன் வாழ்வில் சந்தித்து வந்தார். இவர் ஆழ்கிணறு தோண்ட எடுத்தப் பிரயாசம் அனைத்தும் வீணாய்ப் போனதுமன்றி, தனது காலில் செய்த அறுவை சிகிட்சையும் பலனற்றுப்போனது; இவருடைய இடுப்புப்பகுதியில் ஏற்பட்ட தாங்க முடியாத வேதனையினால் மருத்துவப்பரிசோதனையின்படி இவருக்கு எலும்பு காசநோய் இருப்பதாகக் கண்டறியப் பட்டது. அதனிமித்தம் இவர் எப்பொழுதும் ஒருவகை குமட்டலுக்குள்ளாகி, தனது வாசனைத்திறனை முற்றிலு மாக இழந்தார்; வெறிநாயின் கடிக்கும் ஆளானதோடு எத்தனையோ முறை துரத்திவிட்டும், விடாமல் தொடர்ந்து தினமும் தனது வீட்டிற்குமுன் வந்து படுத்துக்கிடக்கும் சர்ப்பத்தைக் காணும் அவலநிலைக்கும் தள்ளப்பட்டார். இவருடைய வருமானத்திற்கு உதவிக்கொண்டிருந்த எருதின் கால்களும் வீங்கத் தொடங்கியது. அதுமட்டு மல்ல, இவர் எப்பொழுது நித்திரை செய்யப் படுத் திருக்கும்பொழுதும் சத்துரு இவரது கனவில் வந்து, இவருடைய சரீர தோல் முதலானவைகளை விரைவில் தெறிப்புண்டுப் போகப்பண்ணுவேன் எனச் சவாலிடு வதைக் கண்டார். இவ்வாறு துன்பங்களை ஒன்றன்பின் ஒன்றாக இவர் தன் வாழ்வில் சந்தித்தும், எந்தச் சூழ்நிலையிலும் கிறிஸ்துவின்மீது தான் கொண்ட விசுவாசத்தை விட்டுச் சிறிதும் பின்வாங்காதபடி ஜெபித்து வந்தார். அதன் விளைவு, இன்று கர்த்தர் இவரைப் பெலப்படுத்தி, வாழ்வின் அனைத்து சவால்களையும் இவர் இன்பமுடன் கடந்துச் செல்லவும், கிரமமாக ஆராதனையில் பங்குப்பெற்று தொடர்ந்து அவருக்காக நற்சாட்சியுள்ள வாழ்வு வாழவும் கிருபை செய்து வருகிறார். அல்லேலூயா!*

**23** ஜனவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மேத்யூ K., திரு. குமார் V.
திரு. தேகம் சுரேஷ் ஷாம்ராவ்

### பல்லகாரா: பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ

**துதிக்க:** புதிதாக 3 குடும்பங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. உள்ளூர் விசுவாசிகளின் சொந்த நிதியுதவியைக் கொண்டு அந்தேரி திருச்சபையில் மூப்பர்கள் பயிற்சிக் கூட்டத்தை நடத்தி முடிக்க தேவன் உதவி செய்துள்ளார். 3 கிராமங்களிலுள்ள ஜுவாங் இனமக்கள் தங்களது சொந்த மொழியில் முதல்முறையாக இயேசு திரைப்படத்தைக் கண்டு பெருமகிழ்ச்சி குள்ளாகி இருக்கின்றனர். மமலபோசி திருச்சபை ஆராதனைக்கு 3 புதிய குடும்பங்கள் வருகை தருகின்றனர். மமலபோசி, ராய்பால், கொண்டனாலி, பயகுமுட்டியா, அந்தேரி பகுதி திருச் சபைகளில் அறுப்பின் பண்டிகை சிறப் பான முறையில் கொண்டாடப்பட்டுள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது மமலபோசி திருச்சபை விசுவாசிகள் தவறாமல் ஆலய ஆராதனைகளில் பங்கேற்க; மமல போசி மற்றும் அந்தேரி பகுதிகளில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் ஈடுபடும் வாலிபப்பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ஜுவாங் சமுதாய திருச்சபையினர் நற்சாட்சி யுள்ள வாழ்வு வாழ; அந்தேரி திருச் சபையைச் சார்ந்த அனாமா நாயக் காசநோயிலிருந்தும், ராஜு, தம்புரு, ஜஷோதா மனநோயிலிருந்தும் குண மடைய ஜெபிப்போம்.

### ராய்ரங்பூர்:
### சாமுவேல் J. & ஹவிலா பரமானந்த்

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்கள் சுவி சேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. கிரி நாயக் தீராத முதுகு வலியிலிருந்தும், தொடை வீக்கத்திலிருந்தும் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தள ஊழியத்திற் கென இன்னும் சில சுதேச ஊழியர்கள் பணியமர்த்தப்பட; தனது வீட்டில் ஆராதனைக் குழுவொன்றைத் துவங்கியதால் அநேக சவால்களைச் சந்திக்கும் சிதுலால் டுடுவிற் காக; குமார்திஹி கிராம ஜுடுமணியை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினரின் மனஆறுதலுக்காக; மனிச்சோ கிராம பீம்சிங் டுடுவின் குடும்பத்தில் சமாதானமான சூழ்நிலை உருவாக; ஹேமந்தி ஹல்தா மனநோயிலிருந்தும், சுராய் டுடு இரத்தச் சோகை நோயிலிருந்தும் சுகம் பெற; கிட்டாபீடா கிராம ஜெயராம் நாயக்கின் குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### கர்த்தர் பார்த்துக் கொண்டார்!

*ஜார்க்கண்ட், தெலோ பணித்தளம். ராஜ்கன் கிராம நமது விசுவாசி ரஃபேல் தனது நிலத்தில் நெற்பயிர்களை நட்டார். பின்னர் இவர் தனது மகனின் கொடிய சுகவீனத்தினிமித்தம் தனது நெற்பயிர்களுக்குச் சரியான உரமிடவும், அப்பயிர்களுக்கு இடையிலே வளரும் களைகளை முறையாகக் களைந்தெடுக்கவும் இயலாமல் போனார். இவரது மகனும் 33 நாட்கள் சுயநினைவற்றவராக மருத்துவமனையின் அவசரப்பிரிவில் தீவிர சிகிட்சை பெற்றுக்கொண்டிருந்தான். அநேகர் இவரது மகனுக்காக ஜெபித்ததின் வாயிலாக அவன் மீண்டும் உயிர் பிழைத்தான். அவனுடைய கை மாத்திரம் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டது. நாட்கள் பல கடந்தன. இதைக் குறித்து அவர் தனது சாட்சியில், 'கடினமான இச்சூழ்நிலையைத் தான் கடந்து வரும் சமயத்தில் கர்த்தர் தனது பயிர்நிலத்தைப் பார்த்துக் கொண்டதாகவும், எந்தவிதக் குறைச்சலுமின்றி அவர் தனக்கு நல்ல அறுவடையை ஈந்ததாகவும்' கூறி, கர்த்தரின் நாமத்தை உயர்த்தினார். அல்லேலூயா!*

## 24 ஜனவரி
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. நியாங் ஜங்கய் தௌங் கான் காப்

### ரிமுலி: சங்கர் P. &ஜெலின்

**துதிக்க:** ஸ்ரீராம்பூர் கிராமத்தில் வைத்து நடைபெற்ற முக்கியமான தலைவர்கள் பயிற்சி நிகழ்ச்சியை தேவன் ஆசீர்வதித்துத் தந்துள்ளார். கொங்கனா கிராம நமது முதல் விசுவாசி மங்கலு முண்டா தனது ஒரு ஏக்கர் நிலத்தை ஆலயம் கட்ட நன்கொடையாகக் கொடுத்துள்ளார். புல் காம் கிராம நமது புதிய விசுவாசி ஜெகத் பிருவா வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் தன்னார்வமாக ஈடுபடுகின்றார். துடுகதா கிராம நமது புதிய தொடர்பாளர் மமிதா முண்டா சுவிசேஷத்தைக் கேட்பதற்கென அநேக புதிய மக்களை நமது ஊழியர் களண்டையில் அழைத்து வருகின்ற தற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜமுனபோசி மற்றும் பெல்தா கிராமங்களில் இருக்கும் சுவிசேஷ எதிர்ப் பாளர்கள் யாவரும் கிறிஸ்துவின் அன்பால் சந்திக்கப்பட; ரங்கமட்டியா, பிரம்மனிதிஹி, ராய்கோலா, பினோத்பூர் ஆகிய கிராமங் களில் நடக்கப்போகும் ஊழிய நிகழ்ச்சி களை தேவன் ஆசீர்வதித்துத் தர; கலி மட்டி, ரிங்கல் பீடா, ஜோல்பாபோசி ஆகிய கிராமங்களில் இயேசு திரைப்படத்தைக் கண்டிருப்போர் யாவரும் கிறிஸ்துவின் இரட்சிப்பிற்குள் வர ஜெபிப்போம்.

## குஜராத்

### போடேலி: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** முதன்முறையாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. உர்வாடா கிராமத்திலிருந்து புதிதாக 2 குடும்பங்கள் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டுகின்றனர். நமது விசுவாசிகளான கந்திவார் கிராம ஈஸ்வர்பாய் மற்றும் புட்டியா வசாஹத் கிராம துளசிபாயிற்கு ஆமணக்கு எண்ணெய் மற்றும் பருப்பு விவசாயத்தில் நல்ல சாகுபடியை தேவன் தந்துள்ளார். ராம்ஜிபாய், சங்கீதாபேன், முர்ஜிபாய் ஆகியோரை தேவன் பாம்புக்கடியிலிருந்து காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஆராதனைக்கு வராம லிருக்கும் கந்தன்பூர் கிராம அஜித்பாய், கெலதியா கிராம ராகுல்பாய், கந்திவார் கிராம சுக்ராம்பாய் ஆகியோர் மனந் திரும்பி ஆலயத்திற்கு வர; தங்களது மகள்களை இழந்து பரிதபிக்கும் பாலக்கா மற்றும் காஞ்சிபாயின் மனஆறுதலுக்காக; சர்ச்சின் பாடா கிராம அர்வின்பாயும், குருஜிபாயும் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.

### தராம்பூர் & கொர்காம்: விக்னேஷ்வரன் & ஏஞ்சலின்

**துதிக்க:** புதிதாக 16 நபர்கள் கிறிஸ்து வைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 4 கிரா மங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. புடக்பாடா கிராம பிஜுன்பாயைப் பக்கவாதத்திலிருந்தும், பில்புடி கிராம சீதாபேனைக் கெட்ட கனா காணும் பழக்கத் திலிருந்தும், குந்தியா கிராம பான்சுபாயைக் கோவிட்-19னிலிருந்தும் தேவன் சுகப் படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடக் காத்திருக்கும் தாம்னி கிராம விசுவாசிகளுக்காக; மானி, புல்வாடி, சிச்வாஞ்சர் மற்றும் ஜாரியா கிராம மக்கள் யாவரும் இரட்சிக்கப்பட; கொர்காம் விடுதி நிலப்பிரச்சனை சுமூகமான தீர்வுக்கு வர ஜெபிப்போம்.

## 25 ஜனவரி
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஸ்டீபன் ஜாய்சன் P.
திருமதி. ஆஸ்நாத் தேவதாஸ்
திருமதி. மார்கரெட் முத்தையா சாமுவேல்
திருமதி. ஜெயா ரூபி சாலமோன்
திருமதி. கிருபாசனம் ஸ்டெல்லா ஆண்ட்ரூஸ்

### ஜாவ்டா – தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளி & விடுதி:

**புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா, பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா, பிஜுலால் & ஸ்டெஃபி, சதீஷ் & கிறிஸ்டி ஜெயந்தி, அல்போன்ஸ் & ஷைனி சினேகா, சலோமி, ஏஞ்சல்ராஜ், காயத்ரி**

**துதிக்க:** துங்கர்தா திருச்சபையில் வைத்து நடைபெற்ற பெண்கள் கூடுகையையும், பதன்துகாரி கிராமத்தில் வைத்து நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூடுகையையும் தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். மழலையர் முதல் 12 வரையுள்ள வகுப்பு நிலைகளை நமது பள்ளி வளாகத்திற்குள்ளேயே தொடங்க தேவன் கிருபை நல்கியுள்ளார். முதல்நிலைத் தேர்வு, NAS – தேசிய திறனறித் தேர்வு, பயிற்சி வகுப்புகள் அனைத்தையும் வெற்றிகரமாக நடத்தி முடிக்க தேவன் பாராட்டிய உதவிக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்துள்ள குடுகாஷ் திருச்சபையைச் சார்ந்த நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; 10-ம் வகுப்பில் பயிலும் 36 மாணவர்களும், 12-ம் வகுப்பில் பயிலும் 24 மாணவர்களும் சிறந்த முறையில் தங்களது தேர்விற்கு ஆயத்தமாக; 10 & 12-ம் வகுப்பு அரசாங்கத் தேர்வுகளில் நமது பள்ளி 100% வெற்றியடைய; 10-ம் வகுப்புப் படிக்கும் ஹிரால் மூளைக்கட்டியிலிருந்தும், 12-ம் வகுப்புப் படிக்கும் நிக்ஷி எலும்பு காசநோயிலிருந்தும் அற்புத சுகம் பெற ஜெபிப்போம்.

### ஃபோக்டி தலைமைத்துவ பயிற்சி மையம்:

**ரூபன் ரவி & விஜயராணி ரூபன்**

**துதிக்க:** குஜராத்தி மொழி கற்றல் பாடத்திட்டத்தின் மூலம் நமது 12 மிஷனெரி ஆசிரியர்களும், 24 மூத்த மற்றும் 21 இளைய சுதேச ஊழியர்களும் பயனடைய தேவன் அநுக்கிரகம் ஈந்துள்ளார். நமது ஊழியர்கள் வடஇந்திய திருச்சபை மற்றும் நவ ஜீவன் சேவா மண்டல் இயக்கத்தினரோடு இணைந்து நடத்திய ஒருநாள் ஜெபக்கூடுகையை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆரவல்லி, சாத்புடா, சஹயாத்ரி ஆகிய பிராந்தியங்களில் வைத்து சுதேச ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கென நடைபெறப்போகும் இரண்டாம் நிலைப் பயிற்சி வகுப்புகளை தேவன் ஆசீர்வதித்துத் தர; நமது தலைமைத்துவப் பயிற்சி வளாகத்தில் பணிப்புரியும் ஊழியர்களான உமேஷ் பாய் & அனிதாபேன், சஞ்ஜய்பாய் & நிக்கிதாவிற்காக; வரும்நாட்களில் குஜராத்தில் நடக்கவிருக்கும் பஞ்சாயத்துத் தேர்தல் சமாதானத்துடன் நடைபெற ஜெபிப்போம்.

26 **ஜனவரி**
புதன்
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜாண் தினேஷ் G.M.

## பிப்பள்வாடா சிறுமியர் விடுதி:
### ஹரிபாபு & பங்கஜம், சலோமி, ஏஞ்சல்ராஜ், காயத்ரி

**துதிக்க:** 3, 5, 8 & 10-ம் வகுப்பு மாணவர்களுக்கான தேசிய திறனறித் தேர்வை நமது விடுதிப்பிள்ளைகளுக்குச் சிறந்த முறையில் வைத்து முடிக்க தேவன் உதவி பாராட்டியுள்ளார். இரண்டு நாட்களாக ஜாவ்டா மற்றும் பிப்பள்வாடா விடுதி 10 & 12-ம் வகுப்பு மாணவர்களுக்கென நடத்தப்பட்ட ஆவிக்குரிய கூடுகையை தேவன் அநேக பிள்ளைகளுக்கு ஆசீர்வதித்துக் கொடுத்தார். நமது ஜாவ்டா மற்றும் பிப்பள்வாடா மிஷனெரிகள் அனைவரும் பற்பல கிராம திருச்சபைகளுக்குச் சென்று வார இறுதி ஊழியமாகத் தங்களது ஊழியப்பணியை சிறப்பான முறையில் செய்திட தேவன் ஒத்தாசை காண்பித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விடுதியிலுள்ள மூத்த வயது பிள்ளைகள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்ய; இரத்த அணு கோளாறினால் பாதிக்கப்பட்டிருக்கும் நான்சி சுகம் பெற; நீட் தேர்விற்காக ஆயத்தமாகும் மாணவர்களுக்குத் தகுந்த மருத்துவக்கல்லூரிகளில் இடம் கிடைக்க ஜெபிப்போம்.

## அஹ்வா & டாங்ஸ் வெளிப்புற சந்திப்பு ஊழியம்:
### பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா

**துதிக்க:** காம்புலா, சின்ஜ்பாடா, மால்கா, நிம்பாடா ஆகிய கிராமங்களிலிருந்து புதிதாக 5 குடும்பங்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். நானிவாகை திருச்சபை தேவ நாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சாதுபாயின் இல்லத்தில் வைத்து நடைபெற்ற துக்க நிவிர்த்தி கூடுகையின் மூலம் கிறிஸ்துவை அறியாத அநேக மக்கள் நித்திய வாழ்வைக் குறித்து அறிந்துகொள்ள தேவன் உதவி செய்துள்ளார். அம்சர்வான் கிராமத்தில் நடைபெற்ற வாலிபர் கூடுகையை தேவன் ஆசீர்வதித்துத் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சதாத் தேவி கிராமத்தில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; அம்தவா கிராம நமது புதிய தொடர்பாளர் ராஜுபாய் அங்கு நடக்கும் திருச்சபை ஆராதனையில் தொடர்ச்சியாகப் பங்குப்பெற; சூலி கிராம நமது விசுவாசி ஊர்மிளாபேனிற்குத் தகுந்த வாழ்க்கை துணையமைய; பம்னமால் கிராம லால்ஜிபாய் மற்றும் ஈஸ்வர் பாய் தங்கள்மீது சுமத்தப்பட்டுள்ள பொய்க்குற்றச்சாட்டுகளிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

## ஜெபமே மருந்தானது!

*ஒடிசா, ராய்ரங்பூர் பணித்தளம். டிங்கிரியா கிராம நமது விசுவாசி ஷியாமின் 2 வயது மகன் சரியாக மூச்சுவிட இயலாமல் அதிகம் கஷ்டப்பட்டான். அருகாமையிலுள்ள கிராம மருத்துவமனைக்கு அவனைக் கொண்டு சென்றனர். ஆனால் அவனது அதிக ஆபத்தான நிலையைக் கண்ட மருத்துவர், அவனை அருகிலுள்ள மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்படி கூறிவிட்டார். அங்கே அச்சிறுவன் அவசர சிகிட்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு, ஒருவார காலத்திற்கும் மேலாக பிராணவாயுவின் உதவியோடு மாத்திரமே சுவாசித்து வந்தான். உயிர் பிழைப்பான் என்ற நம்பிக்கை முழுவதுமாய் அற்றுப்போனது. நமது சுதேச ஊழியர்களும் பிற விசுவாசிகளும் அவனது பிராணன் தப்பும்படி தொடர்ந்து அவனுக்காக ஜெபித்து வந்தனர். ஜெபம் அவனுக்குள்ளாய்ப் பெரிய மருந்தாக மாறி, மகத்தான கிரியையைச் செய்தது. அவன் அற்புதமாக முழுசுகம் பெற்று வீடு திரும்பினான். அல்லேலூயா!*

27 ஜனவரி
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. பித்திகா பிபாபா பானி

# தாத்ரா மற்றும் நகர் ஹவேலி

## சில்வாசா:

### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** புதிதாக 29 நபர்கள் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ராஜ்கர் சந்த் திருச்சபையில் வைத்து நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் ஆயிரத்திற்கும் மேலானோர் பங்குப்பெறவும், பலர் அதன்மூலம் அநேக விதங்களில் ஆசீர்வதிக்கப்படவும் கர்த்தர் உதவி செய்துள்ளார். 11 குடும்பங்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். நமது இளம் விசுவாசிகளில் அநேகர் மிஷனெரிகளைத் தாங்குவதற்கென முன்வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திஸ்காடி ஆலயப்பிரதிஷ்டை ஆராதனை ஆசீர்வாதமாக அமைய; திவாஷி பகுதி சபை மூப்பர்கள் ஆலயம் கட்டுவதற்கென தங்களது நிலங்களை ஈவாகக் கொடுக்க முன்வர; அம்பாபாரி மற்றும் கேரடி பகுதிகளில் ஆலயக்கட்டுமானப்பணிகள் விரைவில் தொடங்கப்பட ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

## கட்சாந்தூர்:

### வசாவா அரவிந்த் குல்சிங் & எஜு

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் சேர்ந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கொர்பனா பகுதியில் வைத்து நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சியையும், ஜக்குதாரா மற்றும் தனக்தேவி கிராமங்களில் வைத்து நடைபெற்ற நாடக ஊழிய நிகழ்ச்சிகளையும், ரமலாபள்ளி, துர்லி, லக்ஷ்மிபூர் ஆகிய கிராமங்களில் வைத்து நடைபெற்ற இயேசு திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகளையும் கர்த்தர் வெகுவாக ஆசீர்வதித்துத் தந்துள்ளார். பாரி பகுதியில் நடைபெறும் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளில் நமது கோண்ட் இன விசுவாசிகள் தன்னார்வமாகச் செயல்படுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடப் போகும் லினிகுடா கிராம விசுவாசிகளின் நல் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ள வேதாகம வகுப்புக்குழுக்கள் யாவும் கிரமமாக இயங்க; தங்களது திருச்சபை ஆராதனைகளை எடுத்து நடத்த சபை மூப்பர்கள் யாவரும் உற்சாகமாய் முன்வர; நமது புதிய தொடர்பாளர்களின் ஆத்தும மீட்பிற்காக ஜெபிப்போம்.

## 28 ஜனவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜங்கோலுன் தௌதாங்
திருமதி. ஸ்டெஃபி பிஜு லால்
திரு. பாருத் பிரதாப் மாங்யா

### சுர்கானா:
### மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

**துதிக்க:** தொபல்பாடா கிராமத்திலிருந்து புதிதாக 16 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையை விசுவாசத்துடன் நுகரத் தொடங்கியுள்ளனர். பர்கந்தி என்ற கிராமத்தில் புதிதாக இயேசுவின் அன்பு சுவிசேஷ வார்த்தைகளால் பறை சாற்றப்பட்டுள்ளது. தேவல்தாரி கிராமத்தில் ஒரு புதிய திருச்சபை உருவாக்கப்பட்டுள்ளது. உம்பச்சபாடா கிராமத்தில் நடந்த குடும்பக் கூடுகையை அதில் பங்கு பெற்ற 45 நபர்களுக்கு தேவன் ஆசீர்வதித்துக் கொடுத் துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பூர்சந்த் கிராம நமது புதிய தொடர்பாளர்களான கோவிந்தா, ரமாபாய், கமலேஷ் ஆகியோரின் குடும்பங்கள் கிறிஸ்துவில் வளர; சுவிசேஷத்திற்குச் செவி மடுக்கின்ற ரஷியா கிராம மோத்திலால் கவித் மற்றும் அருண் கவித்தின் குடும்ப மக்களுடைய இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

### தர்ணி:
### டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத் தினால் சந்திக்கப்பட்டுள்ளன. சேக்லால் மற்றும் மனிஷாவை டெங்கு காய்ச்ச லிலிருந்தும், ஹரி கிராம ஹிராணியைக் கால்புண்களிலிருந்தும் தேவன் சுகப் படுத்தியுள்ளார். கோண்ட் இனத்தைச் சார்ந்த துராஜ் என்பவர் தனது பாவங்களை அறிக்கையிட்டு, கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். பேருந்து விபத்தினால் தனது கணவரை இழந்த மம்தாவிற்கு அதற்கேற்ற இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளும்படி தேவன் அநுக்கிரகம் பாராட்டியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின்மீது வாஞ்சை கொண்டுள்ள தரண்மாகு கிராம சோனா பாயின் இரட்சிப்பிற்காக; காசநோயிலிருந்து கோரிபாய் சுகம் பெற; குட்டுங்கா கிராம ராதா ஷியாம் தனது வாழ்க்கையில் சந்தித்து வரும் அநேக சவால்களை வெற்றியுடன் மேற்கொள்ள ஜெபிப்போம்.

## கர்நாடகா

### கோலார்: ஜோகன் மால்தோ

**துதிக்க:** ஜீப்குழு ஊழியம் மூலம் நமது விசுவாசிகள் தங்களது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும்கூட சுவிசேஷத்தை அறிவித்து, அவர்களை நமது ஆவிக்குரிய கூடுகைகளுக்கு அழைத்து வருகின்றனர். இங்கு நடத்தப்பட்ட ஆத்தும ஆதாயப்பயிற்சி நிகழ்ச்சியின் மூலம் நமது விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவை அறியாதவர்கள் மத்தியில் சென்று எவ்வாறு நற்செய்தி பணி செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள தேவன் உதவி செய்துள்ளார். கங்கட்டா சபையைச் சார்ந்த நமது விசுவாசி ஆபிரகாமிற்குச் சிறந்ததொரு வேலை கிடைக்கவும், நமது ஊழியங்களில் அவர் உற்சாகமாக ஈடுபடவும் தேவன் காட்டிவருகிற கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது கணவர் வீட்டாரோடு கருத்து வேறுபாட்டிலிருக்கும் ரீட்டாவின் குடும்ப வாழ்வில் தேவசமாதானம் தங்கியிருக்க; சுகவீனமாயிருக்கும் நக்னஹள்ளியைச் சார்ந்த நமது மூத்த விசுவாசிகளை அவர்களது சொந்த பிள்ளைகளும் உறவினர் களும் கருத்தாய் விசாரித்து பராமரிக்க; கங்கட்டா பகுதிக்கு நல்லதொரு சுதேச ஊழியர் கிடைக்க; கங்கட்டா மற்றும் பைர்கூர் பகுதிகளில் நமது ஊழியங்கள் நல்வளர்ச்சிப் பெற ஜெபிப்போம்.

## 29 ஜனவரி
சனி

### மாலூர்:
### கிஷாந்த் லிமா & பிரமிளா சிங்

**துதிக்க:** புதிதாக 15 கிராமங்களுக்குச் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. சுவிசேஷ ரத ஊழியத்தின் மூலம் ஏறத்தாழ 600 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொண்டுள்ளனர். நமது ஆலம்பாடி திருச்சபை விசுவாசிகள் திருச்சபைச் செயல்பாடுகளில் இணைந்து ஒன்றாகச் செயல்பட தேவன் காண்பிக்கின்ற அழகிய நன்மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கனமழையினால் அதிக பொருளாதார இழப்பைச் சந்தித்திருக்கும் நமது விசுவாசிகளுக்காக; ஜீப்குழு ஊழியத்தின் மூலம் சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் மக்களின் இரட்சிப்பிற்காக; சுவிசேஷத்தை ஆர்வமுடன் கேட்கும் ஒடிசாவிலிருந்து புலம் பெயர்ந்து வந்துள்ள நமது புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### வேமகல்:
### பால் சம்பத் & ராஜம் சம்பத்

**துதிக்க:** நமது ஆராதனைக்கு அநேக மக்கள் புதிதாக வருகை தருகின்றனர். சிறிய அளவிலான நமது ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகளை அதில் பங்குப்பெற்ற 15 நபர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக தேவன் மாற்றித் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக மழையினிமித்தம் தங்களது விவசாய அறுவடையில் பாதிப்படைந்திருக்கும் விவசாயிகளுக்காக; பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசி நடராஜ் மீண்டும் விசுவாசத்திற்குள் வரவும், தனது கல்லீரல் பிரச்சனையிலிருந்து அற்புத சுகம் பெறவும்; செட்டிஹள்ளி கிராம ஆதி நாராயணப்பா தனது தொலைந்து போன ஆடுகளை மீண்டும் கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

### ஸ்ரீனிவாசபுரா: ஹேனா சிங்

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. லக்ஷ்மி தேவியை இருதயக் கோளாறிலிருந்தும், சின்னவெங்கடம்மாவைப் புற்றுநோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்தியுள்ளார். 10 வருடங்களுக்கு முன்பு தான் இழந்த அரசாங்க உத்தியோகத்தை மீண்டும் பெற தேவன் நமது விசுவாசி வீரபத்ரப்பாவிற்குக் காட்டியுள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஸ்ரீனிவாசபுரா பகுதியில் நடைபெற்றுவரும் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் முடிவடைய; லக்ஷ்மியம்மாவின் குடும்பம் இரட்சிக்கப்பட; புட்டம்மாவைப் பக்கவாதத்திலிருந்தும், ஆர்த்தியைப் புற்றுநோயிலிருந்தும், கல்லூரி மாணவனான வினையை மனநிலைப் பாதிப்பிலிருந்தும் தேவன் சுகமாக்க ஜெபிப்போம்.

### உலகத்தால் இயலாதது!

*உத்தராகண்ட், தினேஷ்பூர் பணித்தளம். செய்திலிகன்ஜ் கிராம நமது புதிய விசுவாசி சாஹிப் திட்டா தனது மகன், மகள் மற்றும் 3 பேர் என தொடர்ச்சியாக அவரது குடும்பத்தில் மரணங்களைச் சந்தித்து வந்ததினால், தாங்கொணா துயரம் அவரை ஆட்கொண்டது. கிறிஸ்துவை அறியாத அவருடைய பக்கத்து வீட்டார் அனைவரும் அவர் கிறிஸ்துவைப் பின்பற்றுவதினால்தான் இவ்வாறு நேரிடுகிறது எனப் பகடி செய்தனர். எனவே, அவர் மனம் சலித்துப்போகாமலிருக்க நமது ஊழியர்களும் மற்ற விசுவாசிகளும் அவருடைய வீட்டில் வைத்து அடிக்கடி ஜெபக்கூட்டங்கள் நடத்தி அவர்களுக்காக விடாமல் ஜெபித்து வந்தனர். அதன் விளைவு, உலகம் கொடுக்கவும் எடுக்கவும் முடியாத கர்த்தரின் மாசமாதானம் அவர்கள் இல்லத்திலுள்ள அனைவரின் உள்ளங்களிலும் தங்கியது. கர்த்தருக்கே புகழ் உண்டாவதாக!*

**30 ஜனவரி**
ஞாயிறு

# தெலங்கானா

## அசிஃபாபாத்:

**வசாவா ரமேஷ்பாய் & சுனிதாபேன்**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. பர்தி இனமக்கள் கூட்டத்திலிருந்து ராஜு, கவிதா, மகேந்தர் ஆகியோர் புதிதாக நமது ஆராதனையில் வந்து கலந்துகொள்கின்றனர். பாகல்வாஹி கிராம லக்ஷ்மணின் குடும்பம் சுவிசேஷத்தின்மீது அக்கறை காட்டி வருகின்றனர். கீர்த்தனா மற்றும் பிரசன்னாவை நெடுநாட்களாக இருந்துவந்த வைரல் காய்ச்சலிலிருந்து தேவன் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சத்துருவின் மந்திரக் கட்டுகளினால் பெரும் அவதிக்குட்படும் பர்தி இனமக்களின் ஆத்தும மீட்பிற்காக; வாழ்வின் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி காடுகளுக்குள் வசித்துவரும் மஹாகாவ் கிராம மக்கள் சுவிசேஷத்தின் மூலம் மலர்ச்சிப்பெற்ற வாழ்வு பெற; ரிங்கார்டுகட், கிரதி, பிப்பர்காவ், மற்றும் கோதாரி பகுதிகளில் நடக்கவிருக்கும் நாடக ஊழிய நிகழ்ச்சிகள் யாவையும் கர்த்தர் ஆசீர்வதித்துத் தர ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

## குப்பம்:

**பால் குப்புசாமி & சைலா**

**துதிக்க:** புதிதாக ஒருநபர் கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். 5 இடங்களில் நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூடுகைகளை தேவன் ஆசீர்வதித்துத் தந்துள்ளார். நமது விசுவாசி சம்யுக்தாவிற்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளை தேவன் ஈவாக ஈந்துள்ளார். வறண்டுப்போயிருந்த குப்பம் பகுதியில் 4 வருடங்களுக்குப் பிறகு இவ்வருடம் தேவன் நல்ல மழையைக் கட்டளையிட்டுள்ளார். நமது ஊழியரின் பிள்ளைகளான பிரனித் மற்றும் பிரனிதாவை நெஞ்சுசளித் தொல்லையிலிருந்து தேவன் குணமாக்கியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் பாஸ்கர், பூலக்ஷ்மி, புருஷோத்தமன், கோவிந்தராஜ், பாக்கியலக்ஷ்மி மற்றும் சிலருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சிங்கா சமுத்திரத்திலுள்ள நமது புதிய திருச்சபை ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர; கன மழையினிமித்தமாக உடைந்து விழுந்துள்ள 50 அடி உயர ஆலயச்சுற்றுச்சுவர் மீண்டும் கட்டப்பட; காலமடுகு மற்றும் அக்ரஹாரம் பகுதிகளில் இருக்கின்ற ஆராதனைக்குழுக்கள் கிறிஸ்துவில் இன்னும் வளர; சிவன்னா, சின்னக்கா, லலிதாம்மா ஆகியோரது குடும்பங்கள் நமது ஆராதனைகளில் தவறாமல் வந்து பங்குப்பெற; நடந்துக்கொண்டிருக்கும் குப்பம் ஆலயக்கட்டிட சீரமைப்புப்பணிக்காக; வாய்ப்பேச இயலாமையிலிருந்து ரங்கீலாவையும், வயிற்று வலியிலிருந்து மஞ்சுளாவையும் மற்றும் காலெலும்பு முறிவிலிருந்து ஆபிரகாமையும் தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## 31 ஜனவரி
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஸ்ரீலதா ஸ்டீபன் ஜெயசீலன்
திரு. பிரதாப் ரஹாங்

# தமிழ்நாடு

## இளம்பிள்ளை:

### வில்சன் & ஜெயா

**துதிக்க:** இப்பணித்தளத்தில் நடந்து முடிந்த உபவாச ஜெபக்கூடுகையின் மூலம் நமது விசுவாசிகளில் 17 பேர் தங்களது ஆவிக்குரிய வாழ்வையும் அர்ப்பணிப்பையும் புதுப்பித்துக்கொள்ள தேவன் கிருபை செய்துள்ளார். பெரும் விபத்தினின்று தேவன் மோசஸின் குடும்பத்தைக் காப்பாற்றியுள்ளார். தாங்க முடியாத கால் மூட்டுவலியிலிருந்து தேவன் தெலிஷாவைச் சுகப்படுத்தியுள்ளார். நீலா மற்றும் ஜானகியைப் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் மீட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கிரா கரதாயி, நம்பியம்பட்டி மற்றும் வெள்ளாளர்புரம் பகுதிகளைச் சார்ந்த பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; தொலைந்துபோன வெண்ணிலாவின் நகைகள் மீண்டும் கிடைக்க; நமது இளம் விசுவாசிகளான நிர்மல், ஏஞ்சல், ஜோதி, கதிரேசன் ஆகியோருக்கு நல்ல வாழ்க்கை துணைகளமைய ஜெபிப்போம்.

## அஞ்செட்டி:

### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்தவ விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். புதூர் மற்றும் ஆர். எஸ். புரம் பகுதிகளில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்ப்புகளின் மத்தியிலும் நமது செக்கந்தஹள்ளி திருச்சபைத்தலைவர்கள் விசுவாசத்தில் உறுதியாக நிற்க தேவன் கிருபை தருகிறார். குணசனஹள்ளி மற்றும் செக்கந்தஹள்ளி பகுதிகளிலுள்ள நமது திருச்சபை ஆராதனைகளில் அநேக புதிய மக்கள் வந்து பங்குப்பெறுகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஞ்செட்டி, புதூர் மற்றும் ஆர். எஸ். புரம் பகுதிகளிலுள்ள நமது புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; தரணி புற்றுநோயிலிருந்து சுகமடைய; நமது புதிய தொடர்பாளர்களான ராஜா, வனிதா, ராம்தாஸ், நாக மாதப்பா, கோவிந்தராஜ், தாமரை, ராமதாஸ், குமாரி, ரங்கசாமி ஆகியோருடைய இரட்சிப்பிற்காக; குடிப்பழக்கத்திலிருந்து குமார் விடுபட ஜெபிப்போம்.

## மேச்சேரி:

### தர்மராஜ் R.R. & மரிய செல்வி

**துதிக்க:** சுவிசேஷ துண்டு கைப்பிரதிகளின் மூலம் அநேக மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் அநுக்கிரகம் பாராட்டியுள்ளார். சுகவீனமாயிருந்த நமது விசுவாசி துரைசாமியின் கால்நடைப் பிராணிகளுக்கு அவர் விசுவாசத்துடன் எண்ணெய்த் தடவி ஜெபித்தபோது, அவைகள் அற்புத சுகம் பெற தேவன் பாராட்டிய நன்மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்திலிருந்து பசுபதி விடுபட; நமது புதிய விசுவாசி சித்ராவின் கணவர் இரட்சிக்கப்பட; புற்றுநோயிலிருந்து சரஸ்வதி சுகம் பெற ஜெபிப்போம்.

## மிஷனெரி ஆல்பம் 371

தமிழ்நாடு, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் கிறிஸ்தவ பெற்றோரான திரு. சாம்ராஜ் & திருமதி. ஜாய்ஸ் லீலாபாயிற்குப் பிறந்த 4 பெண் பிள்ளைகளுக்கடுத்து அநேக வருட ஜெபங்களுக்குப் பதில் கிடைத்தாற்போல் 5- வது பிள்ளையாகச் சகோ. எபநேசர் G. சாம் 16.05.1979-ல் பிறந்தார். இவர் சிறிய குழந்தையாக இருந்தபோது, மிகவும் பெலவீனப்பட்டு ஆபத்தான நிலையிலிருந்தார். அப்பொழுது நமது பேட்ரிக் அண்ணன் இவருக்காக ஜெபித்தார்; இவருக்கு நல்ல சுகம் கிடைத்தது. பின்பு இவர் பள்ளிக்கல்வி பயின்று கொண்டிருக்கும்போது, ஒருமுறை குற்றாலத்தில் வைத்து நடைபெற்ற பாலியர் நேசன் முகாமில் பங்குப்பெற்று, அங்கே இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.

பின்பு இவர் நமது இயக்கம் நடத்தும் அநேக ஆவிக்குரிய முகாம்களில் கலந்துகொண்டு, கிறிஸ்துவில் மேலும் வளர ஆரம்பித்தார். சேலம், பெத்தேலில் வைத்து 1997-ல் நடந்த நமது இயக்க முகாமொன்றில் தேவ அழைப்பைப்பெற்று, இவர் தன்னை தேவப்பணிக்கென ஒப்புக்கொடுத்தார். பின்பு இவர் B.Com., பட்டப்படிப்பை முடித்துவிட்டு, 2003-ல் நமது புரசைவாக்கம் அலுவலகத்தில் ஓர் தன்னார்வ ஊழியராகப் பணி செய்ய இணைந்தார். இணைந்த குறுகிய நாட்களிலேயே இவரது தகப்பனார் அதிக சுகவீனமடைந்து, கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார். இவர் அவரது குடும்பத்தில் ஒரே மகனானபடியால், இவர் ஊழியத்தைத் தொடர அது இவருக்கு மிகத் தடையாக அமைந்தது. எனவே ஊழியத்தை விட்டுவிட்டு, தனது வீட்டிற்குத் திரும்பிப்போய், M.Com., பட்டப்படிப்பைப் படிக்கலானார். இதற்கிடையில் அநேக செய்திகளின் மூலமும், டாக்டர். ஐடா ஸ்கடர் அம்மையாரின் வாழ்க்கை சரிதையின் மூலமும், நமது சுவிசேஷ ரத ஒலி, ஒளி நிகழ்ச்சியின் வாயிலாகவும் தேவன் இவரோடு இடைப்பட்டார். எனவே, 2007-ல் மீண்டும் நமது பாளையங்கோட்டை அலுவலகத்தில் தன்னார்வ ஊழியராக இணைந்தார். அதே வருடத்தில் கோயம்புத்தூர், காருண்யாவில் வைத்து நடைபெற்ற நமது தமிழ்நாடு மாநில முகாமில் பிரத்தியேகமாக வட இந்திய ஊழிய அழைப்பைப் பெற்றார். "நான் மோசேயோடே இருந்ததுபோல உன்னோடும் இருப்பேன்" (யோசு.1:5) என்ற வசனத்தின் மூலம் தேவன் இவரை ஊக்கப்படுத்தினார். எனவே, 2007- லேயே இவர் நமது இயக்கத்தில் முழுநேர ஊழியராக இணைந்தார்.

சகோதரி. ஏஞ்சலின் ஜெபராணி ஜெசிந்தா, இராமநாதபுர மாவட்டத்தில் கிறிஸ்தவ பெற்றோரான திரு. புஷ்பராஜ் & திருமதி. எஸ்தர் ராணி ஆகியோருக்கு 2-வது மகளாக 01.08.1980-ல் பிறந்தார். இவரை இவருடைய தாயார் தனது கருவில் சுமக்கும்போது கர்த்தரிடம்,"எனக்கு ஆண் மகவு கிடைத்தால், அவனை நான் உமது பணிக்கென ஒப்புக்கொடுப்பேன்" எனப் பொருத்தனை செய்தார். ஆனால், பெண் பிள்ளை பிறக்கவே, இவரது தாயார் அந்தப் பொருத்தனையை மறந்துப்போனார். ஆனால், தேவன் அதை மறக்கவில்லை. எரே.1:5-ன்படி தேவன் இவரைத் தமக்கென தெரிந்து கொண்டதினால், இவர் தனது பள்ளிப்பருவத்தில் கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இவர் தனது சிறுவயதிலிருந்தே ஜெபத்தின்மீது வாஞ்சை கொண்டவராகச் சிறுவர் ஞாயிறு பள்ளி, வாலிபர் ஐக்கியக்குழு, கிராம ஊழியம் என சென்னை, ஆதம்பாக்கம் தென்னிந்திய திருச்சபையோடு இணைந்து ஈடுபட்டார். பின்பு இவர் தனது உயர்நிலைப்பள்ளி கல்விப் பயிலும்போது, ஆதம்பாக்கத்தில் வைத்து நடைபெற்ற நமது இயக்கக்கூடுகையில் திரு. ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணன் கொடுத்த தேவசெய்தியின் மூலம் ஊழிய அழைப்பைப் பெற்றார். ஆயினும் பல செய்திகள், தீர்க்கதரிசனங்கள் மற்றும் தரிசனங்கள் மூலம் அதை உறுதிப்படுத்திக்கொண்டார். இவர் B.Sc., வேதியியலில் தனது கல்லூரி பட்டப்படிப்பை முடித்தார். அதன்பின் 1999-ல் கோயம்புத்தூர், காருண்யாவில் வைத்து நடைபெற்ற நமது தமிழ்நாடு மாநில முகாமில் வட இந்திய ஊழியத்திற்கான தேவ அழைப்பைப் பெற்று, முழுநேர ஊழியத்திற்கென தன்னை அர்ப்பணித்தார். பின்பு 2002-ல் உத்தரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களுக்கு நமது இயக்கத்தின் மூலம் பணித்தள விஜயம் செய்யும் சிலாக்கியம் பெற்றார். பின்பு இவர் தகவல் தொழில் நுட்பத்தில் M.Sc., பட்டப்படிப்பை நிறைவு செய்து, சென்னையில் ஒரு கம்பெனியில் மூத்த மென்பொருள் பொறியாளராகச் சில வருடங்கள் பணியாற்றி வந்தார். பின்பு 2007-ல் முழுநேர ஊழியராக நமது இயக்கத்தில் வந்து இணைந்தார்.

சகோ. எபநேசர் G. சாம் & சகோதரி. ஜெபராணி ஆகியோர் தேவ சித்தப்படி 12.05.2008-ல் திருமண பந்தத்தில் இணைந்தனர். பின்பு குடும்பமாகச் சென்னை நமது தலைமைச்செயலகத்தில் சில வருடங்கள் பணிபுரிந்தனர். பின்னர் 2013-லிருந்து உத்தரப்பிரதேசத் திலுள்ள பர்த்தனா, காட்டம்பூர், ரணியா ஆகிய பணித் தளங்களிலும், தற்போது அதே மாநிலத்தில் ஃப்ருக்கா பாத் மாவட்டத்திலுள்ள கைம்கன்ஜ் பணித்தளத்தில் பணிபுரிந்து வருகின்றனர். மழலை செல்வ ஆசீர்வாதத் திற்காகக் காத்திருக்கின்றனர். இம்மிஷனெரித் தம்பதியரை நமது அனுதின ஜெபங்களில் தாங்குவோம்.



**திரு. எபநேசர் G. சாம் & திருமதி. ஜெபராணி குடும்பம்**

# நிதி அலுவலகத்திலிருந்து

**Online Banking**

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:**
காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**
it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***